तत्रत्यानन्दकोशे विरचितनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ७६

76. அவரது ஆலயம் ஐந்து வீதிகளாலும், ஒவ்வொருதிக்கிலும் ஒன்ருக நான்கு கோபுரங்களாலும், (அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஜ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற) ஐந்து பிரம்ஹகோசங்களின் நிலையிலுள்ள (ராஜஸபை, தேவஸபை, ந்ருத்தன ஸபை, கனகஸபை, சித்ஸபை என்ற) ஐந்து ஸபைகளாலும் புண்ய தீர்த்தங்களாலும் ஸ்ரீமூலநாதர், அம்பிகை, விஷ்ணு, விநாயகர், ஸ்கந்தர் இவர்களது ஆலயங்களாலும் விளங்குகிறது. ஆனந்த மயகோசத்தில் நடனம் புரிகிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

गङ्गातीरस्य पश्चाद्विलसति सदने सच्चिदानन्दरूपा
देवी या सर्वविद्यालयमुखकमला भासते वेदहस्ता ।
या यस्य ज्ञानशक्तिश्शिवपदसहिता कामसुन्दर्यभिख्या
तद्देव्या दृष्टनृत्तं श्रुतिनिहितपदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ७७

77. சிவகங்கைக்கு மேற்கே உள்ள ஆலயத்தில் ஸச்சிதானந்த வடிவினளாக, எல்லா வித்யைகளுக்கும் பிறப்பிடமான முகத்தாமரை உள்ளவளாக நான்கு கைகளுடன் சிவகாமஸுந்தரி என்ற பெயருடன் அவரது ஜ்ஞான சக்தியாக விளங்குகிருள். அந்த தேவி நடனத்தைக் கண்டுகளிக்க, வேதம் தாங்கிய திருவடி கொண்ட குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

ब्रह्मैवाखण्डमेतन्नटनपतितनुं प्राप्य वक्त्रात् द्विजेन्द्रान्
बाहुभ्यः क्षत्रवर्गान् सकलपशुततेः पालनायोरुयुग्मात्।
वैश्यान्पद्भ्यां च शूद्रानविकलमसृजल्लीलया देवराड्यः
तं देवं चित्सभेशं श्रुतिविनुतकथं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ७८

78. துண்டாட இயலாத பிரும்மமே வடிவெடுத்து, முகத்திலிருந்து அந்தணர்களையும் கைகளிலிருந்து க்ஷத்திரிய இனங்களையும் கால் நடைப் பாதுகாப்பிற்காகத் தொடையிலிருந்து வைச்யர்களையும், திருவடிகளிலிருந்து சூத்திரர்களையும் குறைபாடின்றி விளையாட்டாகப் படைத்தது. தேவரும் சித்ஸபாநாதரும் வேதம் துதித்த வரலாறு கொண்டவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

स्वस्यां श्रीचित्सभायां नटनमतिमुदा कर्तुमुद्युक्तवान् यो
देवेन्द्रे वेणुहस्ते मुरजकरयुगे श्रीपतौ तालहस्ते।
ब्रह्मण्यानन्दभाजो जिमिनसुतफणिव्याघ्रपादास्तदानीं
जातास्तं ब्रह्मरूपं सगुणमतिगुणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ७९

79. அவர் சித்ஸபையில் நடனமாட மகிழ்ச்சியுடன் முற்பட்டார். இந்திரன் புல்லாங்குழல் ஊத, விஷ்ணு முரசுகொட்ட, பிரும்மா தாளம் போட, ஜைமினி, பதஞ்ஜலி, வியாக்ரபாதர் இவர்கள் கண்டானந்தம் பெற்றார்கள். அந்த பிரும்ம ஸ்வரூபியும் குணத்திற்கப்பாற்பட்டவராயினும் குணமுள்ள நிலையடைந்தவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

विष्णोर्मञ्चः कदाचिच्छरवदनयुतश्रीपतञ्जल्यभिख्यः
चात्रेः पुत्रत्वमाप्त्वा शिवपणनजयोस्सूत्रभङ्गीं समीक्ष्य।
शम्भोर्यस्य प्रसादादरचयदतुलं श्रीमहाभाष्यसंज्ञं
ग्रन्थं यत्क्षेत्रराजे तमलिकनयनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ८०

80. விஷ்ணுவின் படுக்கையான ஐந்து முகமுள்ள ஆதிசேஷன், அத்திரியின் புதல்வனாக பதஞ்ஜலி என்ற

பெயருடன், சிவனது அருளால் சிவனும் பாணினியும் தொகுத்த ஸூத்ரங்களின் வரிசையை ஆராய்ந்து ஸ்ரீமஹாபாஷ்யம் என்ற ஒப்பற்ற நூலை இந்த க்ஷேத்திரத்தில் இயற்றினார். நெற்றிக்கண்ணுடைய அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

पञ्चाशद्वर्णयुक्तैर्मनुभिरभिमतं काङ्क्षिणां देहभाजां
स्वक्षेत्राभिख्यमन्त्रैरपि विततमहापञ्च पञ्चप्रयोगैः ।
युक्तैर्गायत्रिसंख्यैर्ध्वनिमनुभिरथाभीष्टसिद्धिप्रदो यः
तं तत्वातीतमाद्यं कनककवचिनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ८१

81. விரும்புவதைப் பெற விழைகிற மாந்தருக்காக 50 எழுத்துக்களுடன் கூடிய மந்திரங்களையும் தன்க்ஷேத்திரப் பெயர் கொண்ட மந்திரங்களையும் விரிவான 25 பிரயோகமுறை கொண்ட 24 எழுத்து கொண்ட துவனி மந்திரங்களையும் காட்டி, ஜபிப்பவருக்கு விரும்பியதைத் தருகிறார். 96 தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட ஆதியான தங்கக்கவசம் பூண்ட குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यस्य स्वान्ताम्बुजातादुडुपतिरुदभूच्चक्षुषश्चण्डरश्मिः
वक्त्राम्भोजाच्च वह्निर्दिविषदधिपतिः प्राणतो गन्धवाहः ।
यन्नाभेरन्तरिक्षं चरणसरसिजात्कुम्भिनी द्यौश्च शीर्ष्णः
काष्ठाश्च श्रोत्रयुग्मात्तमपि परशिवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ८२

82. அவரது மனத்திலிருந்து சந்திரனும், கண்ணிலிருந்து ஸூர்யனும் தாமரை போன்ற வாயிலிருந்து அக்னியும், இந்திரனும், பிராணவாயுவிலிருந்து வாயுவும், தொப்புளிலிருந்து நடுவானமும், தாமரை போன்ற திருவடிகளிலிருந்து பூமியும் தலையிலிருந்து ஸ்வர்க்கமும், காதுகளிலிருந்து திசைகளும் உண்டாயின. அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

विद्यां वामेक्षणेन्दोः श्रियमपि कलयन् दक्षनेत्राब्जबन्धोः
फालेक्षाचित्रभानोः सकलजनिमतां पापतूलं च दग्ध्वा।
स्वस्याङ्घ्र्यालोकमात्रादुपनिषदुदितब्रह्मबोधं प्रयच्छन्
यस्सर्वान्रक्षतीशस्तमुडुपतिधरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ८३

83. சந்திரனாகிய இடது கண்ணிலிருந்து வித்யையையும், சூர்யனாகிற வலது கண்ணிலிருந்து செல்வத்தையும் தந்து அக்னியாகிற நெற்றிக்கண்ணால் உயிரினமனைத்தின் பாபத்தையும் பொசுக்கி, தன் திருவடி தர்சனத்தாலேயே உபனிஷத் அறிவிக்கிற பிரும்ஹஜ்ஞானத்தையும் தந்து உலகைக்காக்கிறார். சந்திரனைத் தாங்குகிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कैलासे भोगपुर्यां सकलजनिमतां हेतुरास्ते शिवो यः
सर्वक्षेत्रेषु गूढो विलसति सततं स्वांशसादाख्यरूपः।
सोऽप्येवांशी धरण्या हृदयसरसिजे चित्सभान्तस्थभित्तौ
कुर्वन्नृत्तं मुदाऽण्डानवति तमनघं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ८४

84. கைலாஸத்திலும் பாதாளத்திலும் உயிரினத்தின் மூலகாரணமான உள்ள சிவனே, எல்லா க்ஷேத்திரங்களிலும் மறைந்தவராக தன் அம்சமான ஸதாசிவ உருவில் விளங்குகிறார். அதே சிவன், பூமியின் இதயத்தாமரையாகிய சித்ஸபையின் உட்சுவற்றில் ஆனந்தத்துடன் நடனமாடுகிறார். பிரும்மாண்டங்களைக்காக்கிறார். அந்தத்தூயவரான குஞ்சிதாபாதரை வழிபடுகிறேன்.

यद्भासा भाति नित्यं सकलमपि जगत्तत्परं ज्योतिरेव
वैराजे हृत्सरोजे कनकसदसि वै साम्बनृत्तेशमूर्तिः।
भूत्वा नृत्तं करोति प्रभुरपि जगतां रक्षणे जागरूकः
तं देवं चित्सभेशं विधृतसुमसृणिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ८५

85. அவர் பேரொளி. அவரது ஒளியால் உலகம் எப்போதும் புலப்படுகிறது. விராட்புருஷனின் இதயத்தாமரையிலும் கனகஸபையிலும் தேவியுடன் நடராஜராகி நடனமாடுகிறார். உலகைக் காப்பதில் விழித்தவராக வல்லவராக உள்ளார். பூமாலை தாங்கிய சித்ஸபாநாதரான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

आत्मैव श्रीनटेशो धरणिरविजलान्यग्निवायू विहाय -
श्चन्द्रो यज्वा च भूत्वाऽवति जगदखिलं पञ्चविंशेशभिन्नः ।
तत्वातीतो महेशोऽप्युरुरणुरखिलाभ्यन्तरे राजते यः
तं सोमं सोममित्रं सुमुखगुहसुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ८६

86. பரமாத்மாவான ஸ்ரீ நடராஜர், பூமி, ஸூரியன், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திரன், தீக்ஷிதர் என்றுகி உலகனைத்தையும் காக்கிறார். 25வது தத்வமான ஈசுவரனிடமிருந்து வேறுபட்டவர். தத்வங்களுக்கு அப்பாற்பட்டவர். பேராண்டவராயினும் அணுவானவர். எல்லோர் உள்ளத்திலும் விளங்குபவர். உமையுடன் கூடியவரும் குபேரனின் நண்பரும், விநாயகரையும் கந்தரையும் பெற்றவருமான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यद्ब्रह्मोच्छ्वासरूपा श्रुतिरपि सकला तत्समाना स्मृतिश्च
कल्पा गाथाः पुराणं विविधमनुवरास्सेतिहासाश्च विधाः ।
सर्वत्राद्यापि भान्ति स्वयमपि कृपया यत्सभायां नटेशो
भूत्वा लोकान्समस्तानवति तमसमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ८७

87. எல்லா வேதங்களும் பிரும்மத்தின் மூச்சானவை. வேதத்திற்கு ஒப்பான ஸ்மிருதி, கல்பங்கள், காதைகள், புராணங்கள், பலவகைப்பட்ட மந்திரங்கள், இதிஹாஸங்கள், அனைத்து வித்யைகள், இவை எங்கும் இன்றும் அவரது கிருபையால் விளங்குகின்றன. அவர் நடேசராக ஸபையில் நடனமாடி உலகைக்காக்கிறார். ஈடற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

वेदान्ते वाक्यरूपा उपनिषद इमा ब्रह्मसामीप्यभाजः
तासां मुख्या दश स्युर्यतिविरचितमहाभाष्ययुक्ता महत्यः ।
स्तम्भाकाराः स्तुवन्ति स्वविदितनटनं सर्वदा ब्रह्मरूपं
तं देवं चित्सभेशं परमतिमहसं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ८८

88. வேதத்தின் இறுதியில் இந்த உபநிஷத்துகள் பிரும்மத்தின் அருகாமையையடைந்தவை. அவற்றில் முக்கியமானவை பத்து. ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் பாஷ்ய உரை பெற்றவை. அவை தாம் உணர்ந்த நடனத்தை ஸ்தம்ப வடிவில் நின்று துதிக்கின்றன. பிரும்மநிலையிலுள்ளவரும் தேவரும் எல்லாவற்றிற்கும் மேலானவரும், பேரொளி கொண்டவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

शाब्दे शास्त्रे फणीन्द्रैः प्रमिति फणितिषु श्रीकणादाक्षपादैः
वेदान्ते व्यासरूपैर्जैमिनिसुतकृतौ भट्टकौमारतुल्यैः ।
कल्पे बोधायनैस्तैश्श्रुतिषु विधिसमैः पूज्यते यो मुनीन्द्रैः
त्रैसाहस्रैस्सभायां तमपि गुरुवरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ८९

89. வியாகரணத்தில் பதஞ்சலியுடனும் பிரமாணசாஸ்திரத்தில் (நியாயத்தில்) கணாதருடனும், அக்ஷபாதருடனும், வேதாந்தத்தில் வியாஸருடனும், ஜைமினியின் சாஸ்திரமான மீமாம்ஸையில் குமாரிலபட்டருடனும், கல்பத்தில் போதாயனருடனும் வேதங்களில் பிரும்மாவுடனும் ஒப்பிடக் கூடிய மூவாயிரம் முனிவர்களால் அவர் வழிபடப்பெறுகிறார். அந்த சிறந்த குருவான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कञ्जाक्ष्या स्वस्य शक्त्या सहकृतनटनं कस्य शीर्षच्छिदं तं
कालं कामं पुराणि स्वपदसरसिजात्फालनेत्रात्स्मिताच्च ।
हत्वा ब्रह्मर्षिसूनुं सकलदिविषदश्चापि रक्षन्तमीशं
देवेड्यं चित्सभेशं दशशतवदनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ९०

90. தாமரை போன்ற கண்ணுடைய தன் சக்தியுடன் கூட நடனம் புரிபவர், பிரும்மாவின் தலையைக் கொய்தவர், யமனையும் மன்மதனையும் முப்புரங்களையும் தனது தாமரைபோன்ற திருவடி, நெற்றிக்கண் மற்றும் புன்சிரிப்பால் அழித்து, மாமுனிவரின் புதல்வரான மார்கண்டேயரையும் எல்லா தேவர்களையும் காத்தவர், ஈசன். தேவர்களால் துதிக்கத்தக்கவர், சித்ஸபாநாதர், ஆயிரம் முகமுள்ளவர், அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यल्लिङ्गे ब्रह्मविष्णुप्रमुखसुरवरा भस्मरुद्राक्षभाजः
सस्त्रीकास्साम्बमूर्तिं सकलतनुभृतां सर्वदं सर्वरूपम् ।
अभ्यर्च्यास्वेष्टसिद्धिं दिवि भुवि सकलैस्सेव्यमाना बभूवुः
तं देवं चित्सभेशं विधिहुतहविषं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ९१

91. பிரும்மா, விஷ்ணு முதலிய சிறந்த தேவர்கள் விபூதியும் ருத்ராக்ஷமும் தரித்துத்தம் தேவியருடன் எல்லா உயிரினத்திற்கும் எல்லாவற்றையும் தருபவரும் எல்லாமானவருமான அம்பிகையுடன் உள்ள ஈசனை லிங்கத்தில் வழிபட்டு, விரும்பியதைப் பெற்று பூமியிலும் வானிலும் எல்லோராலும் வழிபடப்பெற்றவராயினர். அந்த தேவர் சித்ஸபாநாதர் முறைப்படி ஹோமம் செய்ததை ஏற்பவர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

श्रद्धावन्तः श्रुतिज्ञाः परशिवकृपयाऽधीतशास्त्रादिविद्याः
व्यर्थां वाचं त्यजन्तः प्रतिदिनमसकृत्पूजयन्तः प्रभुं यम् ।
कुर्वन्तः श्रौतकर्माण्यनितरसुलभान्यात्मबोधं लभन्ते
विप्रेन्द्राः स्वांशभूताः परशुमृगधरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ९२

92. பரமேசுவரரின் அம்சமாகத் தோன்றிய சிறந்த அந்தணர்கள் சிரத்தை மிக்கவராக, வேதமறிந்தவராக, பரமசிவனின் கிருபையால் சாஸ்திரங்களையும் மற்ற வித்யைகளையும் கற்றவர்களாக, வீண்பேச்சு பேசாதவராக, தினந்தோறும் அடிக்கடி பிரபுவை பூஜை செய்கின்றனர்.

பிறரால் எளிதாகச் செய்ய முடியாத வேதத்தில் விதித்த சடங்குகளைப் புரிந்து ஆத்மஜ்ஞானம் பெறுகிறார்கள். கோடரியும் மானும் ஏந்திய அந்த குஞ்சிபாதரை வழிபடுகிறேன்.

फाले भस्मत्रिपुण्ड्रं फणिनमपि गले पादपीठे च भूतं
बाह्वोर्वह्निं च ढक्कां वदनसरसिजे सूर्यचन्द्रौ शिखीन्द्रम् ।
ओङ्काराख्यप्रभायां सुरभुवनगणं पार्श्वयोर्वाद्यकारौ
यः कृत्वाऽऽनन्दनृत्तं स्वसदसि कुरुते कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ९३

93. நெற்றியில் விபூதிமுப்பட்டை, கழுத்தில் பாம்பு, காலினடியில் பூதம், கைகளில் நெருப்பும் உடுக்கையும், முகத்தில் ஸூர்யனும் சந்திரனும் அக்னியும், ஓங்காரத்திருவாசியில் தேவருலகங்கள், இருபுறத்திலும் (பானுகோபனும் பாணனும்) வாத்யம் வாசிப்பவர்கள். இப்படி அமைத்து தன்ஸபையில் ஆனந்த நடனம் புரிகிற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सर्वेषां प्राणिनां यस्स्वपदसरसिजं पूजितुं पाणियुग्मं
स्वं द्रष्टुं लोचने द्वे स्वचरितमखिलं वक्तुमीशस्सुवाचम् ।
स्वस्य प्रादक्षिणार्थं चरणयुगमपि ध्यानयोगाय चित्तं
दत्वा रक्षत्यजस्रं तमुदकमकुटं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ९४

94. அனைத்து உயிரினத்திற்கும் தன் திருவடித்தாமரைகளை வழிபட இருகைகளையும் தன்னைக் காணக் கண்களையும், தன் சரிதமனைத்தும் சொல்ல வாயும், தன்னை வலம்வர இரு கால்களையும் தியானத்தில் திளைக்க சித்தத்தையும் தந்து எப்போதும் காக்கிறார். (கங்கை) நீரைச்சுமக்கும் கிரீட முடைய அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

नाहं कर्ता च भोक्ता , न च मम सुकरं दुष्करं कर्म किञ्चित्
धर्माधर्मौ च, दुःखं सुखमपि, करणं नैव मत्तः परोऽन्यः ।

सोऽहं ब्रह्मास्मि नित्यो, नहि जनिमरणे, निर्वृतोऽहं सदेति
स्वान्ते पश्यन्ति बोधाद्यमपि यतिवराः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥

95. நான் எதனையும் செய்பவனல்ல, அனுபவிப்பவனுமல்ல. எந்தப் பணியும் என்னால் எளிதில் செய்யத் தக்கதோ செய்ய இயலாததோ அல்ல. தர்மமும் அதர்மமுமில்லை. ஸுகமும் துக்கமுமில்லை. என்னைக் காட்டிலும் வேறுபட்டவன் எவருமில்லை. அந்த நானே பிரும்மாக உள்ளேன். நித்தியன், எனக்குப் பிறப்புமில்லை, இறப்புமில்லை. எப்போதும் அமைதியுடனுள்ளேன். இவ்வாறமைந்த உணர்வால், தன் உள்ளத்தில் அவரைச் சிறந்த துறவிகள் காண்கின்றனர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

गङ्गापाथो वहन्तं गजवदननुतं गन्धवाहस्वरूपं
गायत्रीवल्लभाख्यं नगपतितनुजास्वीकृतार्धाङ्गमीशम् ।
गोविन्दान्वेषिताङ्घ्रिं गुरुवरवपुषं गोपतेः पृष्ठवासं
गौरीनाथं गुणीड्यं गिरिवरवसतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ९६

96. கங்கையைத் தரித்திருப்பவர், விநாயகரால் துதிக்கப் பெற்றவர், வாயுவின் வடிவில் உள்ளவர், காயத்திரியின் அன்பிற்கு உரியவர். மலைமகளால் தன்னில் பாதியைத் தனதாக ஆக்கிக்கொள்ளப்பெற்றவர், ஈசன், கோவிந்தனால் தேடப்பட்ட திருவடியுள்ளவர். சிறந்த குருவடிவினர், விருஷபத்தின் முதுகில் அமர்ந்தவர், கௌரியின் கணவர், சிறந்த குணமுள்ளவரால் துதிக்கத்தக்கவர், சிறந்த மலையில் வசிப்பவர், இந்த குஞ்சி பாதரை வழிபடுகிறேன்.

पद्माकारासनस्थं परमसुररिपुं पञ्चवक्त्रारविन्दं
पाण्डोः पुत्रार्चिताङ्घ्रिं पविधरविनुतं पार्वतीप्रेमपात्रम् ।
पक्षीशं पीतरूपं परशुमुखधरं पञ्चवक्त्रारिमाद्यं
नृत्यन्तं चित्सभायां निटिलपरदृशं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ९७

97. பத்மாஸனத்தில் அமர்ந்தவர், அஸுரருக்குப் பெரும் எதிரி, ஐந்து தாமரை போன்ற முகம் கொண்டவர், பாண்டுவின் புத்திரர்களால் வழிபடப்பெற்ற திருவடி கொண்டவர். பார்வதியின் அன்புக்குரியவர், பசுக்களின் தலைவர், வெண் சிகப்பு நிறமுள்ளவர், கோடரி முதலிய ஆயுதம் ஏந்தியவர். நரஸிம்ஹரை எதிர்த்த சரபர், ஆதியாயுள்ளவர், சித்ஸபையில் நடனமாடுபவர், நெற்றிக்கண்ணுள்ளவர், இந்த குஞ்சித பாதரை வழிபடுகிறேன்.

भीमस्वान्तार्चिताङ्घ्रिं भुजगवरधरं भोगमोक्षैकहेतुं
भक्तानां रक्षितारं भवभयजलधेस्तारकं भासमानम्।
भूषाभिर्भर्गमीशं भिषजमुपनिषद्वेदिनं भूतनाथं
ब्रह्मानन्दस्वरूपं भवमखिलतनुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ९८

98. பீமசேனனால் உள்ளத்தில் வழிபடப்பெற்ற திருவடி உள்ளவர், அழகிய பாம்பை அணிந்தவர், போகத்திற்கும் முக்திக்கும் காரணமானவர், பக்தர்களைக் காப்பவர், ஸம்ஸாரக்கடலைக் கடக்கச்செய்பவர், ஆபரணங்களால் ஒளிர்பவர், ஒளிமயமானவர், ஈசன், வைத்யர், உபநிஷத்தால் உணரத்தக்கவர், பூதங்களின் தலைவர், பிரும்ஹானந்தவடிவினர், உலகைத் தோன்றச் செய்தவர். எல்லாமானவர், அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

शाटीपालाखिलाशापतिमुखविनुतं शङ्खपाण्यर्चिताङ्घ्रिं
शम्भुं शर्वं शिवेशं शशधरमकुटं शाकरेन्द्रे वसन्तम्।
शोणाद्रीशं शुभाङ्गं शुककरशिवयाऽऽलिङ्गितं श्रौतगम्यं
नृत्यन्तं स्वर्णसंसद्यखिलनतपदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ९९

99. தனது ஆடையாகிய திசைகளைக் காக்கிற திக்பாலர் முதலான தேவரால் துதிக்கப்பெற்றவர், சங்கமேந்திய விஷ்ணுவால் வழிபடப் பெற்ற திருவடியுள்ளவர், மங்களத்தின் தோற்றுவாய்; உலகைச் சிதைப்பவர், சிவையின்

ஈசர், மகுடத்தில் சந்திரனைக் கொண்டவர், விருஷபத்தின் மீதமர்ந்தவர், திருவருணமலையின் ஈசன், மங்கள வடிவினன், கிளியேந்திய சிவையால் தழுவப் பெற்றவர், வேதவழியால் உணரத்தக்கவர், கனகஸபையில் நடனமாடுபவர், எல்லோராலும் திருவடிகளில் வணங்கப் பெற்றவர் அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

काञ्चयां पृथ्वीशलिङ्गं जनिम जलमयं जम्बुकेशेऽस्ति नित्यं
शोणाद्रौ वह्निलिङ्गं वनचरपतिना पूजितं कालहस्तौ।
वाय्वीशं तिल्ववन्यां त्रिशिखरमकुटे संस्थमाकाशलिङ्गं
यल्लिङ्गं सर्वमेतत्तमपि नटपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १००

100. காஞ்சியில் பூமிலிங்கம், ஜம்புகேசுவரத்தில் அப்புலிங்கம், அண்ணுமலையில் அக்னிலிங்கம், காளஹஸ்தியில் சிறந்த வேடனால் வழிபடப்பெற்ற வாயுலிங்கம், தில்லைக்காட்டில் திரிகூட மலையின் முடியில் ஆகாசலிங்கம். இப்படி எல்லாமான நடராஜரான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यस्मात्सर्वं चरं चाचरमपि समुत्पन्नमादौ जगत्तत्
येनेदं रक्षितञ्च प्रविलयसमये लीयते यत्र सर्वम्।
तं देवं चित्सभायां अनवरतनटं ब्रह्मविष्ण्वादिपार्श्वं
तेजोरूपं त्रिकूटस्थितिजुषममलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १०१

101. முதன் முதலாக அவரிடமிருந்தே அசைவதும் அசையாததுமான உலகம் தோன்றிற்று. அவரால் காப்பாற்றப்பட்டது. பிரளய நேரத்தில் அவரிடமே ஒடுங்குகிறது. அதே தேவர் சித்ஸபையில் இடையறாது நடனமாடுபவர், பிரும்மா விஷ்ணு முதலானவரைப்பக்கத்தில் கொண்டவர். ஒளிவடிவினர், திரிகூடமலையில் வசிப்பவர், அப்பழுக்கற்றவர், அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सृष्ट्यै ब्रह्माणमादौ हरिमथ जगतां रक्षणायात्मरूपः
संहृत्यै रुद्रमूर्तिं त्वथ निखिलतिरोधानहेतोर्महेशम् ।
तल्लोकानुग्रहार्थं हिमगिरितनयासक्तसादाख्यमूर्तिं
यस्सृष्ट्वाऽऽनन्दनृत्तं सदसि वितनुते कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १०२

102. பரமாத்மா முதலில் படைப்பதற்காகப் பிரும்மாவையும் உலகைக் காக்க ஹரியையும் ஒடுக்க ருத்ரரையும் உலகை உருமறைக்க ஈச்வரனையும், அருள்புரிய மலைமகளிடம் அன்பு கொண்ட ஸதாசிவரையும் படைத்து ஸபையில் ஆனந்தநடனம் புரிகிறார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

त्र्यक्षं त्रैलोक्यवासं त्रिपुरविजयिनं त्रैगुणातीतरूपं
त्रेताग्निष्वग्निमूर्तिं त्रिशिखरिशिखरे राजमानं त्रिशक्तिम् ।
त्रैसाहस्रद्विजार्च्यं तिसृभिरपि सदा मूर्तिभिर्दृष्टनृत्तं
त्रैविद्यं चित्सभेशं निगममयतनुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १०३

103. மூன்று கண்கள் கொண்டவர். முப்புரம் வென்றவர், முக்குணங்களைக் கடந்தவர், (வேள்விக் கூடத்தில் உள்ள) மூன்று அக்னி குண்டங்களிலும் அக்கினியாயிருப்பவர், திரிகூடமலை முடியில் விளங்குபவர், இச்சா, ஜ்ஞானா, கிரியா என்ற மூன்று சக்திகள் உள்ளவர், மூவாயிர அந்தணர்களால் வழிபடப் பெற்றவர், மும்மூர்த்திகளாலும் காணப்பெற்ற நடனமுள்ளவர், மூன்று வேதங்களில் உள்ளவர், சித்ஸபாநாதர், வேதவடிவினர், இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

धर्मं दत्वा जनानां डमरुकनिनदैरर्थमप्यग्निना यः
कामं दत्वाऽभयेन स्वपदसरसिजान्मोक्षरूपं पुमर्थम् ।
दत्वा लोकान् समस्तानवति नटपतिः नायकश्चित्सभायाः
तं देवं नृत्तमूर्तिं विसदृशचरितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १०४

104. இவர் தன் உடுக்கை ஒலியால் தர்மத்தைப் போதித்தும் நெருப்பால் செல்வத்தையும், பயமின்மை காட்டுவதால்

காமத்தையும், தன் தாமரைத் திருவடிகளால் முக்தியையும் அளித்து, உலகமனைத்தையும் காக்கிறார். நடனமாடுபவரின் தலைவர், சித்ஸபா நாதர், நடனமே உருவானவர். ஒன்றோடும் இணையாத நடைமுறை கொண்டவர், இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

अन्धःकोशे विधाता गरुडवररथः प्राणकोशे च रुद्रः
चेतःकोशे महेशस्तदनु च वरविज्ञानकोशे सदाख्यः ।
आनन्दाभिख्य कोशे लसति च सततं यस्य शम्भोर्निदेशात्
तं देवं राजराजेश्वरवरसुहृदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १०५

105. இந்த சம்புவின் உத்தரவால் அன்னமய கோசத்தில் பிரும்மாவும், ப்ராணகோசத்தில் கருடவாஹனரான விஷ்ணுவும், மனோமய கோசத்தில் ருத்ரரும், அதனைத் தொடர்ந்த விஜ்ஞானமய கோசத்தில் ஈசுவரரும், ஆனந்தமய கோசத்தில் ஸதாசிவரும் விளங்குகின்றனர். குபேரனின் தோழரான அந்த தேவன் குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

धृत्वा यः सर्वदेशः पदजलजमुखे श्रेष्ठमुक्तालिमङ्गे
सौवर्णं कञ्चुकञ्च प्रथितमणिचितं भूषणं दिव्यवस्त्रम् ।
नृत्तं कृत्वाऽऽगतानां सकलतनुभृतां धर्ममुख्यान्पुमर्थान्
दत्वा रक्षत्यनादिर्मुनिकृतयजनः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १०६

106. தாமரை போன்ற திருவடி முதலியவற்றில் சிறந்த முத்துமாலைகளையும், மார்பில் தங்கக்கவசத்தையும் புகழ்பெற்ற ரத்தினம் பதித்த ஆபரணத்தையும் தெய்வத்தன்மைமிக்க ஆடையையும் தரித்து நடனம் புரிந்து, வந்துள்ள உயிரினமனைத்திற்கும் அறம் பொருள், இன்பம், முக்தி என்ற புருஷார்த்தங்களையும் தந்து காக்கிறார். ஆதியற்றவர், முனிவர்களால் வேள்விகளால் தொழப்பெற்றவர், இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

शिष्याणां वेदबाह्यस्थितिमधिजुषतां बोधनार्थं पठन्तः
चर्यायोगाङ्घ्रिभेदप्रकटितविभवान् कामिकाद्यागमांस्तान् ।

भूदेवा वाजपेयक्रतुगतनृपतिप्रोद्धृतोद्दामशुभ्र

छत्रा यं पूजयन्ति श्रुतिपथविधिना कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १०७

107. வேதத்திற்கு உட்படாத நிலைகொண்ட சீடர்களுக்குப் போதிக்க சரியை யோகம் முதலிய பாதங்களால் இறைவனின் தன்மையை வெளிப்படுத்துகிற காமிகம் முதலிய ஆகமங்களைக் கற்பவர்களும், வாஜபேயம் முதலிய வேள்விக்கு வந்த அரசர்களால் வெண்குடைபிடிக்கப்பட்டவர்களுமான அந்தணர்கள் வேத முறையால் இவரைப் பூஜிக்கின்றனர். இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

वेदान्तोद्गीतरूपं ज्वलनडमरुकौ धारयन्तं कराभ्यां

अन्याभ्यां डोलमुद्रामभयमपि सदाऽपस्मृतौ दक्षपादम् ।

विन्यस्याकुञ्चितेन प्रणमदखिलदं वामपादेन नित्यं

देव्या साकं सभायां रचयति नटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १०८

108. வேதாந்தத்தில் உருவகப்படுத்தப் பெற்றவர், இருகைகளால் உடுக்கையையும் அக்னியையும் தாங்கியவர், மற்றிருகைகளால் டோலமுத்திரையையும் அபயமுத்திரையையும் காட்டுபவர். எப்போதும் அபஸ்மாரத்தின் மீது வலது காலை வைத்து தூக்கி மடித்த இடது காலால் வணங்குபவர் விரும்பியதைத் தருபவர், எப்போதும் தேவியுடன் ஸபையில் நடனம் புரிகிறார். இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

आमन्त्रश्रं सुदीप्तां निजतनुमभितस्सत्यरूपप्रभान्तः

वामे युक्तं स्वशक्त्या वसुदलकमलस्वार्णकिञ्जल्कशोभम् ।

न्यासं साहस्रकोष्ठस्थितशिवमनुभिर्मोहनाद्यैर्यदीयं

चक्रं संपूजयन्ति प्रतिदिनमनघाः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १०९

109. (ஸ்ரீ சக்ரத்தின்) பதினான்கு கோணங்கள் வரை ஒளிமிக்க தன் மேனியை, சுற்றிலுமுள்ள ஓங்கார (ஸத்ய)த்

திருவாசியினுள் இடது பாகத்தில் தன் சக்தியான தேவியுடன் காட்டுவதும், எட்டுத் தாமரைக் கோதுகளில் தன் சிதம்பர மந்திர எழுத்துக்களுடன் மோஹனம் முதலிய 1000 கோட்டங்களில் உள்ள சிவ மந்திர அக்ஷரங்களுள்ளதுமான சக்ரத்தைத் தூய அந்தணர்கள் வழிபடுகிருர்கள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

त्रैचत्वारिंशदश्रे वसुनृपकमले वृत्तभूचक्रमध्ये
बिन्दौ सन्तानकल्पद्रुमनिकरयुते रत्नसौधे मनोज्ञे।
ब्रह्माद्याकारपादे शिवमयफलके स्वर्णमञ्चे निषण्णो
देव्या यः पूज्यते तं हरिमुखविबुधैः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११०

110. நாற்பத்தி மூன்று முக்கோணங்களிலும் 8-16 இதழ்களுள்ள தாமரைகளிலும் வட்டங்களிலும் பூபுரங்களிலும் நடுவில் உள்ள பிந்துவிலும், ஸந்தான கல்பக மரத்தோட்டத்தில் அழகிய ரத்ன மாளிகையில் பிரும்மா முதலிய நால்வராலான பாதங்கள் கொண்டதும் ஸதாசிவரைப் பலகையாகக் கொண்டதுமான தங்க மஞ்சத்தில் தேவியோடு அமர்ந்தவராக விஷ்ணு முதலானவரால் வழிபடப்பெறுகிற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यल्लीलारब्धनृत्त प्रसृतवरजटाजूटसम्मर्दवेग -
प्रोद्यत्स्वर्गापगाम्भोजनितकणगणा यत्र यत्र प्रपेतुः।
तेऽप्यासंस्तत्र तत्र स्वजनिममुखरा मूर्तयः क्षेत्रराजे
तं देवं नन्दिमुख्यप्रमथगणवृतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १११

111. இவரது விளையாட்டாகத் தொடங்கப்பெற்ற நடனத்தின் போது விரிந்த சடைக்கற்றையின் மோதலின் வேகத்தால் வெளிப்பட்ட கங்கை நீரின் துளிகள் விழுந்த இடங்களில் ஆங்காங்கு அந்த நீர்த்துளிகள் லிங்க வடிவிலும் மூர்த்தி வடிவிலும் உருவாகிவிட்டன. இந்த சிறந்த க்ஷேத்திரத்தில் அந்த தேவரான நந்தி முதலிய பிரமத கணங்கள் சூழ்ந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

श्रीविद्याषोडशार्णैर्मिलितमपि तथा पञ्चवर्णैः कुमारी-
बीजैर्यन्मन्त्रराजं मुहुरजकमलानाथरुद्रेशशर्वाः ।
जप्त्वा संसृष्टिरक्षालयसकलतिरोधानकानुग्रहाद्याः
सिद्धीरापुस्तमीशं शुभकरनयनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ११२

112. ஸ்ரீவித்யை, ஷோடசாக்ஷரீ, பஞ்சாக்ஷரீ, பாலா இந்த மந்திரங்கள் இணைந்த இவரது மந்திரத்தை பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், ஈசுவரன், ஸதாசிவர் இவர்கள் ஜபித்து, படைப்பு, காப்பு, லயம், மறைப்பு, அனுக்ரஹம் முதலியதில் தேர்ச்சிபெற்றனர். அந்த மங்களம் விளைவிக்கிற பார்வையுள்ள தேவரான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்:

यस्याहुर्नृत्तमूर्तेः श्रुतिहृदयविदश्शक्तिमेकामपीड्यां
कालीं कोपे च दुर्गां युधि जगदवने विष्णुरूपां भवानीम् ।
भोगे ज्ञानक्रियेच्छामयविविधतनुं सर्वसंहारकाले
स्वान्तर्लीनां प्रसन्नां तमिभमुखसुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ११३

113. வேதத்தின் உட்பொருள் உணர்ந்தவர்கள் இந்த நடேசரின் ஒரே சக்தியை, கோபத்தில் காளியாயும் போரில் துர்க்கையாயும், காப்பில் விஷ்ணுவாயும், போகத்தில் பவானியாயும் ஞான சக்தி கிரியா சக்தி இச்சாசக்தி வடிவினளாகவும், பிரளயகாலத்தில் அவருள் மறைந்த சக்தியாகவும் உணர்வர். கணபதியின் தந்தையான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

श्रीहीराल्लब्धचिन्तामणि मनुमनुसन्धाय निर्जीवदेहे
मातुर्मामल्लदेव्या निशि विगतभयो हर्षनामोपविश्य ।
विप्रः श्रीरुद्रभूमौ यदधिककृपया मातरं सर्वविद्यां
सिद्धीरन्याश्च लेभे करधृतडमरुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ११४

114. ஹர்ஷர் என்ற அந்தணர், ஸ்ரீ ஹீரர் என்பவரிடமிருந்து பெற்ற சிந்தாமணி மந்திரத்தை மயானத்தில் தாயான

மாமல்லதேவியின் உயிரற்ற உடலின் மீது அமர்ந்து ஜபித்து இவரது கிருபையால் தாயாரையும் அனைத்து வித்யைகளையும் ஸித்திகளையும் பெற்ருர். கையில் உடுக்கை ஏந்திய அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

गङ्गामाहर्तुकामे कपिलमुनितपोवह्निसंदग्धदेहान्
स्वर्गं नेतुं पितॄन्स्वान्यजति रघुपतौ यः पुरस्तादुदेत्य ।
गर्वाद्व्योम्नः पतन्तीं स्वशिरसि कणिकासन्निभां तां निरुध्य
स्तुत्या राज्ञः पृथिव्यां व्यसृजदनुपमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥११५

115. பகீரதன், கபிலமுனிவரின் தவநெருப்பால் பொசுங்கிய தன்முன்னோர்களை ஸ்வர்கத்திற்கு அனுப்ப கங்கையைக் கொணரவிரும்பி வேள்வி புரிந்ததும், தான் முன் நின்று திமிருடன் வானிலிருந்த விழுகிற கங்கையை சிறு துளி போல் தன் தலையில் ஏற்று அடக்கி அரசனின் துதியால் பூமியில் இவர் விட்டார். ஒப்பற்ற இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

वंश्यः काकुत्स्थराज्ञो दशरथनृपतिः यस्य पुत्रप्रदेष्टिं
क्षेत्रे कृत्वा वसिष्ठप्रमुखवचनतः सश्रियं पञ्चवर्णम् ।
जप्त्वा वर्षं वसित्वा सदसि नटपतेः दर्शनाद्रामपूर्वान्
विष्णोरंशान्सुपुत्रानभजदघहरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ११६

116. காகுஸ்த வம்சத்தோன்றலான தசரத அரசன் புத்திர காமேஷ்டியை இந்த க்ஷேத்ரத்தில் வஸிஷ்டர் முதலானவரின் சொற்படி நடத்தி, ஸ்ரீ பீஜத்தோடு பஞ்சாக்ஷரியை ஒரு ஆண்டு முழுவதும் ஜபித்து ஸபையில் நடராஜரைக் கண்டபின் ராமன் முதலிய விஷ்ணுவின் அம்சத்தில் தோன்றிய புதல்வர்களை அடைந்தார். பாபம் நீக்கும் இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कुम्भोद्भूतोपदेशाद्वनभुवि विरजाहोमसम्भूतभूत्यां
आसीनं सोढसीताविरहमपि सदा वेदसारं सहस्रम् ।
नाम्नामावर्तयन्तं दशरथतनयं वीतशोकं व्यतानीत्

117. அகஸ்தியரின் உபதேசத்தால் காட்டில் விரஜாஹோமம் செய்த சாம்பலில் அமர்ந்து சீதையின் பிரிவைப் பொறுத்துக் கொண்டு வேதஸார சிவஸஹஸ்ரநாமங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லி வந்த தசரதரின் புதல்வரான ராமருக்கு ஈசன் சிவகீதை உபதேசித்துத் தன் அஸ்திரத்தைத் தந்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

गन्धर्वश्चित्रसेनः सुरपतिवचनात्तिल्वकान्तारमध्ये
नृत्यन्तं चित्सभायां गिरिवरतनयापाङ्गदुग्धाब्धिचन्द्रम्।
शम्भुं नत्वा मुहुर्यत्करडमरुरवाधीतसङ्गीतविद्या -
सिद्धान्तोऽभूत्तमीशं सुरगणविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११८

118. சித்திரஸேனன் என்ற கந்தர்வன், இந்திரன் சொன்னபடி, தில்லைவனத்தில் சித்ஸபையில் நடனம் புரிகிறவரும் மலைமகளின் கடைக்கண்ணாகிற பாற்கடலைப் பொங்கச் செய்கிற சந்திரனுனவருமான சிவனை வணங்கி அடிக்கடி உடுக்கை நாதத்தின் மூலம் ஸங்கீதத்தின் உட்பொருளைக் கற்றான். அந்த ஈசன், தேவர்களால் துதிக்கப் பெற்ற குஞ்சித பாதரை வழிபடுகிறேன்.

यन्नृत्तं द्रष्टुकामा रविशशिमुखराः स्वाभिधानैर्ग्रहेशाः
लिङ्गान्संस्थाप्य गङ्गातटवरनिकटे पूजयित्वा सभायाम्।
तेजोरूपं च लास्यं बहिरिव हृदये संततं चिन्तयन्तः
वासं चक्रुस्तमीशं निखिलतनुमयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ११९

119. இவரது நடனத்தைக் காணவிரும்பிய ஸூர்யன் சந்திரன் முதலான கிரஹங்கள், தம்தம் பெயரில் லிங்கம் அமைத்து சிவகங்கைக்கரையில் வழிபட்டு, ஸபையில் ஒளிமயமான தாண்டவத்தை வெளியில் கண்டவாறு இதயத்திலுள் எப்போதும் தியானித்தவராக, அங்கேயே தங்கியிருந்தனர். அந்த எல்லாமான ஈசனை குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

श्रीविद्यां संजपन्तो बहुदिनमसकृद्धे हयग्रीवकुम्भो-
त्भूतप्रष्ठा मुनीन्द्राः परशिवमहिषीं पाशकोदण्ड हस्ताम्।
साक्षात्कृत्याथ तद्वागमृतजनिमयाद्देवमन्त्रप्रभावात्
नृत्तं दृष्ट्वाऽऽत्मबोधं सुखकरमभजन् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥

120. வெகுநாட்கள் எப்போதும் ஹயக்ரீவர், அகஸ்தியர் முதலான மாமுனிவர்கள் ஸ்ரீவித்யா மந்திரத்தை ஜபித்து பரமசிவரின் இனியாளான பாசம் கோதண்டம் ஏந்திய தேவியை நேரில் கண்டு, அவளது வாக்கிலிருந்து வெளியான அமுதமான சிவமந்திரத்தின் பெருமையால் நடனம் கண்டு இன்பமளிக்கிற ஆத்மஜ்ஞானத்தைப் பெற்றார்கள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

गीत्यां संदिह्यमानः कलहरसिकहृन्नारदाख्यस्सुरर्षिः
धातुर्वाक्येन गत्वा यदमलनिलयं मन्त्रयोगान्महेशम्।
प्रत्यक्षीकृत्य ढक्कोद्भवसरिगमपाधानिवर्णान्द्विषट्कान्
बुध्वा गायन्सवीणः सदसि वसति तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२१

121. கலகத்தில் ஆர்வம் கொண்ட நாரதர் என்ற தேவரிஷி ஸங்கீதத்தில் ஸந்தேகங்கள் கொண்டவராக, பிரும்மாவின் சொற்படி தூய்மைமிக்க சிதம்பரக் கோவிலையடைந்து மந்திர ஜபத்தால் மகேசனை நேரில் கண்டு உடுக்கிலிருந்து வெளியான ஸரிகமபதநி என்ற ஸ்வரங்களைப் பன்னிருநிலை கொண்டதாக உணர்ந்து வீணையில் பாடிக் கொண்டு ஸபையில் வசிக்கிறார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(ஷட்ஜமும் பஞ்சமும் மாறுபாடற்றவை. மற்ற ஐந்தும் இருவகைப்படுவை ஆக பன்னிருநிலைகள்).

पाठीनाकारभाजं फणिभुवनसमानीतवेदासुरघ्नं
पुच्छाघातप्रशान्ताम्बुनिधिशिखिशिखं पर्वतेन्द्रानुकल्पम्।
विष्णुं दृष्ट्वाऽतिभीत्या विबुधपरिबृढैःस्तूयमानः कपाली
यस्तं निघ्नन्जहार द्विनयनमपि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२२

122. பெருமீனாகிப் பாதாளத்திற்கு வேதத்தைக் கொண்டு சென்ற அஸுரனை அழித்தவரும், வாலால் அடித்து வடவாக்னியை அணைத்தவரும், பெருமலை போன்றவருமான விஷ்ணுவைக் கண்டு பயத்தால் தேவர் பெருமக்களால் துதிக்கப்பெற்ற கபாலீ (சிவன்) விஷ்ணுவை அடக்கி அவரது இருகண்களையும் பறித்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

भीमं पीताम्बुराशिं कमठवरतनुं कालकूटोपमाग्नि -
ज्वालासन्दिग्धवक्त्रं जगदपि निखिलं क्षोभयन्तं स्वकृत्यैः ।
ब्रह्माद्यैरप्यजय्यं हरिमधिवसुधं कर्षयन्यस्तदीयान्
अङ्गान् कण्ठे दधौ तं निखिलसुरनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १२३

123. கால கூடத்தை போன்று தீப்பிழம்பென ஐயம் தருகிற முகம் உள்ளவரும் கடலைக்குடித்தவரும் பயம் தருபவரும் ஆமை உடல் கொண்டவரும் உலகனைத்தையும் தன் செயல்களால் கலக்குபவரும், பிரும்மா முதலானவராலும் வெல்ல முடியாதவருமான ஹரியை பூமியில் இழுத்து அவரது அவயவங்களைக் கழுத்தில் தரித்தார். எல்லா தேவர்களாலும் துதிக்கப்பெற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

पोत्रीरूपं महान्तं जलधिगतधरां दंष्ट्रयोद्धृत्य वेगात्
युद्धे हत्वा हिरण्यं सुररिपुमखिलानिष्टकृत्यैश्चरन्तम् ।
वैकुण्ठं भैरवो यश्शितशिखविगलद्वह्निकीलासशूल -
प्रोतं कृत्वा तदीयं रदमुरसि दधौ कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १२४

124. பெரிய பன்றி உருக்கொண்டவரும் கடலிலிருந்த பூமியைத் தெற்றிப்பற்களால் தூக்கி, தேவர்களின் எதிரியான ஹிரண்யாக்ஷனைப் போரில் கொன்று, கொடும் செயல்களைச் செய்தவருமான விஷ்ணுவைப் பைரவராகி நெருப்பைக் கக்குகின்ற கூர்முனையுள்ள சூலத்தால் குத்தித்தூக்கி அவரது தெற்றிப்பல்லைப் பிடுங்கித் தன் மார்பில் தரித்த அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

भीत्या सन्त्रासमाने नरहरिवपुषो देवतानां समूहे
धात्रा संस्तूयमानः शरभवरतनुः सालुवः पक्षिराजः।
वेगात्तं छेदयित्वा स्वपदनखमुखैस्तत्त्वचाऽलङ्कृतोऽभूत्
दंष्ट्रासंदीप्तलोकस्तमखिलवरदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२५

125. நரஸிம்ஹராகத் தோன்றியவரிடம் பயத்தால் தேவர் கூட்டம் நடுங்கியபோது பிரும்மாவால் துதிக்கப்பெற்ற சிவன் சரபவடிவில் சாளுவபட்சியாகி வேகத்துடன் அவரைத் தன் கால் நகங்களால் கிழித்து அவரது தோலால் தன்னை அலங்கரித்துக் கொண்டார். அவரது தெற்றிப்பல்லின் ஒளியால் உலகம் பிரகாசித்தது. எல்லோருக்கும் விரும்பியதைத் தருகிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

युद्धे भग्नोरुकायं नरहरिवपुषं गण्डभेरुण्डरूपी-
भूत्वा गर्जन्तमग्रे शरभखगपतिर्यः स्वफालाक्षिकुण्डात्।
उग्रप्रत्यङ्गिराख्यां शतशतवदनां कालिकामाशु सृष्ट्वा
तस्या जिह्वाग्रवह्निं सुचरुवदनयत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२६

126. போரில் தனது பெரும் உடல் நொறுங்கிய நரஸிம்ஹர் கண்ட பேருண்ட பக்ஷி வடிவில் தன் எதிரில் நின்று கர்ஜனை புரியும்போது சரபர் என்ற பக்ஷியரசரான சிவன் தன் நெற்றிக் கண்ணாகிற நெருப்புக்குண்டத்திலிருந்து ஆயிரம் முகங்கள் கொண்ட உக்கிரப்பிரத்யங்கிரா என்ற காளியைப் படைத்து அவளது நாக்கின் நெருப்பிற்கு நரஸிம்ஹரை நல்ல ஹோமப்பொருளாக்கினார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

याच्ञाखर्वीकृताङ्गं बलिमखसदसि स्वां तनूं वर्धयित्वा
द्यावाभूमी सुरारेर्मकुटमपि पदा मानयित्वा त्रिलोकीम्।
हुङ्कारान्क्षीषयन्तं सुरगणविनुतो वामनं यो विनिघ्नन्
कङ्कालं तस्य देहत्वचमपि हृतवान्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२७

127. யாசிப்பதற்காக குள்ள உடல் கொண்டு பலியின் வேள்விச்சாலையில் தன் உடலைப் பெரிதாக்கி வானையும் பூமியையும் அஸுரனின் கிரீடத்தையும் காலாலளந்து மூவுலகையும் ஹும் என்ற பேரொலியால் பயமுறுத்துகிற வாமனரை, தேவர்களால் துதிக்கப்பெற்ற சிவன் அழித்து அவரது முதுகெலும்பையும் தோலையும் பறித்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

श्रीचक्रस्यन्दनस्थां गजतुरगसमारूढशक्त्यग्रभागां
नित्यावाराहिमन्त्रिण्यनुचरसहितां दृष्टबालास्त्रविद्याम्।
सर्वास्त्राश्लिष्टहस्तां रणभुवि विलसद्युद्धवेषां भवानीं
दृष्ट्वा तुष्टोऽभवत्तं धनपतिसुहृदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२८

128. ஶ்ரீ சக்ரராஜரதத்தில் அமர்ந்தவளாக, யானைகளிலும் குதிரைகளிலும் ஏறியமர்ந்த சக்திகளை முன் நிறுத்தியவளாக, நித்யைகள், வாராஹீ, மந்திரிணீ இவர்கள் தொடர, பாலையின் அஸ்திரத்திறமையைக் கண்டவளாக போர்க்களத்தில் எல்லா அஸ்திரங்களையும் கையில் கோர்த்தவளாக போர் அரங்கில் போர் வீரையான பவானியைக் கண்டுகளித்தார். குபேரனின் தோழரான அந்த குஞ்சித பாதரை வழிபடுகிறேன்.

विष्णोरंशावतारान्दश करनखरैः युद्धरङ्गे सृजन्ती
कामेशालोकनोद्यद्गजवदनकरध्वस्तविघ्नेशयन्त्रा।
यस्यास्त्रेणाशु भण्डं ससुतगणपुरं नाशयामास दैत्यम्
देवी श्रीचक्रसंस्था तमपि शिवकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १२९

129. விஷ்ணுவின் பத்து அம்சாவதாரங்களையும் தனது பத்துகை நகங்களிலிருந்து போரரங்கில் படைத்தும், காமேசரை உற்று நோக்கியதால் வெளிப்பட்ட கணபதியால் விக்னயந்திரத்தை அழித்தும், சிவனது அஸ்திரத்தால் பண்டனை அவனது புதல்வர்கள், கணங்கள் மற்றும் நகரத்துடன் ஶ்ரீ சக்ரத்தில் அமர்ந்துள்ள தேவி அழித்தாள். அந்த மங்களம் செய்கிற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

द्वात्रिंशद्रागबोधच्युतमकुटशशिस्वच्छपीयूषधारा-
संगावासस्वजीवाम्बुजभववदनोद्दामगीताभिरामम्।
स्तब्धीभूतर्षिनारीगणमधिविपिनं सर्वशृङ्गाररूपं
यं दृष्ट्वा विष्णुमाया पतिमतिमतनोत् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥

130. முப்பத்திரண்டு ராகங்களையும் சிவன் நினைக்க, சிவனது தலையில் இருந்த சந்திரன் உருகிச்சிந்தியது. அதனுல் உயிர்ப்பிக்கப் பெற்ற பிரும்மா தன் வாய்களால் பரமனைப்பாடினுர். தாருகாவனத்து ருஷிகளும் அவர்களது மனைவியரும் ஸ்தம்பித்து நின்றனர். பெருமான் பூர்ண சிருங்காரவடிவம் பெற்ருர். விஷ்ணுமாயையான மோகினி அவரைத்தன் பதியாக எண்ணினுள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(பிரும்மாவின் கபாலத்தை மாலையாகச் சிவன் தரித்துள்ளார். கபாலத்தின் மீதுபட்ட சந்திரனின் அமுதநீர் கபாலத்திற்கு உயிரூட்டியது.)

मातृद्रोहाघशान्तिं स्वपितृनिधनकृत्क्षत्रशैलेन्द्रपक्ष
द्वंद्वच्छेदातितीक्ष्णप्रबलपरशुमप्याप्तुकामो मुनीन्द्रः।
नृत्तं यस्येदमात्मन्यनुगतमसकृद् भावयन् जामदग्न्यो
रामो लेभे चिरायुःप्रमुखवरवरान्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १३१

131. முனிவர்களில் சிறந்த ஜமதக்னி குமாரனுன பரசுராமர் மாதாவிற்குச் செய்த துரோகத்தின் விளைவான பாபத்தைப் போக்கவும், தன் தந்தையைக் கொன்ற க்ஷத்திரியனுன கார்தவீர்யனுகிய மலையின் இரு இறக்கைகள் போன்ற இரு தோள்களையும் வெட்டுவதற்கான வலிவுமிக்க கோடரியைப் பெறவும் இவரது நடனத்தை உள்ளத்தில் தொடர்ந்து தியானம் செய்பவராகி நீண்ட ஆயுள் முதலிய உயர்ந்தவரங்களை இவரிடமிருந்து பெற்ருர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यत्पूजालब्ध भूतिप्रभवित युवती भाववृद्धस्वजायो
यत्क्षेत्रानेकसेवाशमितमुनिवरध्वंसनागोविकारः ।
तालाङ्को रौहिणेयः प्रबलहलवराकृष्टदुष्टप्रलम्बो
जातो यस्य प्रसादादमृतकरधरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १३२

132. பனைமரக்கொடி கொண்ட ரோஹிணியின் புதல்வரான பலராமர், இவரது பூஜையில் கிட்டிய மகிமையால் இவரது அருளால், கிழவியான மனைவியின் மூப்பை நீக்கி இளமை பெறச் செய்தவராக, இவரது க்ஷேத்திரத்தில் பலதடவை வழிபட்டு சிறந்த ருஷியான ஸூதரைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொண்டவராக வலிவுமிக்க கலப்பையால் துஷ்டனை பிரலம்பனை இழுத்து அழித்தவராக ஆனார். கையில் அமுதம் ஏந்திய அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

आरुह्याश्वं मुकुन्दः प्रतिकलिविगमं कल्किरूपी पृथिव्यां
गच्छन्पाषण्डवर्गं कुमतिमघयुतं तत्र तत्रैव संस्थम् ।
अङ्गुष्ठाकारभाजं यदमलकरुणावाप्तखड्गेन निघ्नन्
सर्वां भूमिं यथावत्कलयति तमजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १३३

133. ஒவ்வொரு கலியுகத்தின் இறுதியிலும் கல்கிவடிவேற்ற விஷ்ணு, குதிரை மீதேறி பூமியில் ஸஞ்சரித்து ஆங்காங்குள்ள மதிகெட்டுப்பாபம் புரிகிற கட்டை விரல் பருமனுள்ள பாஷண்டர் கூட்டத்தை இவரது அப்பழுக்கற்ற கருணையால் பெற்ற வாளால் கொல்பவராக பூமி அனைத்தையும் முன்னிருந்ததுபோல சீரமைக்கிறார். பிறப்பற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

मध्ये मार्गं स्वभक्तं द्विजवरजनुषं गण्डभेरुण्डसिंह
व्याघ्राश्वेभर्क्षतार्क्ष्यप्लवगनरमुखे माधवे भक्षयित्वा ।
क्रोधाद्ब्रह्माण्डवर्गं मुहुरपि च मुधा तर्जयत्याशु तं यः
हत्वाऽरक्षत्स्वभक्तं जगदपि सकलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १३४

134. விஷ்ணு கண்டபேருண்டம், சிங்கம், புலி, குதிரை, யானை, கரடி, கருடன், குரங்கு, மனிதன் இவர்களின் முகம் கொண்டு அந்தணராகப் பிறந்த தன் பக்தரை நடுவழியில் கொன்று தின்றுக் கோபத்தால் பிரும்மாண்டமனைத்தையும் அடிக்கடி வீணே பயமுறுத்திக் கொண்டிருந்த போது அவரை மாய்த்து எல்லா உலகங்களையும் காப்பாற்றினார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

येनोक्तं राजताद्रौ चरितमनितरज्ञातपूर्वं मृडान्यै
श्रुत्वा तद्योगलब्धभ्रमरवरतनुः पुष्पदन्तः स्वसख्या ।
प्राकाश्यं नीयमानः कुपितनगसुताशापतो मर्त्ययोनौ
उत्पन्नः संस्तुवन् यं स्वपदमधिगतः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥१३५

135. இவர் கைலாஸத்தில் பார்வதிக்குப் பிறர் அறிந்திராத சரிதத்தைக் கூறியதை யோக வலிமையால் வண்டு உருக்கொண்ட புஷ்ப தந்தன் என்ற கந்தர்வன் அருகிலிருந்து கேட்டு (தன் தோழியிடம் கூறி) தோழிமூலமாக உலகிற்கு வெளிப்படுத்த, கோபம் கொண்ட பார்வதியின் சாபத்தால் மனித இனத்தில் பிறந்து சிவனைத்துதித்து மீண்டும் தன்னிலை பெற்றான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

दैत्यानां ध्वंसनार्थं सकलमपि जगद्रक्षणार्थं मुरारिः
लक्ष्म्या क्षीराम्बुराशौ कृतकठिनतपाः साम्बमूर्तिं प्रभुं यम् ।
भक्त्या संपूज्य चित्ते मनुवरमपि यन्नामसाहस्रसंज्ञं
स्तोत्रं लब्ध्वा जपंस्तत्प्रभुरभवदजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १३६

136. அஸுரர்களை அழிக்கவும், உலகைக் காக்கவும், விஷ்ணு லக்ஷ்மியுடன் திருப்பாற்கடலில் கடினமான தவமியற்றித் தேவியுடன் கூடிய அந்த பிரபுவை உள்ளத்தில் வழிபட்டு அவரிடமிருந்து ஸஹஸ்ரநாமஸ்தோத்திரம் என்ற சிறந்த மந்திரத்தையும் பெற்று உலகின் நாதராக ஆனார். பிறப்பற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

आज्ञा यस्याखिलानां न भवति हि सदा लङ्घनीया यदीयं
तत्वातीतस्वरूपं विधिमुखविबुधा वर्णितुं नैव शक्ताः ।
यं द्रष्टुं वेदवाचोऽप्यगणितविभवं नूनमद्यापि यत्नं
कुर्वन्त्यम्बासहायं सनकमुखगुरुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १३७

137. அவரது ஆணையை எவரும் மீறமுடியாது. உலகின் காரணமான தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட அவரது நிலையை பிரும்மா முதலிய தேவர்கள் வர்ணிக்க இயலாதவர்கள். வேதவாக்குகள் கணக்கிட முடியாத பெருமை கொண்ட அவரைக் காண இன்றும் முயற்சி செய்கின்றன. அம்பிகையைத் துணை கொண்டவரும் ஸனகர் முதலானோரின் குருவுமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

युद्धे संजातकम्पः पितृपतितनयो भीष्ममुख्यप्रवीरान्
चक्राब्जाकारसेनागतरथगजराडश्वपादातिवर्गान् ।
जेतुं कृष्णोपदिष्टो मधुमयनुतिभिस्तोषयन् यस्य शक्तिं
दुर्गां तस्याः प्रसादादजयदरिबलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १३८

138. தர்மராஜரின் குமாரரான தர்மபுத்திரர் பீஷ்மர் முதலிய பெரும் வீரர்களையும், சக்ரம், பத்மம் வடிவில் வியூஹம் அமைந்த ஸேனையிலுள்ள யானை குதிரை காலாட்கள் இவர்களையும் வெல்ல, . கிருஷ்ணனால் வழிகாட்டப்பெற்றவராக, இவரது சக்தியான துர்க்கையை தேனை ஒத்த இனிய துதிகளால் மகிழ்வித்து அவளது அருளால் எதிரிப்படையை வென்றார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यस्याघोरास्त्ररूपं वसुकरविधृतोद्दण्डभेताल घंटा -
ढक्का खेटासिपात्रत्रिशिखशिखिशिखं भीमदंष्ट्राधरोग्रम् ।
सौवर्णश्मश्रुवक्त्रं रथमुखनिहितस्वाङ्घ्रिमारक्तवस्त्रं
ध्यायेच्चेत्कालमृत्युं तरति विधुजटं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १३९

139. இவரது அகோராஸ்திரம் என்ற வடிவம், எட்டு கைகளில் பயங்கரமான வேதாளம், மணி, உடுக்கை, கேடயம், வாள், பாத்திரம், திரிசூலம், அக்னி இவற்றை ஏந்தியது; பயங்கரமான தெற்றிப்பல் வெளியான உதட்டால் உக்கிரமானது, தங்க நிறமுள்ள மீசையுள்ள முகம் கொண்டது. தேரின் முன் புறத்தில் கால்வைத்துள்ளது. சிவந்த ஆடை அணிந்தது. இவரைத் தியானம் செய்ய காலமிருத்யுவும் விலகும். பிறைசூடிய அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

आरोग्यं लब्धुकामो दिवसकरमहामण्डलान्तर्यमम्बा-
युक्तं रुक्माभमाद्यं कलयति नितरां यो जपन्रौद्रमन्त्रान्।
तस्य त्वङ्मांसरक्तावयवगतमहारोगवर्गाः प्रणाशं
यान्ति श्रीसुन्दराङ्गः स च भवति शिवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥१४०

140. நோயற்றிருக்க விரும்புபவன், சூரிய மண்டலத்திலுள் தேவியுடன் கூடிய இவரைப் பொன்னூர் மேனியனாக, உலகின் ஆதியாக ருத்திர மந்திரங்களை ஜபித்துத் தியானிக்க, தோலிலும் தசையிலும் ரக்தத்திலும் அவயவங்களிலும் உள்ள பெருநோய்கள் அழிகின்றன. அழகிய தோற்றம் பெறுகிறான். சிவனான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

पुत्राकाङ्क्षी पुमान्यः परशुमृगवराभीतिहस्तं त्रिनेत्रं
गौर्या स्कन्देन साकं वृषभमधिजुषं सानुकम्पं स्मितास्यम्।
सर्वालङ्कारभाजं सकलनिगमवित्स्तूयमानापदानं
ध्यायत्याप्नोति पुत्रं गुहमिव स च तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४१

141. புத்திரனைப் பெற விரும்புபவன், கோடரியும் மானும் வரஅபய முத்திரைகளும் கைகளால் தாங்கியவராக, கௌரியுடனும் ஸ்கந்தருடனும் கூட விருஷபத்தில் ஏறியவராக, பரிவுள்ளவராக, புன் சிரிப்புள்ளவராக, எல்லா அலங்காரங்களும் பெற்றவராக, வேதமறிந்தவரனைவராலும் துதிக்கப் பெற்றவராக, தியானம் செய்ய, குகனைப்போன்ற புதல்வனைப் பெறுகிறான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

योविद्यार्थी वटद्रोर्निकटतटगतं पुस्तकज्ञानमुद्रा -
वीणारुद्राक्षमाला कृतकरकमलं योगपट्टाभिरामम्।
तत्त्वार्थं बोधयन्तं सकलमुनिततेश्चन्द्रगङ्गाहिभूषं
यं ध्यायत्याशु वाग्मी स च भवति गुरुं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥१४२

142. கல்விபெற விரும்புபவன், ஆலமரத்தருகே அமர்ந்தவரும், புத்தகம், ஜ்ஞான முத்ரை, வீணை, ருத்ராக்ஷமாலை இவற்றைக் கைகளில் ஏந்தியவரும், யோகபட்டம் கட்டியவரும் முனிவர் கூட்டத்திற்குத் தத்துவத்தை விளக்குபவரும். சந்திரன் கங்கை பாம்பு இவற்றை அணிந்தவருமான குருவை (வீணாதரதக்ஷிணா மூர்த்தியை) தியானம் செய்பவன் விரைவில் சிறந்த வாக்சக்தி பெற்றவனுவான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

भिक्षां देहीति चक्षन् मुनिसुतसहितः क्रोधभट्टारकाख्यः
दुर्वासा यन्नगर्यामनधिगतचरुः क्षुन्निवृत्यै निशीथे।
शक्तिं यस्यान्नपूर्णां हृदि परिकलयन् सत्वरं यत्प्रसादा -
वासक्षीरान्नभुक्त्या सुखमभजदजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४३

143. இவரது நகரத்தில் இரவில் முனிகுமார்களுடன் கூடியவராக கோபப்பிடாரர் என்று பெயர் பெற்ற துர்வாஸர், பிச்சைபோடு என்று உரக்கக் கூவி இவரது சக்தியான அன்னபூர்ணாவை உடன் தியானித்து அவளருளால், கிட்டிய பாலன்னத்தை உண்டு இன்பம் பெற்றார். பிறவாத அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कश्चिल्लुब्धो गिरीन्द्रे मृगनिबिडवने लिङ्गमैशं यदीयं
दृष्ट्वा गण्डूषतोयैः स्वकचधृतसुमैर्भुक्तशेषैश्च मांसैः।
पूजां कुर्वन् कदाचिन्निजनयनवरं चार्पयित्वाऽतिभक्त्या
नेत्रे यस्यानुरूपं पदवरमभजत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४४

144. மலைமீது மான்கள் அடர்ந்த காட்டில், ஒரு வேடன் இவரது லிங்கத்தைக் கண்டு, வாய் கொப்பளித்த நீராலும், தன் தலைமயிரில் செருகியிருந்த பூவாலும் உண்டு மீந்த மாம்ஸத்தாலும் வழிபட்டான். ஒரு சமயம் தன் கண்ணையே பக்தியுடன் தந்து, இவரது ஸாரூப்யநிலை பெற்றான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(கண்ணப்ப நாயனாரின் வரலாறு இது.)

बालो विप्रस्य गोष्ठस्थितपशुनिकरं दोहयित्वा पयोभिः
नद्यास्तीरे यदीयं जनिम सुखकरं पार्थिवञ्चाभिषिञ्चन्।
ध्यायन् क्रोधात्स्वपूजाविकृतिकरपितुश्छेदयित्वा पदं यं
स्तुत्वा यत्पार्षदानामधिपतिरभवत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४५

145. ஒரு அந்தணரின் புதல்வன் கொட்டிலிலுள்ள பசுக்கூட்டத்தைக் கறந்து அந்தப்பாலால் ஆற்றங்கரையில் வாழ்விற்கு இன்பம் தருகிற மண்ணாலான லிங்கத்தை நீராட்டினான். தன் பூஜைக்கு இடையூறு செய்கிற தந்தையின் காலை வெட்டி விட்டு, அவரை தியானித்துத் துதித்து அவரது கணத்தின் தலைவராக ஆனான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(சண்டேசநாயனாரின் வரலாறு இது.)

येषां वेदोक्तकर्मस्वनधिकृतिरभूद्द्विजाता पृथिव्यां
तेषां धर्मादिमाप्त्यै परशिवरचितं कामिकादिप्रभेदम्।
साङ्गं सिद्धान्ततन्त्रप्रकरमपि चतुष्षष्टिसंख्याः कलाश्च
यस्यादेशात्प्रकाशं त्वनयदगनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४६

146. வேதத்தில் விதிக்கப்பட்ட சடங்குகளை செய்யத் தகுதியற்ற மாந்தருக்காக, அவர்களும் அறம் பொருள் இன்பம் வீடு என்ற பேற்றைப் பெற பரமசிவனால் இயற்றப்பெற்ற காமிகம் முதலிய அங்கங்களும் உட்கருத்து செய்முறைகளும் இணைத்த ஆகமங்களையும் அறுபத்து நான்கு கலைகளையும்

பார்வதி இவரது ஆணையால் வெளியிட்டாள். ஹிமவானால் துதிக்கப்பெற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कुर्वन्तः क्षेत्रवासं हृदयसरसिजे चिन्तयन्तो जपन्तो
विद्यां सौवर्णरङ्गे यमजहरिनुतं स्वेच्छयावासनृत्तम्।
पश्यन्तः सार्वकालं विबुधपरिवृढा लब्धकामास्सुखित्वा
ब्राह्मे सौधे रमन्ते चरमवयसि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४७

147. இவரது க்ஷேத்திரத்தில் வசித்தும் உள்ளத்தில் தியானம் செய்தும், மந்திரத்தை ஜபித்தும், கனகஸபையில் பிரும்மாவாலும் ஹரியாலும் துதிக்கப்பெற்றவரும், தன் விருப்பத்தால் ஆடுபவருமான இவரை எப்போதும் கண்டு களித்தும் தேவர்தலைவர்கள் விருப்பங்களைப் பெற்றவர்களாக பிரும்மலோகத்தில் வயதின் இறுதியில் வாழ்கிறார்கள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सर्वस्वाराभिधाने दिविषदभिमते सप्ततन्तौ द्विजेन्द्रः
कश्चिद्यज्वा हुताशे निजमपि च वपुस्त्यक्तुमत्यन्तभीरुः।
यं ध्यात्वा यत्प्रसादादगमदनितरप्राप्यमौपाधिहीनं
धाम स्वर्गं सदेहस्तमतुलविभवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १४८

148. தேவர்களுக்கு மிகப்பிரியமான ஸர்வஸ்வாரம் என்ற ஸப்த தந்து வேள்வியில் அந்த வேள்வி புரிகிற அந்தணன், அக்னியில் முறைப்படி தன் உடலையும் ஹோமம் செய்ய மிகவும் பயந்து, அப்போது இவரைத் தியானம் செய்து மற்றவரால் அடைய இயலாத உடலுடன் ஸ்வர்கமடைவதை இவரருளால் பெற்றான். ஈடற்ற பெருமையுள்ள அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(ஸர்வஸ்வாரத்தில் இறுதியில் ஹோமப்பொருளாகத் தன்னையே அக்னியில் அர்பணம் செய்வது முறை.)

क्रीडासंसक्तगौरीकनकघटनिभोत्तुङ्गवक्षोजशैल -
प्रोद्यत्शृङ्गारमाध्वीमधुररसधुनी लोलभृङ्गायताक्षम्।

भूषानागोक्तसौख्य प्रवचनघटजस्तब्धगर्वाब्धिताक्ष्य -
क्रीडाकृच्छ्वासवक्त्रप्रमथपतिनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १४९

149. விளையாட்டாகத் தன்னோடு இணைந்த பார்வதியின் தங்கக் கலசம் போன்ற மார்பக ஒட்டுதலால் சிருங்கார ரஸமாகிற தேனைச் சுவைக்கத் தன் கண்களையே அலைகிற வண்டாக்கியவர் இவர். இவரது ஆபரணமாகிய பாம்பு கருடனை ஸுகமா என்று கேட்டது. கருடனின் கர்வம் அகஸ்தியரால் அடக்கப்பட்ட கடல்போல் அடங்கியது. வெட்கத்தால் கருடன் விட்ட பெருமூச்சு போல் நந்தி பெருமூச்சுவிட்டார். நந்தியால் துதிக்கப்பெற்ற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

नृत्तेशं बाणदैत्यप्रमुखगणवरोद्दण्डदोर्बृन्दवर्य -
क्रूरोद्वेगाहतोद्यद्घटधिमिधिमितक्शब्दभावानुकल्पम् ।
तानातानातनेति क्वणितदशशती तन्त्रिवीणानुगानो -
न्मोदोद्ग्रीवाहिभूषावलयमभयदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १५०

150. பாணன் முதலியவர் நீண்டகைகளால் கடத்தை வேகத்துடன் வாசிக்கின்றனர். அதிலிருந்து திமிதிமி தக என்று எழுகிற ஒலியை ஒட்டி இவர் நடனமாடுகிறார். தானுதானு தனு என்று ஆயிரம் வீணைகள் ஒலிப்பதையொட்டிப் பாடுவதைக் கழுத்தை நீட்டிக் கேட்கிற ஆபரணமான நாகங்களைக் கங்கணமாகக் கொண்டிருக்கிறார். எல்லோருக்கும் அபயம் தருகிற இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

साहस्रक्रूरवक्त्रप्रभव गुरुमरुत्पूरहुं हुं भभं भं-
झंझीकृच्छंखशृङ्गप्रमुखवरमहावाद्यभृन्नानुकोपम् ।
दृष्ट्वा हाहाहहेति भ्रमितसुरगणाभीतिसंदायिपार्षद् -
व्यासे रङ्गे य ईशो नटति तमनघं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १५१

151. ஆயிரம் பயங்கரமான வாய்களிலிருந்து கிளம்புகிற பெருங்காற்றின் வீச்சால், ஹூம் ஹூம் ப்பம் ப்பம் ஜம் ஜம்

என்று ஒலிக்கிற சங்கு கொம்பு முதலிய பெரும் வாத்யங்கள் ஏந்திய பானு கோபனைக் கண்டு ஹா ஹா ஹ ஹா எனக் கலங்கிய தேவர் கூட்டத்திற்கு அபயம் அளிக்கின்ற உதவியாளர்களால் சூழப்பெற்ற அரங்கில் ஈசன் நடனமாடுகிறார். குற்றமற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कैलासाद्रिं कदाचित्प्रबलभुजबलाद्रावणश्चालयित्वा
दाक्षायण्याऽतिभीत्या किमिदमिति समालिङ्गितस्याशु यस्य।
पादांगुष्ठाग्रनीतद्विरसनभुवनक्ष्माधरोच्छिन्नबाहुः
साम्ना स्तुत्वा यमिष्टं वरमलभत तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५२

152. ஒரு சமயம் கைலாஸமலையைத் தன் வலிவுமிக்க கைவலிவால் ராவணன் அசைத்தபோது பயமிகுதியால் ஸதிதேவியால் 'இது என்ன!' என்று அணைக்கப்பெற்ற இவரது கால்பெருவிரல் நுனியால் பாதாளம் வரை மலையால் அமுத்தப் பெற்று நசுங்கிய கைகளுள்ள ராவணன் ஸாமகானத்தால் துதித்து விருப்பத்தைப் பெற்றான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

श्रीरुद्रं कोटिसंख्यात्रिगुणितमनिशं यत्पुरस्ताज्जपित्वा
शैलादिर्यस्य शम्भोरनवधिककृपापाङ्गपूराभिषिक्तः।
मत्तुल्योऽसि प्रियोऽसि त्वमपि च सकलं ज्ञातवांश्चासि ताते -
त्युक्तो येनाथ यस्य प्रमथपतिरभूत् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५३

153. இவரது முன்பு ஸ்ரீ ருத்ரத்தை மூன்று கோடி தடவை இடைவிடாமல் ஜபித்த சிலாதரின் குமாரன் (நந்தி) சிவனது எல்லையற்ற கிருபை பெற்ற கண்ணீரால் நீராட்டப்பெற்று, ''நீ எனக்கு ஒப்பானவன்; எனது அன்பன். குழந்தாய்! நீயும் எல்லா அறிந்தவன்'' எனக் கூறப்பெற்று சிவ கணங்களின் தலைவர் ஆனார், அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

श्रीमान्भृङ्गी मुनीन्द्रो मृगपरशुकरं देवमेवैकमीशं
नत्वा तत्पार्श्वगाया निजविमुखरुषश्चण्डिकायाश्च वाक्यात्।
शाक्तं मांसादिवर्गं स्वतनुवरगतं प्रोत्सृजन् यत्प्रसादात्
लेभे दण्डं त्रिपादं स्वधुरि च वसतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५४

154. சிறப்பு மிக்க பிருங்கி முனிவர், மானும் கோடரியும் ஏந்திய ஈசன் ஒருவனையே வணங்கி, தன்னிடம் கோபத்தால் முகத்தைத்திருப்பிக் கொண்ட சண்டிகை (அம்பிகை)யின் சொல்லால் சக்தியைச் சார்ந்த தன் உடலிலிருந்த தசை முதலியவற்றை உதறிவிட்டு இவரது அருளால் தடியையும் மூன்று கால்களையும் எதிரில் வசிப்பதையும் பெற்றார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कश्चिद्विप्रो रिटाख्यः स्वपतिनियमविध्वंसकम्पातराङ्गीं
नारीं दग्ध्वा सतीं तच्चितिगतभसितैर्लेपयन् साम्बमूर्तिम्।
नैवेद्यं कर्तुमिच्छन्निह नय चरुमित्याह्वयन् यत्प्रसादात्
कान्तां भेजे निजान्ते शिवपदमपि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥१५५

155. ரிடர் என்ற அந்தணர் தனது பதியின் நியமத்தைக் கெடுத்ததால் நடுங்கிய பதிவரதையான பெண்ணை (மனைவியை) எரித்து, அவளை எரித்த இடத்துச் சாம்பலால் அம்பிகையுடன் கூடியவரைப் பூசி நைவேத்யம் செய்யவிரும்பியவராக நிவேதனத்தைக் கொண்டுவா என்றழைக்க, இவரது அருளால் பத்தினியையும் தனது இறுதியில் சிவநிலையையும் பெற்றார். அந்த குஞ்சிதபாதரை வணங்குகிறேன்.

गौर्यां शृङ्गारवाप्यां स्वसखिवरगणैः क्रीडयन्त्यां कपर्दी
गत्वा तद्धस्तपंकात् जनितमपि नरं द्वाःस्थमुद्दण्डचण्डम्।
हत्वान्तस्संप्रविष्टः कुपितसखिमुदे तं पुनर्जीवयित्वा
तस्मै विघ्नेश्वरत्वप्रमुखवरमदात्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५६

156. கௌரி சிங்கார ஓடையில் தன் தோழிகள் கூட்டத்துடன், விளையாடிக் கொண்டிருந்த போது (அங்கு வந்த) சிவன் அவளது கையிலிருந்த மஞ்சள் குழம்பில் தோன்றியவரும் வாசற்காப்பவரும், கொடிய நடைமுறை கொண்டவருமான மனிதரை அழித்துவிட்டு உள்ளே நுழைந்தார். கோபித்துக் கொண்ட தோழியின் (கௌரியின்) மகிழ்ச்சிக்காக அவரை மீண்டும் உயிர்ப்பித்து அவருக்கு இடையூறுகளின் தலைமை முதலிய சிறந்த வரங்களைத் தந்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

एकान्ते जातु यस्य प्रमुदितमनसा प्रोक्तवेदान्त तत्वो -
पेक्षारुष्टस्य वाक्याद्धिमगिरितनया धीवराधीशवंशे ।
आविर्भूयाम्बुधिस्थप्रबलशफरसंग्राहिणं यं वरेण्यं
वृत्वा तद्वामभागे वसतिमपि गता कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १५७

157. ஒரு சமயம் தனிமையில் மனநிறைவுடன் கூறப்பெற்ற வேதாந்த தத்துவ விளக்கத்தில் ஆர்வமின்மை கண்டு கோபித்தவரின் சொல்லால், இமவானின் மகள், செம்படவனின் குலத்தில் தோன்றி, கடலில் இருந்த பெருமீனைப்பிடித்த, விரும்பியதை வழங்குகிற அவரை வரித்து அவரது இடது பாகத்திலிருக்கையையும் பெற்றுள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

केकी भूत्वा मृडानी स्वपितृकृतशिवद्वेषसंवृद्धपापं
भस्मीकर्तुं पुराणं शतधृतिरचिते कानने यं त्रिणेत्रम् ।
संपूज्यानन्यदृष्टं नटनमतिमुदा वीक्षमाणा कृपार्द्रैः
यस्यालोकैः पुनीता समजनि नितरां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १५८

158. மிருடஞன சிவனின் மனைவியான பார்வதி தன்தந்தையின் சிவதுவேஷத்தால் நேர்ந்த பாபத்தைச் சாம்பலாக்க மயிலாகி, பிரும்மாவால் படைக்கப்பட்ட காட்டில் (மாயூரத்தில்) மிகப்பழைய முக்கண்ணரை வழிபட்டு, மிகவும் மகிழ்ச்சியுடன் அவரது நடனத்தைக் கண்டு அவரது கிருபை கசிகிற கடைக்கண்

நோக்கால் மிகவும் தூயவளானுள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यस्य क्षेत्रे मृतानां सकलजनिभृतां सञ्चितादीनि पापा -
न्यब्दानेकप्रभोज्यान्यपि च निमिषतो भैरवश्शूलघातात्।
भस्मीकृत्याशु भूयो जननमृतिहरं तारकं यन्निदेशात्
तत्त्वं सम्बोधयन्यत्सदसि वसति तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १५९

159. அவரது க்ஷேத்திரத்தில் இறந்த எல்லா பிராணிகளுக்கும் ஸஞ்சிதம் முதலிய பாபங்கள், பல்லாண்டுகள் வரை அனுபவிக்கத் தக்கவையாயினும் நொடியில் பைரவர் சூல அடியால் உடன் சாம்பலாக்கி, பிறப்பிறப்பை அழித்து, கரையேற்றிசிவதத்துவத்தையும் உபதேசித்துக் கொண்டு அவரது ஸதஸில் வசிக்கிருர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

विष्णोरन्यः परो नेत्यसकृदपि मुधा जल्पमानं मुनीन्द्रं
नन्दी कोपप्रभूतस्तनितनिभरवस्तम्भितप्रोच्चबाहुम्।
व्यासं दृष्ट्वा मुकुन्दः स्वपतिरिति शिवं बोधयन् यत्कृपाया
निन्ये पात्रत्वमीशं तमखिलविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १६०

160. விஷ்ணுவை விட உயர்ந்த தேவர் இல்லை என வீணே அறியாமையால் கூறி, நந்தியின் கோபத்தால் உண்டான இடிபோன்ற ஓசையால் ஸ்தம்பித்து உயரத்தூக்கின கைகளுள்ள வியாஸரைக் கண்ட விஷ்ணு ''சிவன் என் நாதன்'' என அறிவித்து அவரை சிவகிருபைக்கு உரியவராக செய்தார். ஈசனும் அனைவராலும் துதிக்கப் பெறுபவருமான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(காஞ்சியில் வியாஸ சாந்தாலீசுவரர் வரலாறு).

सर्वे देवाश्च विष्णोर्हृदयसरसिजोद्भासि लिङ्गं यजन्तः
क्रुद्धेऽप्यन्योन्यचर्चापदघनविलसत्पञ्चरुद्रादिमन्त्रैः।

स्तुत्वा यत्प्रासविधाजपपरकविराड्योगसंतप्तलोकान्
सौख्यं निन्युर्नितान्तं यदमलदयया कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १६१

161. எல்லா தேவர்களும் விஷ்ணுவின் இதயத் தாமரையில் துலங்குகிற லிங்கத்தை வழிபடுபவர்களாக, அவர் கோபித்த நிலையிலும், பரஸ்பரம் கூடி ஆராய்கிற கனபாடத்துடன் கூடிய பஞ்சருத்ர மந்திரங்களால் துதித்து அதனால் மந்திர ஜபத்தில் ஆர்வமிக்க சுக்ராசாரியரின் யோகமுறை பெற்றுப் பற்றியெரிகிற உலகை அவரது கருணையால் இன்பத்திற்கு இட்டுச் சென்றனர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यस्योक्त्या विघ्नराजस्सुरगणविनुतो रक्षसां सार्वभौमात्
मायासंमोहिताद्यज्जनिम शुभकरं बाहुनाऽऽदाय भूम्याम् ।
संस्थाप्याग्रे युयुत्सुं तमपि निशिचरं स्वीयशुण्डाग्ररन्ध्रा -
कर्षात्सम्भुग्नदेहं दशभुजमकरोत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १६२

162. அவரது உத்தரவால் தேவர் கூட்டத்தால் துதிக்கப்பெற்ற விநாயகர் மாயையால் மயங்கிய ராக்ஷஸ அரசனை ராவணனிடமிருந்து அவனது வாழ்வைச் சிறப்பிக்கிற லிங்கத்தைக் கையால் வாங்கி, அவனது முன்னே கீழே வைத்து, சண்டை போட வருகிற அவனைத் தனது துதிக்கை நுனியால் இழுத்து நொடித்த உடலுடையவனுக்கினுர். அந்த குஞ்சித பாதரை வழிபடுகிறேன்.

आर्यावामांसभूषानवमणिगणभासंगवैवर्ण्यनील -
ग्रीवालोकातिशङ्किप्रसृतविषभयाक्रान्तदिक्पालवर्गम् ।
चूडाचन्द्राजिहीर्षादरविवृतफणाकुण्डलीकर्णलोलद्
गङ्गाकूलायमानस्वसटवरवनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १६३

163. அம்பிகையின் இடது தோள்புறத்து ஆபரணங்களின் நவரத்ன ஒளிச்சேர்க்கையால் கழுத்திலுள்ள நீலநிறம் மங்கிவிட்டதைக் கண்டு, உலகில் விஷம் பரவிவிட்டதென்ற ஐயத்தால் தேவர் கூட்டம் பயந்தோட, தலையணியான

சந்திரனைப் பறிப்பதில் சிறிது வாய்விரித்த பாம்பாலான குண்டலமாட, கங்கைக்கரை போன்று சடையாகிற காடு உள்ளவரான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

शिञ्जन्मञ्जीरमञ्जुध्वनिशमितजगन्मोहमायाविलासं
 फालाक्षिस्फारकुण्डप्रभवहुतवहध्वस्त कामप्रभावम्।
संसाराम्भोधिमध्यभ्रमदखिलजगत्तारनौकायिताङ्घ्रिं
 द्वन्द्वाद्वन्द्वादिशून्यं विजयिनुतकृतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १६४

164. ஒலித்துக் கொஞ்சுகிற காற்சதங்கையின் ஒலியால் உலகை மயக்குகிற மாயையின் விளையாட்டை அடக்குபவர், நெற்றிக் கண்ணாகிய விரிந்த அக்னிகுண்டத்தில் உண்டான நெருப்பால் காமனின் பெருமையை அழித்தவர், சம்சாரக்கடலின் நடுவே தத்தளிக்கிற உலகனைத்தையும் அக்கரை சேர்க்கிற ஓடமான திருவடிகளுள்ளவர், ஸுகதுக்கம், சோகமோஹம், சீதோஷ்ணம் போன்ற இரட்டைப் பாதிப்போ, இரட்டையே இல்லாத நிலையோ இல்லாதவர், அர்ஜுனனால் பாராட்டப் பெற்ற செயலுடையவர், அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

एकान्ते यस्य लीलारदवसनसुखास्वाददन्तक्षतानि
 व्याघ्रत्वग्रोमरूक्षा कनकमृदुतरक्षौमभूतीरजांसि।
दृष्ट्वा कस्मादियं श्रीस्त्वयि भवति वदेत्यालिगीः सोपहासं
 श्रुत्वा गौरी तदासीन्नतमुखकमला कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १६५

165. தனிமையில் அவரது விளையாட்டால் உதடுகளில் முத்தத்தையும் பற்களால் புண்பட்டதையும் தங்கத்தூள் போல் வெண்பட்டாடையில் துலங்குகிற விபூதித்தூளையும் பார்த்து "எதிலிருந்து இந்த அழகு உன்னிடம் ஏற்பட்டது"? எனக் கிண்டலுடனுள்ள தோழியின் சொல்லைக் கேட்டு, புலித்தோலாடையின் உரசலால் வரண்டகௌரி முகத்தாமரை குனிந்தவளாக ஆனாள்:அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

क्रीडन्नास्ते महेशो गिरिवरसुतया सप्रमोदं मनोज्ञे
हर्म्ये नैवाद्य देवा गदितुमवसरो यात मौनेन शीघ्रम् ।
एवं कोपारुणाक्षो विधिहरिमुखरान् वारयन् यद्धराभृन् -
मूले नन्दी गणेन्द्रैर्वसति तमपरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। १६६

166. "மஹேசன் மனத்தைக் கவர்கிற உப்பரிகையில் இமவானின் மகளுடன் மகிழ்ச்சியுடன் விளையாடிக்கொண்டிருக்கிறார். தேவர்களே! இன்று அவருடன் பேசுவதற்கான நேரமில்லை. மௌனமாக விரைவில் திரும்பிச் செல்லுங்கள்" என்று கோபத்தால் கண் சிவந்தவராக, மலையடிவாரத்தில் பிரும்மா. விஷ்ணு முதலானவரைத் தடுப்பவரான நந்தி கணத்தலைவர்களுடன் உள்ளார். அவரைவிட மேலானவரற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

अक्षक्रीडासु लब्धत्रिदशपुरवधूबोधनात्स्वान्तकाले
नूत्नानूत्नानुयोगात्सविशयशमनप्राप्तयत्सन्निधानः ।
पापारोपातिरोषप्रहरणसभयोद्भ्रान्तचित्रो यदुक्त्या
विप्रः कश्चिन्निधीनामधिपतिरभवत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। १६७

167. ஓர் அந்தணன் அப்ஸரப்பெண்ணுடன் சூதாடி வென்றான். அவள் கூறியதை நினைவிற் கொண்டு, தன் இறுதி நேரத்தில் யமனை நீ புதியவனா? பழையவனா என வினவினான். திகைத்த யமனால் சிவஸந்நிதிக்குக் கொண்டு செல்லப்பட்டான். வீணே பாபம் செய்தவன் என்று குற்றம் சுமத்தியதற்குத் தனக்குத் தண்டனை நேருமோ எனச் சித்ர குப்தன் கலங்கி நிற்க, சிவபெருமானின் ஆணையால் அந்தணன் நிதிபதியாகக் குபேரனாக ஆனான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

हंस्यां लब्धस्वजन्मा करटवरवपुस्स्वर्णकान्तिर्भुसुण्ठो
लेभे यस्य प्रसादादनितरसुलभं मृत्युभीतेरभावम् ।
कल्पे कल्पे वसिष्ठप्रमुखमुनिवरप्रश्रुतानेकवृत्तोऽ -
प्यास्ते यद्ध्यानयोगात्कनकगिरिवरे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। १६८

168. பெண் அன்னபட்சியிடமிருந்து தோன்றியவரும், காக்கை உடலைப்பெற்றவரும் தங்கம் போன்று ஒளிர்கிற மேனியருமான புசுண்டர், அவரது அருளால் மரணபயம் நீங்கப்பெற்றார். ஒவ்வொருகல்பத்திலும், வஸிஷ்டர் முதலான சிறந்த முனிவர்களிடமிருந்து பல வரலாறுகளைக் கேட்டறிந்தவராக, அவரைத் தியானம் செய்கிற யோகத்தால் தங்கமலையில் (மேருவில்) வசிக்கிறார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

धूम्राक्षं रक्तबीजं महिषमपि मधुं कैटभं चण्डमुण्डौ
क्रूरं शुम्भं निशुम्भं सुररिपुमपरं दुर्गमत्युग्रवृत्तम् ।
हत्वा युद्धे विधीन्द्रप्रमुखमकुटभादीप्तसिंहासनस्था
दुर्गा यस्यादिशक्तिः निखिलमवति तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥१६९

169. தூம்ராக்ஷன், ரக்தபீஜன், மஹிஷன், மது, கைடபன், சண்டன், முண்டன், கொடியவனான சும்பன், நிசும்பன், மற்றும் கொடும் செயலில் ஈடுபட்ட துர்கனைப் போரில் அழித்து துர்க்கை என்ற அவரது ஆதி சக்தி பிரும்மா, இந்திரன் முதலான தேவத்தலைவர்களின் கிரீட ஒளியால் ஒளிர்கிற ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தவளாக எல்லாவற்றையும்காக்கிறாள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

ज्योतिष्टोमाख्यसोमक्रतुसवनहविःपुञ्जमत्यन्तभक्त्या
गूढाकारं यमीशं सगणमपि शिवं यज्ञवाटप्रविष्टम् ।
हेरम्बोक्त्या प्रबुध्वा स्वयमपि मुदितो याज्यया यत्कराब्जे
दत्वा माराभिधोऽग्र्यः शिवनगरमगात्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥

170. மாறன் என்பவர் ஜ்யோதிஷ்டோமம் என்ற ஸோமவேள்வியில் ஹவிஸை, மிகவும் பக்தியுடன், தன்னை மறைத்துக் கொண்டு கணங்களுடன் வேள்விச்சாலையில் நுழைந்த சிவபெருமானிடம் (விநாயகரின் அறிவுறுத்தலால்

அறிந்து) மிகவும் மகிழ்ந்து தானே அவரது தாமரை போன்ற கையில் மந்திர உச்சரிப்புடன் அளித்து கைலாஸமடைந்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(ஸோமயாஜிமார நாயனார் வரலாறு.)

क्रीडार्थं स्वाग्रभागस्थितगिरितनुजावक्त्रचन्द्रावलोक
प्रोद्यत्कन्दर्परक्षामुकुलितवरदृक्फालपट्टाभिरामम्।
लीलाडोलानुकूलश्वसनमुखवृषप्रान्तरायातमोह -
भ्रान्तस्वर्धेनुमृग्यत्सुरनिजशरणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७१

171. கேளிக்கைக்காகத்தன்முன் அமர்ந்த மலைமகளின் முகத்தாமரையைக் காண்பதால் எழுந்த காமனை (ஆசையை)க் காப்பதற்காக மூடிய நெற்றிக் கண்ணுடன் அழகிய நெற்றிப்பட்டைகொண்டவர், கேளி ஊஞ்சலின் அசைவுக்கேற்ப மூச்சுவிடுகிற விருஷபத்தை நெருங்குவதற்கான காதல் மயக்கமுள்ள காமதேனுவால் தேடப்பெறுகிற தன் கோயில் உள்ளவர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

विध्यण्डानेककोटिच्युतिकरडमरुस्फारघोषान् नितान्तं
कल्पान्ताशङ्किलोकाभयकरवलयव्यालरत्नांशुकान्तम्।
तिर्यक्किञ्चित्प्रकुञ्चीकृतपदरविभावाप्तिमोदानुधावद् -
हस्तं प्रोच्चप्रसर्पच्छिखिलसितकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७२

172. பல கோடிப் பிரும்மாண்டங்களையும் நிலை தவறச் செய்கிற உடுக்கை பேரொலியால் பிரளயம் நேர்கிறதோ என்ற ஐயமடைந்த உலகினருக்கு அபயமளிக்கிற கையில் சுற்றிவளைந்துள்ள பாம்பின் ரத்தின ஒளியால் அழகானவர், சிறிது குறுக்கே வளைத்துள்ள திருவடியாகிற சூரியனின் ஒளியைப் பெறவேண்டி மகிழ்ச்சியுடன் தொடர்கிற கைகள் உள்ளவர். கொழுந்து விட்டுப்பரவி எரிகிற அக்னியைக் கையில் ஏந்தியவர். இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

भो भोः भ्रातस्तवैषा षडपि वदनता ब्रूहि मह्यं किमर्थं
जाता चेत्यादरेण द्विपवरवदनेनानुपृष्टे कुमारे।
स्वामिन्षट्च्छास्त्रमद्धाभ्यसितुमथ पितुश्चैकदेति ब्रुवाणे
दृष्ट्वाऽजिघ्रत्पुरा यो गुहमधिगिरि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७३

173. ஏ ! தம்பி ! உனக்கு ஆறு முகங்கள் ஏன் உண்டாயின ? என்று பரிவுடன் விநாயகரால் குமரன் கேட்கப்பெற்ற போது, ''அண்ணா ! தந்தையிடமிருந்து ஒரே சமயத்தில் ஆறு சாஸ்திரங்களையும் கற்பதற்கே'' என விடையளித்ததும், மலை மீதிருந்த குகனை இவர் கட்டி அணைத்தார். இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

मत्स्याक्षि क्रूरकूर्मात् पृथुतरकठिनत्वग् वराहेन्द्रदंष्ट्रा
घोरत्रैविक्रमास्थि प्रबलनरहरिस्फाररक्ताजिनानि।
विष्णोर्नेत्राम्बुजातं विधिमुखनिचयं पूषदन्तांश्च धृत्वा
यस्तद्दर्पप्रशान्त्यै प्रथयति विभुतां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७४

174. மீனின் கண், கொடுஞ்செயலுள்ள பெரும் ஆமையின் ஓடு, பன்றியின் தெற்றிப்பல், கொடிய திரிவிக்ரமரின் எலும்பு, நரஸிம்ஹரின் ரத்தம் தோய்ந்த தோல், விஷ்ணுவின் கண், பிரும்மாவின் தலை, பூஷாவின் பற்கள், இவற்றை அவர்களது செருக்கையடக்க ஏற்று தனது எங்கும் நிறைந்த நிலையைப் பலரறியச் செய்கிறார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

आसेतोरासुमेरोर्धरणिगतनिजक्षेत्रवर्येषु नित्यं
साहस्राकारभाजां स्वतनुमधि च जुषच्चित्कलानां प्रमोदात्।
एकां संयोजयंस्तां निशि निशि निजहृत्पङ्कजे सन्निरुन्धन्
यो भात्यानन्दमूर्तिर्बहुविधफलदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७५

175. ஸேதுவிலிருந்து மேரு வரை, பூமியிலுள்ள தனது சிறந்த க்ஷேத்திரங்களில் உள்ள தனது உருவத்தில் ஆயிரக்கணக்கான வடிவம் கொண்ட சித்கலைகளில்

ஒவ்வொன்றை ஒவ்வொரு இரவிலும், இணைத்து அதனை தன் இதயத்தினுள் அடக்கி ஆனந்த மூர்த்தியாக உள்ளார். பலதரப்பட்ட பலன்களைத் தருகிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कल्पे कल्पे स्वकीयप्रभवलयभयं त्यक्तुमाद्ये परार्धे
वेदा यं कालकालं बहुविधतपसा तोषयित्वा यदुक्त्या।
त्रैसाहस्रं द्विजत्वं दिविषदसुलभं लब्धवन्तः क्रमेण
नित्यं यं पूजयन्ति स्वसरणिविधिना कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥१७६

176. வேதங்கள் தனது தோன்றிமறைகிற நிலையில் ஏற்படுகிற பயம் நீங்க பிரும்மாவின் ஆயுளின் முன்பாதியில் பரார்த்தத்தில், காலனுக்குக்காலனான சிவனை பலவாறான தவத்தால் மகிழச் செய்து, அவரது உத்தரவால் தேவர்களாலும் பெற இயலாத மூவாயிரம் அந்தணர் நிலையைப் பெற்று தன் முறைப்படி தினமும் அவரை வழிபடுகின்றன. அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यस्योत्कर्षं च विष्णोस्सदनमधिगतो वह्निसन्दग्धपीठे
स्थित्वा श्रुत्यन्तवेद्यं शिवमपि परमं बोधयन्स्वां च भूतिम्।
धिक्कुर्वन् दुर्मतीनां निकरमपि यदीयाज्ञया बन्धुवर्गैः
विप्रः कश्चिद् बुधेड्यो रजतगिरिमगात्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥

177. அறிவாளிகளால் புகழத்தக்க (ஹரதத்தர் என்ற) அந்தணர், விஷ்ணுவின் ஆலயத்தை அடைந்து நெருப்பால் பொசுக்குகிற பீடத்தில் அமர்ந்து, சிவனது உயர்வையும் உபனிஷத்துக்களால் உணரத்தக்க நிலையையும் தனது பெருமையையும் பலரறியக் கூறி, துர்புத்திகளின் கூட்டத்தை நொந்து கொண்டு, இவரது உத்தரவால் பந்துக் கூட்டத்துடன் கைலாயத்தை அடைந்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

गौर्याः पाणिं गृहीत्वा हिमगिरिकटके सत्वरं स्थूलपृष्ठं
धर्माकारं वृषेन्द्रं निजचरणजवोल्लङ्घिताम्भोधिवर्गम्।
अध्यारूढो निजाङ्कस्थितगिरितनयां प्रेयसीं वाग्विलासैः
लज्जानम्रां प्रकुर्वन्नतनुत विहृतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७८

178. இமயத்தின் தாழ்வரையில் கௌரியின் கைபிடித்து, வேகத்துடன் பெரு முதுகுள்ளவனும், தர்மவடிவினனும் தன் கால்களின் வேகத்தால் கடல் வரிசையையும் தாண்டியவனுமான விருஷபத்தின் மீது ஏறி அமர்ந்தவர், தன் மடி மீதமர்ந்த அன்புமிக்க மலைமகளை தன் சொல்லழகால் வெட்கிக்குனியச் செய்து கேளிக்கை புரிகிறார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यत्फालस्थं मृगाङ्कं स्वरदमिति मुधा शुण्डयाऽऽदाय तस्मिन्
बिम्बे दृष्टस्ववक्त्रप्रतिफलनसमाकर्षणव्यग्रचित्तम्।
दानामोदानुधावद्भ्रमरमुखरितस्वर्गपातालभागं
योऽजिघ्रत्स्वाङ्कसंस्थं गजमुखमनिशं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १७९

179. இவரது நெற்றியிலுள்ள சந்திரகலையைத் தன் தந்தமென்ற எண்ணத்துடன் அறியாமையால் துதிக்கையால் இழுத்து அதில் பிரதிபலிக்கிற தன் உருவத்தை இழுப்பதில் முனைந்த சித்தமுள்ளவரும், மத நீரின் மணத்தால் அதனை மொய்க்க வருகிற வண்டுகளின் ரீங்காரத்தை ஸ்வர்கத்திலும் பாதாளத்திலும் எதிரொலிக்கச் செய்பவருமான யானை முகத்தோனை மடிமீதமர்த்தி முகர்ந்து பார்ப்பவரான குஞ்சிதபாதரை எப்போதும் வழிபடுகிறேன்.

कात्यायन्याः कराब्जं दिनकरवदनाधीतवेदार्थबोधात्
लब्धानन्दान्तरङ्गप्रशमिततमसस्तापसस्याश्रमे यः।
गृह्णन् संसारबाधाविधिकभयकरे मग्नसत्वप्रपञ्चं
नित्यं रक्षन्नजस्रं जयति शिवपुरे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८०

180. சூரியனின் வாயிலிருந்து வேதங்களின் பொருளறிந்ததால் பெற்ற ஆனந்தத்தால் அறியாமையகன்ற (காத்யாயனர் என்ற) முனிவரின் ஆசிரமத்தில் அவரது புதல்வியான காத்யாயனியின் கரம்பிடித்து, மிகப் பயங்கரமான ஸம்ஸாரக்கடலில் மூழ்கிய உயிரினமுள்ள உலகை எப்போதும் காப்பவராக சிவபுரத்தில் (திருவீழிமிழலையில்) விளங்குகிருர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यन्मूर्तिं ब्रह्मनिष्ठाः परमहसि पदे प्राज्ञमानन्दरूपं
शैवास्सादाख्यमूर्तिं हरिमिति च परे शक्तिमन्येऽपरे तु।
विघ्नेशं चेतरेऽह्नां पतिमिति बटुकस्कन्दविध्यग्निशक्रान्
इन्दुं केचिद्विभाव्याखिलसुखमभजन्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८१

181. இவரது வடிவை, பிரும்ம ஞானிகள் பேரொளி மண்டலத்தில் உள்ள ஆனந்த வடிவினஞன பிராஜ்ஞஞகவும், சைவர்கள் ஸதாசிவராகவும், மற்றவர் ஹரியாகவும் சக்தியாகவும், விக்னேசராகவும், ஸூரியஞகவும், வடுகபைரவராகவும், ஸ்கந்தராகவும், பிரும்மாவாகவும், அக்னியாகவும், இந்திரஞகவும் சந்திரஞகவும் பாவனை செய்து அனைத்தின்பத்தையும் பெற்றனர். குஞ்சிதபாதரான இவரை வழிபடுகிறேன்.

एकं ब्रह्माद्वितीयं त्रिविधमपि चतुर्वाङ्मयं पञ्चबाण -
भ्रातृव्यं षड्विपक्षद्विषदभिविनुतं सप्तजिह्वालिकाक्षम्।
अष्टम्येणाङ्कचूडं नवरसनटनालोलवासो दशाशं
रुद्रैस्सादित्यवर्गैः सततनतपदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १८२

182. ஒரே பிரும்ஹம், இரண்டாவதற்றவர் மும்மூர்த்திகளானவர் (பரா, பச்யந்தீ, மத்த்யமா, வைகரீ என்று) நான்கு வாக்குகளானவர், ஐந்து பாணங்களுள்ள மன்மதனுக்கு எதிரி, காமம் குரோதம் முதலிய தவருன 6 எண்ணங்களின் எதிரிகளால் துதிக்கப் பெற்றவர், ஏழு நாக்குகளுள்ள அக்கினியான நெற்றிக்கண் உடையவர், எட்டாம் திதியின்

சந்திரனைச் சூடியவர். ஒன்பது சுவையுள்ள நடனத்தின் அசைகிற ஆடைநுனியாகிய பத்து திசையுள்ளவர். பதினொரு ருத்ரர்களாலும் பன்னிரண்டு ஆதித்யர்களாலும் எப்போதும் வணங்கப்பெற்ற திருவடியுள்ளவர், இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

विष्णोर्ललाटदेशच्युतरुधिरझरीसङ्गमेनाप्यपूर्णं
ब्राह्मं हस्ते कपालं डमरुमपि वहन् विश्वकद्रून् स्वपार्श्वे ।
दंष्ट्राग्राभापिशङ्गीकृतविपुलजटो भैरवः क्षेत्रपालो
विश्वं रक्षन्नुपाधेर्यमपि भजति तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १८३

183. விஷ்ணுவின் நெற்றியிலிருந்து கசிகிற ரத்த அருவி சேர்ந்தும் நிறைவுறாத பிரும்மாவின் மண்டையோட்டையும் உடுக்கையும் கையில் ஏந்தி, நாய்களைத் தன் பக்கத்தில் கொண்டு தெற்றிப்பல்லின் ஒளியால் செம்பட்டை படிந்த பெருஞ்சடை உள்ளவரான க்ஷேத்ரபால பைரவர் உலகத்தைத் துன்பத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டு இவரையும் வழிபடுகிறார். இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सीताहस्ताब्जपिण्डीकृतवरपृथिवीलिङ्गमूलानुकर्ष -
त्रुट्यद्वालास्यशाखामृगपतिरचितस्तोत्रतुष्टान्तरङ्गम् ।
रक्षोवृन्दप्रहारप्रभवकलिनिवृत्त्याश्रिताम्भोधितीर -
श्रीरामप्रष्ठराजार्चितपदयुगलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १८४

184. ஸீதையின் தாமரை போன்ற கையால் பிடிக்கப்பட்ட மண்ணாலான லிங்கத்தை வேருடன் பிடுங்குவதில் வாலறுந்த ஆஞ்ஜநேயரது துதியால் உள்ளம் குளிர்ந்தவரும், ராக்ஷஸக் கூட்டத்தை அழிப்பதால் ஏற்பட்ட பாபத்தைப் போக்குவதற்காக கடற்கரையை அடைந்த ஸ்ரீராமன் முதலிய அரசர்களால் வணங்கப்பெற்ற திருவடியுள்ளவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

योगाभिर्बीजसंज्ञात्समुदितपरमानन्दकाष्ठासमाधि -
स्थित्या वल्मीकगूढां तनुमवनिगतां नीतकल्पां धरन् स्वाम्।
श्रीमान् श्रीमूलसंज्ञो नृपनुतचरितो नित्यनिस्सङ्गविद्योऽ-
प्याद्यस्सिद्धो यमन्तः कलयति नितरां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्।।

185. நிர்பீஜஸமாதியோகத்தால் பரமானந்த எல்லையான ஸமாதியிலிருந்ததால் புற்றுமூடிப் பூமியில் மறைந்த உடலைத்தாங்கியவராக, அரசர்களால் பாராட்டப் பெற்ற நடைமுறை கொண்டவரும், நித்யமான பற்றற்றஜ்ஞானமுள்ளவரும் ஆதிஸித்தருமான திருமூலர் என்பவர் இவரை உள்ளத்தினுள் எப்போதும் காண்கிறார். இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

हल्लीसोन्मुख्यकेलीनमितनिजशिरस्संस्थगङ्गामुखेन्दोः
आलोकोत्पन्नकोपत्वरितगतिशिवासांत्वनव्यग्रचित्तम्।
दृष्ट्वा कण्ठस्थनीलं जलमुगिति मुधाऽऽयातकौमारवाहात्
बिभ्यद्भूषाफणीनां मणिरुचि सुषमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्।। १८६

186. பின்னல் கோலாட்டம் முதலிய விளையாட்டுகளின் போது வணங்கிய இவரது சிரத்தில் உள்ள கங்கையில் சந்திரனது போன்ற ஒளிமிக்க முகத்தைக் காண்பதால் ஏற்பட்ட கோபத்தால் வேகமாக நடக்கிற தேவியின் ஸமாதானத்தில் மனமொன்றியவரும், கழுத்தில் உள்ள நீலத்தை மேகமென்று நினைத்து வந்த குமாரனது வாஹனமான மயிலிடமிருந்து பயந்த ஆபரணமான ஸர்ப்பங்களின் ரத்ன ஒளியால் அழகானவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

स्वर्गाधीशोपदिष्टामखिलसुखकरीं यत्तिरोधानशक्तेः
विद्यां मोदाज्जपित्वा सुरयुवतिसमामाप भैमीं स्वकान्ताम्।
यत्सेवानिर्गतार्किग्रहरचितमहोपद्रवो नैषधेन्द्रो
विश्वं रक्षन्निजान्ते घुसदनमभजत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्।। १८७

187. நிஷத தேசத்தரசரான நளன், இந்திரனால் உபதேசிக்கப்பெற்ற எங்கும் இன்பம் தரக்கூடிய திரோதான சக்தியின் (திரஸ்கரிணீயின்) மந்திரத்தை மகிழ்ச்சியுடன் ஜபித்து அப்ஸரஸ் போன்ற தமயந்தியை தன் மனைவியாகப் பெற்றான். இவரது ஸேவையால் வெளியேறிய சனிக்கிரஹத்தின் பெரும்பாதை நீங்கப்பெற்று, உலகைக் காப்பாற்றுபவனாகி, தன் இறுதியில் ஸ்வர்கம் அடைந்தான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कन्दर्पाणां बहूनां प्रसवकरवरापाङ्गवीक्षाविलासैः
उद्याने राजताद्रेर्हरिधृतसुतनोः शास्त्रभिख्यं कुमारम् ।
उत्पाद्यायातगौरीमधुरवचनतः पालकत्वं वनानां
सर्वेषां दत्तवान् यस्त्रिजगदभिनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १८८

188. கைலாயத்தின் தோட்டத்தில், பல மன்மதர்களைப் படைக்கிற கடைக்கண் பார்வையால் ஹரியால் ஏற்கப் பெற்ற மோகினியிடம் சாஸ்தா என்ற குமரனைப் பெற்று, அங்கு வந்த பார்வதியின் இனிய பேச்சால், அவருக்கு எல்லாக் காடுகளைக்காப்பாற்றுகிற நிலையை அளித்தார். மூவுலகமும் துதிக்கிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

मुग्धे कैलासवासी जरठशुभकरो गौरि चर्माम्बरोऽसौ
ब्रह्मन्नैश्वर्यदोऽम्बे पितृभुवि नटकृद्विप्र कैवल्यदाता ।
एवं यद्वाक्यभङ्गीं मुहुरपि च तिरस्कृत्य सभ्रान्तरालं
गन्तुं व्यग्रामुमां योऽप्यकुरुत मुदितां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १८९

189. (சிவன் அந்தணக்கிழவராக மாறுவேஷத்தில். பார்வதி சிவனை மணக்கத் தவம் புரிகிறாள். இருவரது சம்பாஷணை.)

-"பேதையே அவர் கைலாஸத்தில் வசிப்பவர்,"
- "கிழவரே! மங்களத்தைச் செய்பவர்."
- கௌரி! அவர் தோலாடை உடுத்தியவர்.

- *அந்தணரே! அவர் பேராளுமை தருபவர்.*

- *அம்மா ! சுமசானத்தில் நடனமாடுபவர்.*

- *அந்தணரே! கைவல்யத்தை (தனித்த நிலையை) தருபவர்.*

இவ்வாறு செல்கிற பேச்சின் போக்கை நிறுத்திவிட்டு வீட்டினுள் செல்லமுயன்ற தேவியை (தன் சுயநிலையைக் காட்டி) மகிழ்வித்தவரான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यद्धासेन्दुप्रभूता निखिलमपि जगद्व्यापिनी चन्द्रिकाभा -
प्याविष्णु स्थावरान्तं हृदयमधिगतं बाह्यगं चान्धकारम् ।
दूरीकृत्याशु सर्वान् स्वपदसरसिजध्यानशीलानजस्रं
रक्षत्याद्यन्तहीनं गुरुभृगुविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १९०

190. அவரது புன் சிரிப்பாகிற சந்திரனிலிருந்து வெளியான நிலவொளி உலகமனைத்திலும் பரவி, விஷ்ணுவிலிருந்து தாவரம் வரை உள்ளத்தை எட்டி, அங்கு உள்ளும் புறமும் பரவியுள்ள இருட்டை விரட்டி யாவரையும் உடன் எப்போதும் தன் திருவடித்தாமரைகளைத் தியானம் செய்யும் இயல்புள்ளவராக்கிக் காப்பாற்றுபவரும், ஆதியும் அந்தமுமற்றவரும் பிருஹஸ்பதியாலும் சுக்கிரராலும் துதிக்கப்பெற்றவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

गोदावर्यास्तटस्थोऽनृतवचनपरो दुष्टकार्तान्तिको यत्
क्षेत्रे गौल्यां जनित्वा निजसुकृतलवात्स्वीयपातोक्तिदोषम् ।
भस्मीकर्तुं चिरं यं स्तुतिभिरभिनमन् सुन्दराङ्गो यदुक्त्या
जातो यत्क्षेत्रपालो जयति तमसमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १९१

191. கோதாவரி ஆற்றங்கரையில் பொய் சொல்கிற பழக்கமுள்ள துஷ்டனான சோதிடன் சிதம்பரத்தில் கௌளியிடம் பிறந்து தன் புண்யலேசத்தால் தான் ஈனப் பிறவி பெற்றதற்கான தோஷத்தைச் சாம்பலாக்க வெகுநாட்கள் இவரைத் துதித்தான். இவரது அருளாசியால் க்ஷேத்ரத்தின் காவலாளியாக (க்ஷேத்ரபாலகராக) ஆனான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(அர்த்தயாம அழகரின் வரலாறு இது. அந்தப் பல்லி உருவம், சித்ஸபைக்குக் கீழ்புறம் கொடுங்கையில். அதற்கு அருளிய பல்லீச்வரர் இரண்டாவது வடக்குப் பிராகாரத்தில்.)

भुक्त्वा हालाहलांशं युधि निहततनुं दारुकाख्यं सुरारिं
कृत्वा घोरस्वकृत्यप्रचलितभुवनां भद्रकालीं शिवो यः।
प्रत्येत्यानन्दनृत्तं पितृपतिभुवने दर्शयित्वा तयाऽण्डान्
सर्वान्संरक्षतीशस्तमिनविधुनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९२

192. (சிவன் உண்ட) ஹாலாஹலத்தின் பகுதியைத்தானும் உண்டு. தாருகன் என்ற அசுரனைப் போரில் அழித்து, கோரமான தன் செயலால் உலகை நடுங்கச்செய்த பத்ரகாளியை இந்த சிவன் அணுகி மயானத்தில் தனது நடனத்தைக் காட்டி அவள் மூலம் உலகைக் காக்கிறார். சூர்யனும் சந்திரனும் துதிக்கிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यस्योद्वाहे हिमाद्रिं गतवति निखिलप्राणिवर्गेऽर्कसूनोः
आशामौन्नत्यभाजं रचयितुमधरां विन्ध्यमद्रिञ्च दैत्यम्।
धिक्कर्तुं कुम्भजन्मा चुलुकितजलधिः प्रेषितो येन मोदात्
तं देवं कोटिकोटि द्युमणितनुरुचिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९३

193. இவரது திருமணத்தில் எல்லா உயிரினமும் இமயமலையை அடைந்தபோது யமனின் திசையை உயர்த்தவும் விந்தியமலையையும் இல்வலனையும் தாழ்த்தவும் கடலைக்குடித்தவரான அகத்தியர் சந்தோஷத்துடன் அனுப்பப்பெற்றார். கோடி கோடி சூர்யர்களுக்கொப்பான ஒளி கொண்ட அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

वीणासंक्रान्तकान्तामधुरतररसालापगीतिप्रमोद -
प्रोद्यद्रोमाञ्च कूटद्विगुणतनुलताभोगसौन्दर्यशिल्पम्।
यन्नानारत्नभूषाकिरणकबलिते दिक्तटे वप्रलीलां
कुर्वन्त्यद्यापि मोदात् द्विरदपरिवृढाः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९४

194. வீணையை மீட்டுகிற மனைவியின் (கௌரியின்) இனிய சுவை மிக்க கீத ஆலாபனையின் சந்தோஷத்தால் வெளியான மயிர் கூச்சத்தால் இரட்டித்த உடலழகைக் கொண்ட இவரது பலரத்தின ஆபரணங்களில் ஒளிக்கதிரால் விழுங்கப்பட்ட திக்கெல்லைகளில் யானைகள் கரைமுட்டி விளையாடுகின்றன. அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कस्त्वं किन्नामधेयो धरणिसुरवपुः कम्पितापादचूडो
  गोत्रं सूत्रं कुलं त्वत्पितरमपि तथा मातरं बन्धुवर्गम् ।
शत्रुं मित्रं कलत्रं तनयमपि वयो ज्ञातुमीहे तवेति
  प्रोवाचाद्रौ पुरा यं प्रति गिरितनया कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १९५

195. "நீர் யார்? என்ன பெயர்? உடலால் அந்தணர், காலிலிருந்து தலைவரை நடுங்குபவர். கோத்திரம், ஸூத்ரம், குலம், உமது தந்தை தாய், பந்து வரிசை, எதிரி, நண்பன், மனைவி, புதல்வன், உமது வயது எல்லாவற்றையும் அறிய விரும்புகிறேன்" என்று பார்வதி இவரைக் கேட்டாள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

स्कन्दे विघ्नेशशुण्डां स्वकरसरसिजैः मानयित्वा तदुक्तैः
  स्वीयैर्वक्त्राक्षिसंख्यागणनपरिभवै रोदिते सानुकम्पा ।
देवी दृष्ट्वा स्वसूनोश्चरितमपि यदीयाज्ञया हेमकूटे
  वाचा सप्रेमभाजावतनुत तनयौ कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ १९६

196. ஹேமகூடத்தில் ஸ்கந்தர் விக்னேசரது துதிக்கையைத் தனது தாமரைக் கைகளால் அளந்தார், தன் முகங்களையும் கண்களையும் (விக்னேசர்) எண்ணிய அவமானத்தால் அழுதார், இதனைக் கண்டு தேவி பரிவு கொண்டவளாய், தன் மகனின் நடைமுறையைக் கண்டு இவரது ஆணையால் இரு புதல்வர்களையும் வாக்கால் (இதமாகக் கூறி) அன்புள்ளவர்களாக ஆக்கினுள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

स्वामिन् माऽस्त्वाधिपत्यं शमनपदमहाराज्यभारे ममालं
पाशं दण्डञ्च वाहं महिषमपि भटान् त्वत्पदेऽर्पयेऽहम्।
इत्युक्त्वाग्रे नतास्यं शिवयजनपराकर्षकुप्यद्गणेन्द्रो -
द्विग्नं दृष्ट्वा यमं योऽप्यकुरुत मुदितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९७

197. சிவவழிபாட்டில் ஈடுபட்டவனின் உயிரைப் பற்றியதால் சிவ கணங்கள் கோபித்ததில் மனம் குமுறி ஸ்வாமி! இந்த யமபதவியாகிய அரசை நிர்வகிப்பதிலுள்ள அதிகாரம் வேண்டாம். போதும். பாசம், தண்டம், வாகனமான எருமை, மற்றும் படைவீரர்களை உமது திருவடியில் அர்ப்பணம் செய்கிறேன்''. என்று தன்முன், தலைவணங்கி அழுகிற யமனைக் கண்டு அவனை மகிழ்வித்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

पित्रोर्दुःखैकहेतुं कमठनिभतनुं पापजां स्वां प्रमोक्तुं
वार्धौ स्थित्वा निरुन्धन् रथमपि तरणेस्तन्मुखाद्यस्य विद्याम्।
लब्ध्वा जप्त्वाऽथ भूत्वा सुरयुवतिसमाह्लादि सौन्दर्यकायो
राजा स्वामात्यपुत्रीपरिणयमकरोत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९८

198. பெற்றோருக்குத் துயரளிக்கின்ற தனது பாபத்தால் அமைந்த ஆமைபோன்ற உடலமைப்பைக்களைய, கடலில் நின்று ஸூரியனின் தேரோட்டத்தை நிறுத்தி அவர் வாயிலாக சிவபெருமானது மந்திரத்தைப் பெற்று, அதனை ஜபித்து தேவப்பெண்கள் விரும்புகிற அழகுள்ள மேனி பெற்ற அரசன் தன் மந்திரியின் குமாரியை மணந்தான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

किं दारैः किञ्च पुत्रैः किमिति च वसुभिः किं सुहृद्भिः किमन्यैः
भूयान्नास्त्येव सत्यं फलमिति हृदये सन्ततं चिन्तयन्तः।
त्यक्त्वा दुःखादिहेतुं यदमलवसुधाप्रान्तक्लृप्ताश्रमास्ते
सिद्धास्सर्वे बभूवुर्यदनुगतधियः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ १९९

199. மனைவிகளால் ஆவதென்ன ? புதல்வர்களால் ஆவதென்ன ? செல்வத்தால் ஆவதென்ன ? நண்பர்களால் ஆவதென்ன ? மற்றவற்ருல் என்ன பயன் ? உண்மையான பயன் ஒன்றுமில்லை என எப்போதும் உள்ளத்தில் சிந்திப்பவர்கள் துக்கத்திற்குக் காரணமாவதனைத்தையும் விட்டு, அவரது தூயக்ஷேத்திரத்தின் அருகே ஆசிரமங்கள் அமைத்து அவரைத் தொடர்கிற சித்தமுள்ளவர்களாக ஸித்தர்களாக ஆனுர்கள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

हेमाद्रिप्रान्तभागस्थलकमलवनाक्रीडनोद्योगहंस -
व्रातालोकापदेशात्सविधगतशिवाहस्तगाढोपगूढम् ।
नानाकारानुभूतानुपमरतिसमुत्कूजितार्याकुचाग्र -
स्पर्शोन्मृष्टालिकान्तस्थलसितभसितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २००

200. மேருவின் அருகில், ஸ்தலத்தாமரைக்காட்டில் விளையாடுகிற அன்னப்பறவை கூட்டத்தைப் பார்வையிடும் சாக்கில், அருகிலுள்ள தேவியின் கையால் இறுக அணைக்கப்பெற்றவரும், பலவகையில் ஒப்பற்ற உயர்ந்த காம விளையாட்டில் தேவியின் மார்பகநுனி தடவியதால் நெற்றியிலிட்ட விபூதிப்பூச்சு அழிந்தவருமான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன். (200)

द्रष्टुं नैवाद्य विष्णो भवति च समयो वेदवाक्यार्थबोधे
ब्रह्मन्कालो न चैषो हरिमुखविबुधा गच्छतान्यत्र यूयम् ।
आस्तां वीणामुने सोऽप्युपदिशति परं ब्रह्मतत्त्वं मुनीनां
इत्युक्त्वा तान्यदुक्त्या त्वरयति गणराट् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥

201. "விஷ்ணுவே ! இன்று தர்சிக்க நேரமில்லை. பிரும்மாவே ! வேதத்தின் பொருளறிய இது நேரமல்ல. இந்திரன் முதலான தேவர்களே ! வேறிடம் நீங்கள் செல்லுங்கள். நாரதரே ! இரும். அவர் முனிவர்களுக்கு பரபிரும்ஹநிலை பற்றி உபதேசிக்கிருர்." என்று கூறி கணத்தலைவர் அவர்களைத் துரிதப்படுத்துகிருர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன். (201)

यद्वर्षं मानुषाणां तदपि च दिवसं देवतानां प्रसिद्धं
प्रोक्तं तच्चापकुम्भ प्रथमयुगहरिस्त्रीषु मासेषु षट्सु।
आसन् यन्नृत्तमूर्तेरुदयमुखवराभ्यर्चनास्ते तमिन्द्रा-
घष्टाशापालपूर्वाखिलसुरविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०२

202. மனிதர்களின் ஓராண்டு தேவர்களுக்கு ஒரு நாள் என்று பலரறிந்ததே, ஒவ்வோர் ஆண்டும் மார்கழி, மாசி, சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாசி என்ற ஆறுமாதங்களில் நடராஜரின் விடியற்காலை, காலைஸந்தி, நடுப்பகல், ஸாயங்காலம், முன்னிரவு, அர்த்தயாமம் என்ற ஆறுகால பூஜையாக நடக்கின்றன. இந்திரன் முதலான எட்டு திக்பாலகர்களை முன்னிட்ட தேவர்களால் துதிக்கப்பெறுகிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यस्येशस्यांशभूताश्शरभ-वटुकराड्वीरभद्रादिदेवाः
कल्पे कल्पेऽम्बुजाक्षद्रुहिणमुखधृतक्रूरसत्वोग्रकृत्यम्।
निघ्नन्तस्सार्वकालं जगदपि सकलं पालयन्तोऽन्तरङ्गे
ध्यायन्तो यं जयन्ति प्रसृमरमहसं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०३

203. சரபர், பைரவர், வீரபத்ரர் முதலான தேவர்கள், இந்த ஈசனின் அம்சமாகத் தோன்றியவர். ஒவ்வொரு கல்பத்திலும் விஷ்ணு பிரும்மா முதலானவர் புரிகிற கொடூரச் செயல்களைத் தடுத்து நிறுத்துபவர்களாக உலகத்தை எக்காலும் காக்கின்றவர்களாக, உள்ளத்தில் இவரை தியானித்தவர்களாக வெற்றிபெறுகிறார்கள். எங்கும் பரவுகிற இயல்புள்ள அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कुप्यत्तातोक्तिभङ्ग्या विपिनमधिगमन् विप्रगोसङ्घरक्षां
कुर्वंस्तत्रैव दिष्ट्या सरसि च विहृतिं तन्वतीनां सुरीणाम्।
गायन्तीनां मनांसि स्ववशमपि नयन् यत्पदध्यानयोगात्
रेजे कश्चिन्नरेन्द्रो जितरिपुनिकरः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०४

204. கோபிக்கிற தந்தையின் கொடுஞ்சொல்லால் காட்டை அடைந்து, அந்தணர் மற்றும் பசுக்களின் காப்பைப் புரிபவனுக, அங்கேயே இவரது தியானயோகத்தால் எதேச்சையாக ஓடையில் நீராடிப்பாடுகின்ற தேவப்பெண்களின் மனத்தைத் தன்பால் ஈர்த்தவனுக, அரசனுகி எதிரிக் கூட்டத்தை வென்றவனுக விளங்கினுன். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सौवर्णश्मश्रुकान्त्या कपिशकुमुदिनीनाथबिम्बं विजेतुं
नासालोलम्बभूषामणिरुचिभिरिव प्रोन्नटद्दिव्यसिन्धुम्।
मूर्ध्ना बिभ्राणमच्छच्छविमुखकमलामोदपुष्पंधयाक्षं
नानाविद्यांकुराभद्विजगणलसितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०५

205. தனது தங்க மீசை ஒளியால், மங்கிய சந்திரனது பிம்பத்தை வெல்லவும், மூக்கில் தொங்குகிற ஆபரணத்து ரத்னத்து ஒளிகளால் குதித்தாடுகிற கங்கையை வெல்லவும், தலையில் தரித்தவரும் தூய முகத்தாமரை மணத்தைக் குடிக்கவருகிற வண்டு போன்ற கண்களுள்ளவரும், பற்பல வித்யைகளின் முளை போன்ற பல்வரிசையால் அழகியவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

ज्वालामालान्तराल प्रविलसदमलस्वाङ्गलोलम्ब चेला
मूलालग्नालिशिल्पोल्ललितकटिरटत्किङ्किणी जालभूषम्।
नैलीहालाहलाभाकबलित जलमुक्तारकोलाहलोद्यत् -
केलीमायूरलास्यप्रमुदितललनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०६

206. அக்னிஜ்வாலையின் இடையே விளங்குகிற தன் உடல் மீது ஆடுகிற ஆடையின் நுனியில் மொய்க்கிற வண்டுக்கூட்டம் போன்று கும்மாளம் போடுகிற இடுப்பில் ஒலிக்கின்ற சதங்கை வரிசையுள்ள இடுப்பணி கொண்டவரும், நீலநிறமுள்ள ஹாலா ஹலத்தின் ஒளியால் விழுங்கப்பெற்ற மேகத்தின் பேரிடி முழக்கத்தால் சிலிர்த்தெழுகிற மயிலின் ஆட்டத்தால் மகிழ்கிற

அம்பிகையுடன் கூடியவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यो यस्य ज्ञानशक्तिं दहरकुहरिणीं श्रीमहाषोडशार्णां
विद्यां श्रीनाथवीरैः गुरुभिरपि नुतां योगिनीदूतिसेव्याम्।
आत्माभिन्नां शिवां तां हृदि परिचिनुते स स्वयं निर्विकल्पो
भूत्वा योगीन्द्रपूज्यो भवति तमगुणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०७

207. இவரது ஜ்ஞான சக்தியும் இதய பரவெளியில் துலங்குபவளும் பதினாறு அக்ஷரங்கள் கொண்ட மந்திரமுடையவளும், சிறப்புமிக்க நாதர்களாலும் வீரர்களாலும் குருக்களாலும் துதிக்கப்பெறுபவளும் யோகினிகளாலும் தூதிகளாலும் வழிபடப்பெறுபவளும், இவரை விட்டு வேறுபடாதவளுமான தேவியை உள்ளத்தில் உணர்பவன், ஐயமற்றவனாக, சிறந்தயோகிகளாலும் வழிபடப்பெற்றவனாக, ஆவான். எந்தக் குறியீடுமற்ற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यच्छम्भोर्नृत्तरङ्गं पितृभुवनमभूत्कालकूटं च भिक्षा
भूषा नागा विभूतिर्मलयभवरजो ब्रह्मशीर्षं कपालम्।
अद्रिः शय्या च वस्त्रं त्वगपि सहकृता भूतभेतालवर्गाः
वाहश्चोक्षापतिस्तं धृतहरिविशिखं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०८

208. சம்புவின் நடன அரங்கம் மயானம்; உணவு காலகூடம், ஆபரணம் பாம்புகள், சந்தனப்பூச்சு விபூதி, பிரும்மாவின் மண்டை ஓடு கப்பரை, மலை படுக்கை; ஆடை தோல்; துணைவர் பூதங்களும் வேதாளங்களும்; வாஹனம் இடபம்; விஷ்ணுவைப் பாணமாக ஏந்திய அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

वासिष्ठब्रह्मदण्डप्रमुषितसुधनुर्बाणसेनासमूहो
ब्राह्मण्यप्राप्तिकामो रचितवरतपाः कौशिकः क्षत्रवर्यः।
तुष्टस्वायम्भुवास्यप्रभवितसवितृख्यात यच्छक्ति विद्या -
प्राप्तस्वेष्टानुभावो भुवि जयतितरां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २०९

209. கௌசிகர் என்ற சிறந்த க்ஷத்திரியர், வஸிஷ்டரின் பிரும்மதண்டத்தால் வில்லும் பாணமும் ஸேனையும் பறிக்கப்பட்டவராக, அந்தணர் நிலை பெற விரும்பியவராக, உயர்ந்த தவமியற்றியவராக, (தவத்தில்) மகிழ்ந்த பிரும்மாவின் வாயிலாக ஸவிதா என்ற தேவனுை இவரது சக்தியான மந்திரம் பெற்றதால் தான் விரும்பியதைப் பெற்றவராக உலகில் விளங்குகிறுர்.

यातायातादिहीनं यमनियमपरप्रार्थित ब्रह्मतत्वं

यज्ञं यज्ञाग्निरूपं यजनकरबुधैरीड्यमानं त्रिसन्ध्यम् ।

यायार्थाकारलीनाखिल भुवनमजं यामिनीशानचूडं

याच्ञाकापट्यहीनं यतिवरविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २१०

210. போக்குவரத்தற்றவரும், யமங்களிலும் நியமங்களிலும் தேர்ந்த யோகிகளால் வேண்டப்பட்ட பிரும்ம தத்வமானவரும், வேள்வியும் வேள்வியிலுள்ள அக்னியுமாகி வேள்வி புரிகிற அறிவாளிகளால் மூன்று ஸந்தியா காலங்களிலும் துதிக்கப்பெறுபவரும், தன் உண்மை நிலையில் எல்லா உலகையும் தன்னுள் மறையச் செய்தவரும், பிறப்பற்றவரும், இரவின் நாதனுை சந்திரனைச் சூடியவரும், யாசனைக்கான கபடமுமற்றவரும், துறவிகளால் துதிக்கப் பெறுபவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

विश्वेशं विश्ववन्द्यं विविधभयहरं विश्वरूपं वृषाङ्कं

विष्णुं विन्ध्यारिकान्तामुखरमुनिसती पूजिताङ्घ्रिं विरागम् ।

विद्याविश्रान्ति भूमिं विधुधरमकुटं व्युप्तकेशं विनाश-

स्थित्युत्पत्यादिहेतुं विकृतिमविकृतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २११

211. உலகமனைத்தின் ஈசர், உலகால் வணங்கத்தக்கவர், பலவித பயங்களையும் அகற்றுபவர், உலகவடிவில் உள்ளவர், விருஷபக் கொடியுள்ளவர், எங்கும் பரவி நிற்பவர், விந்திய மலையின் எதிரியான அகஸ்தியரின் மனைவியான லோபாமுத்ரையால் வணங்கப்பெற்றவர், பற்றற்றவர், கல்வியின்

எல்லைத்தடம், சந்திரனைத் தாங்குகிற கிரீடமுள்ளவர், கேசங்களை மழித்தவர், மறைவு, இருக்கை, உற்பத்தி முதலிய நிலைகளுக்குக் காரணம், மாறுபடுத்துபவர் ஆனால் மாறுபாடடையாதவர், இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

केल्यामौत्सुक्यभाजा तुहिनगिरिजया सस्पृहं दत्तवीटी-
सेवारक्ताधरोष्ठद्युतिजितदिनकृद्बालबिम्बांशुचक्रम्।
गीति प्रावीण्यशैली प्रकटनकुतुकात् हस्तवास्तव्यलोलां
वीणां संवादयन्तं प्रथमरसमयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१२

212. கேளிக்கையில் ஆர்வமிக்க பனிமலைமகளால் ஆசையுடன் அளித்த தாம்பூலத்தைச் சுவைப்பதால் சிவந்த உதட்டின் ஒளியால் இளஞ்சூரிய பிம்பக் கதிர்வட்டத்தை வென்றவரும், சங்கீதத்திறமை வரிசையை வெளிப்படுத்துகிற ஆர்வத்தால் கையிலுள்ள வீணையை மீட்டுபவரும். சிருங்காரரஸ உருவாயுமுள்ள குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

अश्वत्थामा कृपार्यो बलिरपि हनुमान् कुम्भकर्णानुजातो
व्यासर्षिर्जामदग्न्योऽप्यधिगतयशसस्सप्त धीरा महान्तः।
यत्पादाब्जार्चयाऽऽपुर्जनिमदसुलभं श्रीचिरंजीविभावं
तं कृष्णश्वेतरक्तद्युतिमतिकरुणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१३

213. அசுவத்தாமா, கிருபர், பலி, ஹனுமான், கும்பகர்ணனின் தம்பியான விபீஷணன், வியாஸருஷி, ஜமதக்னியின் மகன் பரசுராமர், இந்த ஏழு பெரும் தீரர்கள். புகழ்பெற்றவர்கள், இவரது திருவடி வழிபாட்டால் உயிரினம் பெற இயலாத சிரஞ்ஜீவி நிலையைப் பெற்றனர். கருப்பும் வெண்மையும் சிவப்புமான ஒளியுள்ளவரும், பரிவுமிக்கவருமான இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

जायादानप्रकुप्यत्स्वजनकृतरणावेशकाले प्रसन्नं
यं दृष्ट्वा नेत्रवारिस्नपिततनुलताभोगसातङ्ककम्पः।

यस्याङ्घ्रिध्यानभानुप्रकटितविभवो वैश्यजो भक्तवर्यो-
प्यध्यारूढो वृषेन्द्रं रजतगिरिमगात् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २१४

214. தன் மனைவியை அளித்ததால் கோபித்த உறவினருடன் போர் புரிந்த போது, முன் தோன்றிய இவரைக் கண்டு, கண்ணீரால் நனைந்த மேனியுடனும் நடுங்கும் இதயத்துடனும், இவரது திருவடிகளின் தியானமாகிற சூரியனுல் பெருமை வெளிப்பட்டவனுக அந்த சிறந்த பக்தனுன வைசியன் (இயற்பகை நாயனுர்) இமயத்தின் மீதேறிக் கைலாஸம் அடைந்தான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன். (214)

त्यक्तस्वस्वाधिकारास्सरसिजनयनाश्चागतं देवसौख्य -
प्राप्त्यै गोविन्दमुक्त्वा कुशलमपि कराश्लेषपूर्वं प्रमोदात् ।
वत्स त्वं ब्रह्मतत्वं हृदि न विकलयन्प्रार्थ्यसे दुःखहेतुं
कर्मेत्युद्बोधयन्तो यमपि गिरिवरे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २१५

215. (முன் கற்பத்தில்) விஷ்ணுவாயிருந்து (கற்ப முடிவில்) தன் அதிகாரத்தை விட்ட விஷ்ணுக்கள் தேவர்கள் இன்புறுவதற்காக இங்கு வந்த புதிய விஷ்ணுவை குசலம் கேட்டு மகிழ்ச்சியால் அணைத்து "குழந்தாய்! பிரும்மதத்துவத்தை உள்ளத்தில் உணராமல், துக்கத்தின் காரணமான கர்மத்தை வேண்டுகிருயே!" எனக் கைலாயத்தில் சிவனைப் பற்றிப் (புதிய) விஷ்ணுவிற்கு நினைவுபடுத்தினர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

भो भो ब्रह्मर्षिमुग्धाः सदयमपि मया शिक्षिताश्चाप्यजस्रं
वेदान्ते तत्वबोधे न भवत विबुधा यत्ततोऽद्यापि यूयम् ।
मेधाप्राप्त्यै सभेशं व्रजत शरणमित्यादराद्बोधयित्वा
धाता यत्क्षेत्रराजं मुनिगणमनयत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २१६

216. "பேதைகளான பிரும்மருஷிகளே! பரிவுடன் என்னுல் உபநிஷத்து விஷயங்கள் போதிக்கப் பெற்றும், தத்வத்தை உணர

இயலாதவர்களாக உள்ளீர். அதனால் அதற்கான மேதையைப்பெற ஸபாநாதனைச் சரணமடைவீர்'' எனப் பரிவுடன் நினைவூட்டி பிரும்மா முனிவர் கூட்டத்தை இந்த க்ஷேத்திரத்திற்கு அழைத்து வந்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

गीर्वाणाद्रिं कदाचिद्द्विपुलरदनयोरन्तरे स्वर्णरम्भा-
भ्रान्त्या संधार्य वेगाद्रजतगिरिवरे क्रीडयन्तं गणेशम्।
दृष्ट्वा प्रेम्णाऽद्रिजाता यमपि च तरसाऽऽहूय निर्दिश्य सूनोः
वृत्तं तुष्टाऽभवत्तं दिविषदधिपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१७

217. ஒரு சமயம், மேருமலையை பெருத்த இரு தந்தங்களுக்கிடையே தங்கவாழை என்ற பிரமையில் தாங்கிக் கொண்டு விரைவுடன் கைலாஸம் வந்து விளையாடுகிற விநாயகரை ஆசையுடன் பார்த்துப் பார்வதி இவரை விரைவாகக் கூப்பிட்டு புதல்வனின் செயல்முறையைக் காட்டி மகிழ்ந்தாள். தேவர்களின் தலைவரான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सोत्साहं वीरबाहुप्रमुखसखियुतो दोर्भिरब्धिं षडास्यः
तीर्त्वा पूर्वक्ष्माभृच्छिखरमधिजुषं बालमार्ताण्डबिम्बम्।
चोलीमानीयमानो धुरि च विरचयन्सैंहिकेयस्य लीलां
यद्वाचा संन्यधात्तं नभसि च परमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २१८

218. ஸ்கந்தர், வீரபாஹு முதலிய நண்பருடன் உற்சாகத்துடன் கூடிக் கடலைக் கைகளால் நீந்திக் கடந்து, கிழக்கு உதயகிரியை அடைந்துள்ள இளஞ்சூரிய பிம்பத்தைத் தன் தோள்பையில் வைத்து ராகு செய்கிற கிரஹண விளையாட்டைச் செய்தார். இவரது சொல் கேட்டு விடுவித்து வானில் பதித்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सद्व्योम व्यापि-तारप्रबलयविलसद्ज्ञानवाञ्छाक्रियादि-
श्रीमच्चिच्छक्ति विद्याहृतविपुलतमो राजसं सद्भ्रुकुम्सम्।

गाढाविद्याकवाटोन्नयनशममुखद्वारपालाभिगोप्यन्-
मोक्षद्वारान्तरंगोपनिषदुपचितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २१९

219. பேரிருக்கையாகிற பெருவெளியை நிரப்புகிற ஓங்கார வளையத்தில் துலங்குகிற ஞான-இச்சாகிரியா சக்தி முதலியவற்றால் இருள் நீக்கி, ராஜஸபையில் நடனம் புரிபவரும், அடர்ந்தழுத்துகிற அறியாமையாகிய கதவைத் திறக்கிற சமம் தமம் முதலிய துவாரபாலகர்களால் ரஹஸ்யமாகக் காப்பாற்றப்பட்ட மோக்ஷவாயிலுக்கு இன்றியமையாத உபநிஷதங்களால் அறிமுகப்படுத்தப் பெறுபவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

आविः स्मेराननस्य द्युतिभिरभिनवैः पाणिपद्मान्तराल-
प्रोद्यत्कान्ति प्ररोहैर्नभसि च रचयन् जालमह्नां पतीनाम् ।
नव्यामम्भोदमालामधिधरणिरुचा पार्श्वगायाश्शिवायाः
चित्रं यो नानटीति भ्रमरनटनकृत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २२०

220. புன் சிரிப்பை வெளிப்படுத்துகிற முகத்தின் புதிய ஒளியாலும் வெளிப்படுகிற காந்தி முளைகளாலும் வானில் ஸூர்யர்களுடைய வரிசையையும் இடப்பாகத்தில் உள்ள அம்பிகையின் பேரொளியால் பூமியில் மேக வரிசையையும் காட்டிக் கொண்டு வண்டுபோன்று நடனம் (பிரமரநடனம்) புரிந்து கொண்டு வியக்கும்படி நடனம் புரிகின்ற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

अच्छामच्छिन्नधाराममृतकररुचेर्वर्षयन् लब्धकामां
दीनामत्यन्तखिन्नां रतिमपि मुदितां संव्यधादीश्वरो यः ।
यद्भक्ताखण्डलाशामधिगतपरमानन्दकूपाम्बुपानात्
वाचालत्वं प्रपन्नास्सुरगुरुमुखराः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २२१

221. மிகக் தெளிந்த அமுத தாரையைச் சந்திரனிடமிருந்து பெருகச் செய்து, வாடி மிகவும் துயரடைந்த ரதியை அவள்

விரும்பியதைப் பெறச் செய்து, ஈசன் மகிழ்வித்தார். அவரது நடன அரங்கின் கிழக்கிலுள்ள பரமானந்த கூபத்தின் நீரைப்பருகியதால் பிருஹஸ்பதி முதலானோர் பெரும் பேச்சாளராயினர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

ओङ्कारस्वर्णसंसत्प्रसृतपरशिवज्योतिरानन्दनृत्ता-
लोकादुत्तीर्णमुग्रं भवमतिविपुलं वार्धिकल्पं मुनीन्द्रैः ।
ऊहापोहादिहीनं स्वतनुगतजगद्वृन्दमध्यात्मविद्या-
बोधाचार्यं पुराणं प्रशमिततमसं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २२२

222. பிரணவவடிவுள்ள கனகஸபையிலிருந்து வெளியாகிற பரசிவப் பேரொளியின் ஆனந்த நடனத்தைக் காண்பதால் முனிவர்களால் உக்கிரமாயும் மிகவும் விரிந்ததுமான கடலைப் போன்ற பிறப்பிறப்புத் தொடர் கடக்கப்பட்டது. ஊகித்தோ நேராகவோ மறுத்தோ அறியமுடியாதபடி உலகைத்தன்னுள் கொண்டவரும். ஆத்மஜ்ஞான போதனை முறையின் ஒரே ஆசிரியரும் மிகப் பழையவரும், இருளை அடக்கியவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

दक्षाद्वामाच्च पृष्ठात् द्रुहिणहरिहरान् सर्वसम्पत्समृद्धान्
कल्पारम्भे य ईशोऽप्यनितरसुलभस्वेच्छया सप्रमोदम् ।
सृष्ट्वा संसृष्टिरक्षालयकरणविधौ योजयित्वा तु वाणी-
लक्ष्मीगौरीति शक्तित्रयमपि च ददौ कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २२३

223. வலப்புறத்திலிருந்தும் இடப்புறத்திலிருந்தும் பின்புறத்திலிருந்தும் பிரும்மாவையும் ஹரியையும் ஹரனையும் எல்லா செழிப்புகளுடன் கூடியவர்களாகத் தன் விருப்பப்படி மகிழ்ச்சியுடன் படைத்து படைப்பும் காப்பும் மறைப்பும் செய்கிற துறையில் ஈடுபடுத்தி வாணீ, லக்ஷ்மீ, கௌரீ என்ற மூன்று சக்திகளையும் அளித்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

काचिन्नालायनीति प्रथितमुनिसती भर्तुरिष्टानुकूला
माण्डव्यप्रोक्तशापज्वलनशमनकृद्दुर्दिनश्रीविलासा।
यन्मन्त्रध्यानयोगादनितरसुलभान् पञ्च कान्तान् नरेन्द्रान्
लेभे जन्मादिहीनं शिवपदमपि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२४

224. நளாயனி என்ற பலரறிந்த முனிவரின் மனைவி, கணவர் விரும்பியதைச் செய்து தருபவள். மாண்டவ்யர் வழங்கிய சாபநெருப்பை அணைக்கிற மேகமூட்டமுள்ள நாள் போலானவள். (தன் பதிவிரதை நிலையால் நீக்கியவள்.) இவரது மந்திரத்தியான யோகத்தால் மற்றவரால் பெறஇயலாத ஐந்து அழகிய அரசர்களைப் பெற்றாள். இறுதியில் சிவலோகத்தையும் அடைந்தாள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सिंहस्कन्धाधिरूढं सितवसनधरं सिन्धुसम्बद्धशीर्षं
सिञ्चन्माध्वीमधूकप्रमुखसुमगणोद्दामभूषामनोज्ञम्।
सिद्धादित्याहि विद्याधर पितृ दिविषद्दैत्यगन्धर्वयक्षो-
रक्षोयोगीन्द्र साध्याखिल जनविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२५

225. சிங்கத்தின் தோளில் அமர்ந்தவரும் வெண்ணிற ஆடை உடுத்தியவரும், நதியுடன் தொடர்பு கொண்ட தலையுள்ளவரும், தேன் கசிகிற இலுப்பை முதலிய பூக்குவியலணிந்ததால் மனத்தைக் கவர்பவரும், சித்தர், ஆதித்யர், நாகர், வித்யாதரர், பித்ருக்கள், தேவர், அஸுரர், கந்தவர், யக்ஷர், ராக்ஷஸர், யோகிகள் ஸாத்யர்கள் என்ற அனைத்து மக்களாலும் துதிக்கப்பெற்றவருமான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

प्रत्याहारादियोगैर्हृदयकमलतो ब्रह्मरन्ध्रं स्वकीयं
प्राणानानीय दिव्यं गणमपि शरदां वाहयन्तो महान्तः।
योगीन्द्रास्सिद्धविद्यौषधिमणिगुलिकासेवया वज्रदेहाः
स्वात्मानं यं भजन्ति ज्वलनवरदृशं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २२६

226. பெருமை மிக்கச் சிறந்தயோகிகள் பிரத்யாஹாரம் முதலிய யோகமுறைகளால் இதயகமலத்திலிருந்து

பிரும்மரந்திரம் வரை பிராணனைக் கொண்டு சென்று பல தேவவருஷங்களைத் தாண்டியவர்களாக, ஸித்தர் முறையாலும் மணி, குளிகை உபயோகித்தும் உடலை வைரமாக்கியவர்களாக, தனது ஆத்மாவான பெருநெருப்பு போன்ற அவரை அடைகிறார்கள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सानावस्मिन्किमर्थं वसत सुरवरा गच्छताथाखिलेश-
क्षेत्राधारं धराया हृदयकमलगं पुण्डरीकाभिधानम् ।
क्षेत्रं तत्रैव देवो दशशतकलया राजतीति प्रियोक्त्या
नन्दी यद्दर्शनार्थं त्वरयति च गिरेः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २२७

227. ''தேவர்களே ! எதற்காக இந்த மலையில் தங்குகிறீர்கள் ? எல்லாவற்றிற்கும் ஈசனின் க்ஷேத்ரங்களனைத்திற்கும் ஆதாரமும் பூமியின் இதய கமலத்திலுள்ளதும், புண்டரீகம் எனப் பெயர் பெற்றதுமான க்ஷேத்ரத்தை அடைவீர். அங்கு தான் ஆயிரம் கலைகளுடன் இறைவன் உள்ளார்'' என அன்புடன் கூறி நந்தி அவரைத் தரிசிக்க கைலையிலிருந்து விரைவுபடுத்துகிறார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सृष्ट्यर्थं ब्रह्मणा यस्स्तुतनिजविभवस्तस्य लालाटदेशात्
आविर्भूय स्वतन्त्रो विकृततनुवरान् रुद्रवर्गान् गणेन्द्रान् ।
सृष्ट्वा तान्प्रेरयित्वा जगदवनविधौ सर्वदा सत्वसंस्थो-
ऽरक्षद्विश्वाधिकं तं नतजनसुखदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २२८

228. படைப்பின் பொருட்டு உதவும்படி பிரும்மாவால் தன் பெருமை பற்றித் துதிக்கப்பெற்றவராக, அவரது நெற்றியிலிருந்து தோன்றி தன் விருப்பப்படி செயல் புரிபவராக, மாறுபட்ட உருவங்கள் கொண்ட ருத்ரர்களையும் கணங்களையும் தோற்றுவித்து, அவர்களை உலகப்பாதுகாப்பில் தூண்டி எப்போதும் தன்னிலையிலிருந்து உலகைக் காப்பாற்றினார். அந்த

படைக்கப்பெறுகிற உலகை விஞ்சி நிற்கிறவரும் வணங்கியவருக்கு இன்பமளிப்பவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

वाचां केलिष्वमन्दं दितिजदिविषदोर्मुष्टिमुष्टीरणेऽब्धेः
तीरे जाते सुधाढ्यं घटमपि कलयन्हस्तकोणे मुरारिः।
सम्मोह्याद्यान् द्वितीयानरचयदमृतान् कामिनी कामिनीनां
भूत्वा यच्छूलपाणेरनवधिदयया कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २२९

229. பாற்கடலின் கரையில் கேலிப்பேச்சால் அஸுரர்களுக்கும் தேவர்களுக்குமிடையே குத்துச்சண்டை தொடங்கியபோது, அவரது அளவற்ற கிருபையால் விஷ்ணு அமுதம் நிரம்பிய குடத்தைக்கையின் ஓரத்தில் தாங்கி அழகிகளுக்கும் காமம் உண்டாக்குகிற பெண்வேடமேற்று அஸுரர்களை மயக்கி, தேவர்களை அழிவற்றவர்களாக ஆக்கினார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

पद्मे मास्त्वद्य लीलाफणिपतिशयनं वैनतेयोऽपि नालं
भूमि त्वं शीघ्रमायाह्यहमपि नटने तिल्लवन्यां पुरारेः ।
हस्ताभ्यां वादयिष्याम्यहह चटुतरं मद्दलं चेत्युदीर्य
प्रायाद्यद्रङ्गमादौ हरिरपि तमजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३०

230. "லக்ஷ்மி ! இன்று கேளிகள் வேண்டாம். பாம்புப்படுக்கையும் கருடனும் வேண்டாம். பூமிதேவி ! சீக்கிரம் வா ! நானும் தில்லைக்காட்டில் திரிபுரனை அழித்தவரின் நடனத்தில் இரு கைகளால் அழகிய மத்தளம் வாசிக்கப் போகிறேன்" என்று கூறி முன்னதாக அரங்கை விஷ்ணு சென்றடைந்தார். அந்த பிறவாத குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

पश्येदं स्वर्णशृङ्गं मम सदनवरं गौरिकेदारसंज्ञं
काशीं काञ्चीपुरीमप्यरुणगिरिवरं श्वेतकान्तारदेशम्।

वेदारण्यं च सेतुं मुहुरपि वृषभं योऽधितिष्ठन्प्रियायै
निर्दिश्याप्नोति नैजं निलयमनुदिनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३१

231. விருஷபமேறி, தன் அன்புடையாளுக்கு "கௌரீ! இதோ மேருவாகிற தங்க சிகரம் உள்ள என் அரண்மனையைப்பார்!; காசியையும் காஞ்சிபுரத்தையும் அருணாசலத்தையும், வெண்காட்டையும் வேதாரண்யத்தையும் ஸேதுவையும் பார்!" என்று காட்டிக்கொண்டே தன் இருப்பிடமான சிதம்பரத்தைச் சிவன் அடைகிறார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

स्वामिन् भिक्षो भवेद्वा क नु तव नगरे पर्वते वा वने वा
वासः कस्मादिह त्वं चरसि वद विभो कुत्र गन्ताऽसि भिक्षाम् ।
कुर्वन्नत्रैव तिष्ठन् विरचयतु भवान् केलिमस्माभिरेवं
स्त्रैणं यं चाभ्यधावद्वनभुवि विवशं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३२

232. ஐயா! பிக்ஷுவே! உமக்கு எங்கே குடியிருக்குமிடம்? நகரத்திலா மலையிலா காட்டிலா? எதற்காக இங்கே சுற்றுகிறீர்? சொல்லும் ஐயா! எங்கு பிக்ஷைக்காக செல்லவிருக்கிறீர்? இங்கேயே பிக்ஷையை எடுத்து எங்களுடன் இவ்வாறு கேளிக்கை புரிவீர்" என்று தாருகாவனத்துப் பெண் ஸமூஹம் வசப்படாத அவரைப்பின் தொடர்ந்து காட்டில் ஓடிற்று. அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

वामा वामाङ्गभागो नयनमपि जटाः कुण्डलौ यज्ञसूत्रं
वाहो बाणश्च चापध्वजरथतुरगा यस्य जाता विचित्रम् ।
सूतश्चापि स्फुलिङ्गैर्निटिलनयनजैर्दाहयित्वाऽण्डजालं
कल्पे कल्पे पुनर्यस्सृजति तदखिलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥

233. மனைவி இடப்புறம், கண், சடை, குண்டலங்கள், பூணூல், வாஹனம், பாணம், வில், கொடி, தேர், குதிரை, தேரோட்டி என இவை எல்லாம் விசித்திரமானவை. நெற்றியில் தோன்றிய நெருப்புக்கங்குகளால் ஒவ்வொரு கல்பத்திலும்

பிரும்மாண்டங்களின் குவியலை எரித்து மறுபடி அனைத்தையும் படைக்கிறார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

पादाङ्गुष्ठस्य यस्य द्युतिकवचितदिक्चक्रवालान्तराले
ब्रह्मा हंसं मुरारिः कलशजलनिधिं देवराजो गजेन्द्रम्।
स्वं छत्रं वाजपेयी दिनकरशशिनौ सैंहिकेयश्च शुक्लं
वर्णं शिल्पी नितान्तं मृगयति सततं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३४

234. இவரது கால்கட்டைவிரலின் ஒளியால் மூடப்பட்ட திக்குகளின் வெளியில் பிரும்மா அன்னப்பறவையையும், விஷ்ணு பாற்கடலையும் இந்திரன் ஐராவதத்தையும் வாஜபேயயாகம் செய்தவர் தன் குடையையும் ராகு சூர்ய சந்திரர்களையும் சில்பி வெள்ளை நிறத்தையும் தேடுகிறார்கள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

ज्ञानेच्छाभ्यां सखिभ्यां सह रहसि मुदा नक्तमश्रान्तलीलो
भूत्वा प्रातस्सभायामिह किमु भवतस्साहसं नन्दनीयम्।
यातु स्वर्गापगाया निकटतटमयं नार्थनीयो जनश्चे-
त्युक्त्वा साचीकृतामन्वनयदगसुतां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३५

235. ''ஞான சக்தி இச்சா சக்தி என்ற இரு தோழிகளுடன் ஏகாந்தத்தில் இரவை ஓய்வு இல்லாதபடி விளையாடிக் களித்துக் காலையில் இங்கு சபையில் வந்த உமது ஸாஹஸம் கொண்டாடத்தக்கதே! கங்கையின் கரையருகே செல்வீர். இவள் (கிரியா சக்தியாகிய நான்) நாடத்தக்கவள் அல்ல'' என்று சொல்லி முகத்தைத் திருப்பிக் கொண்ட அம்பிகையை ஸமாதானப்படுத்தித் தனக்கு அனுகூலமாக்கிக் கொண்டார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कल्पान्ते वृद्धिभाजां कबलितजगतां सप्तवाराम्निधीनां
मध्ये पालाशशायी हरिरिह पुरुषो नास्ति मत्तोऽपरोऽन्यः।

एवं दर्पावलीढोऽप्यनुपदमुदितं शूलिनं भैरवं यं
दृष्ट्वा भीत्या ननाम स्तुतिभिरभिनवैः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३६

236. கல்பத்தின் இறுதியில் அளவில் அதிகமாகி உலகை விழுங்கிவிட்ட ஏழுகடல்களின் நடுவில் ஆலிலைமீது படுத்து, ''உலகில் என்னைத்தவிர வேறு புருஷனில்லை'' என்று செருக்குற்ற போது உடன் அங்கு சூலம் ஏந்தியவராக உடன் தோன்றிய பைரவரைக் கண்டு விஷ்ணு புதிய பல துதிகள் கூறிவணங்கினார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यत्संहारास्त्रवेगं मुहुरपि हृदये तर्कयन्नम्बरान्ते
प्राणत्राणाय यत्नं दशरथनृपतेर्युद्धरङ्गे प्रकुर्वन् ।
रोहिण्याकारचक्रानुगतिमपि जहौ सौरिरर्कात्मजातः
तं देवं राहुकेतुग्रहमुखविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३७

237. ஸூரியனின் புதல்வனான சனி தசரத அரசனின் யுத்த அரங்கில் ஆகாசத்தில் தோன்றிய சிவனது ஸம்ஹாராஸ்திரத்தின் வேகத்தைத் தன் உள்ளத்தில் அடிக்கடி நினைப்பவராக ரோகிணிவடிவிலுள்ள கால சக்கிரத்தைப் பின்பற்றுவதையும் தவிர்த்தார். ராகு கேது முதலானோர் துதிக்கின்ற தேவரான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

इन्दुर्यत्क्षेत्रसेवासमसमयवलत्तिल्ववृक्षानिलानां
स्पर्शादुन्मृष्टवर्ष्मा सुरगुरुयुवतीसङ्गजैः पापरोगैः ।
यद्वक्त्रालोकनेन स्वतनुपरिगलच्चन्द्रिकासारसिक्तान्
सर्वाँल्लोकानकार्षीत्तमनमदहरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३८

238. சிதம்பர க்ஷேத்திரவாஸத்தின் போது தில்லைமரங்களைத் தொட்டு வருகிற காற்றால் சந்திரன் பிருஹஸ்பதியின் மனைவியுடன் கூடியதால் ஏற்பட்ட பாபரோகங்கள் நீங்கி, தோல் நோய் நீங்கியவனாக ஆனான். அவரது முகத்தைக் கண்டதால் தன் உடலிலிருந்து பெருகுகிற நிலவின் அமுதப்பெருக்கால் உலகனைத்தையும் நனைத்தான்.

யமனின் திமிரை அடக்கிய அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कालिन्दीवीचिजालैर्भुवनमहिपतेर्नीतमानन्दभाजं
कान्तं सीमन्तिनीति क्षितिपतितनया काचिदौपासनैस्तैः ।
सौम्यैरुद्दामकल्पैः प्रमुदितमनसो यस्य शम्भोः प्रसादात्
प्रापावैधव्ययोगं सुखमपि निखिलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २३९

239. ஸீமந்தினி என்ற அரசகுமாரி, பலவித சிறந்த முறைகள் கொண்ட மென்மை மிக்க உபாஸனை முறைகளால் திருப்தியுற்ற சம்புவின் அருளால் யமுனை நதியின் பிரவாஹத்தால் நாகலோகத்திற்கு இழுத்துச் செல்லப்பெற்ற கணவனை மீட்டு, ஆனந்தமடையச் செய்து விதவை நிலையற்ற ஸுமங்கலி நிலையையும் எல்லா இன்பத்தையும் பெற்றாள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

विष्णौ निर्ज्वालचक्रे भ्रमितहृदि विधौ भास्करे दन्तहीने
शक्रे निर्भिन्नगण्डे हुतभुजि विशिखे त्यक्तजीवेऽखिलेऽन्ये ।
छित्वा दक्षोत्तमाङ्गं मखभुवि सगणं वीरभद्रं चरन्तं
दृष्ट्वा योऽतोषयत्तं प्रमुदितहृदयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २४०

240. தக்ஷரின் யாகத்தில், விஷ்ணு ஜ்வாலை இழந்த சக்ரமுள்ளவராக, பிரும்மா பிரமை பிடித்தவராக, ஸூர்யன் பற்களை இழந்தவராக, இந்திரன் கழுத்து முறிந்தவராக, அக்னி கொழுந்து அடங்கியவராக, மற்றவர் உயிரிழந்தவராக, வேள்விச்சாலையில் தக்ஷனின் தலையைக் கொய்து கணங்கள் சூழ வீரபத்ரன் உலாவுவதைக் கண்டு அவனை மகிழ்வித்துத் தானும் மகிழ்ந்த அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सावित्रीति प्रसिद्धा नरपतितनुजा काननान्तः स्वभर्तुः
प्राणानाहर्तुकामं सभटमपि यमं यस्य पूजाप्रभावात् ।
सम्मोह्यानम्य तस्मात्पतिमपि तनयान् राज्यमन्याः समृद्धीः
लेभे तं कालकालं कटितटफणिनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २४१

241. ஸாவித்ரீ என்ற புகழ்பெற்ற அரசனின் புதல்வி காட்டின் நடுவே தன் கணவனின் உயிரைப்பறிக்க விரும்பிய படைவீரருடன் கூடிய யமனை சிவபூஜையின் பெருமையால் கலங்கச் செய்து வணங்கி அவரிடமிருந்து கணவனை மீட்டுப் புதல்வர்களையும் ராஜ்யத்தையும் மற்ற செல்வங்களையும் பெற்ருள். யமனுக்கு யமனும் இடுப்பில் பாம்பு அணிந்தவருமான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

ब्रह्मैवाहं शिवोऽहं विभुरहममलश्चिद्घनोऽहं विमायः
सोऽहं हंसस्स्वतन्त्रस्तदहमतिजरः प्रज्ञया केवलोऽहम् ।
ध्येयध्यातृ प्रमाणैः गलितमतिरहं निश्चलोऽहं सदेति
प्राज्ञा यच्चित्सभायां अतिशयमभजन्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २४२

242. "நான் பரம் பொருளே. நான் சிவன். நான் எங்குமுள்ளவன். தூயவன், பேரறிவுச் செறிவுள்ளவன். மாயையைக் கடந்தவன், நான் அதே ஹம்ஸன், தனித்துச் செயல்படுபவன். மூப்பைக் கடந்தவன். பேரறிவால் ஆத்மாவின் தனி இயல்பில் உள்ளவன். தியானிக்கப்பெறுகிற பொருள், தியானிப்பவன், தியானம் என்ற முப்புடம் கடந்தவன், எப்போதும் சலனமற்றவன் என்று சித்ஸபையில் பேரறிஞர்கள் ஒரு அதிசய உணர்வைப் பெற்றனர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कान्तारे जातु कृष्णो द्विजरविमणिहृद्भल्लबन्दीकृतायाः
सौन्दर्यान्निर्जितायास्सुरवरयुवतीं जाम्बवत्याः प्रियायाः ।
पाणिं जग्राह यस्य प्रतिदिनयजनात्कीर्तिमाशाविहारां
लेभे तं सर्वविद्यालयकरनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २४३

243. காட்டில் ஒரு சமயம் கிருஷ்ணன் இருபிறப்பாளனுன க்ஷத்திரியனிடமிருந்த ஸூர்ய மணியான ஸ்யமந்தகத்தைப் பறித்துச் சென்ற கரடியால் கட்டுக்குள் வைக்கப்பெற்றவளும் அழகால் அப்ஸரஸையும் வென்றவளுமான அன்புமிக்க ஜாம்பவதியின் கைத்தலம் பற்றினர். இவரைத் தினமும் வழிபட்டதால் திக்கெட்டிய புகழையும் பெற்றார். எல்லா கல்வி

முறைகளுக்கும் இருப்பிடமாக ஒருவனை ஆக்குகிற நடனம் புரிகிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

मालादिग्बन्ध पूजाकवचवरमहायन्त्र विद्यारहस्य-
श्रीमत्साहस्रनामस्तवपरिविलसन्नवाङ्गानि पूर्वम् ।
सूतश्रीजैमिनिभ्यां रहसि सकरुणं प्रोक्तवान्दीक्षयित्वा
पाराशर्यो महर्षिः श्रुतिविभजनकृत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २४४

244. இவரது மாலா மந்திரம், திக்பந்தம், பூஜாவிதானம், கவசம், மஹாயந்திரம், மந்திரம், ரஹஸ்யம், ஸஹஸ்ரநாமம் ஸ்தோத்திரம், என்ற ஒன்பது அங்கங்களை முன்பு ஸூதருக்கும் ஜைமினிக்கும் வேதத்தை வகுத்த வியாஸ மஹரிஷி தீக்ஷை செய்வித்து ரஹஸ்யமாகக் கருணையுடன் உபதேசித்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सद्योजातादिमानां वदनजलभुवां पञ्चकाद्यस्य जातान्
मन्त्रांस्त्रैलोक्यवश्य प्रमुखवर महासिद्धिदान्सप्तकोटीन् ।
श्रुत्वा गौरी यदुक्त्या जगदुपकृतये सप्रयोगान्सकल्पान्
तान्लोकानानिनाय स्वयमतुलकृतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २४५

245. இவரது ஸத்யோஜாதம் முதலிய ஐந்து முகங்களிலிருந்து தோன்றியவையும் மூவுலகத்தையும் வசியம் செய்வது முதலிய சிறந்த ஸித்திகளை அளிப்பவையுமான ஏழு கோடி மஹாமந்திரங்களை இவரது ஆணையால், உலகின் நலன் பொருட்டு செய்முறை, யந்திர அமைப்பு முதலியவற்றுடன் உலகிற்குத் தானே கௌரி கொணர்ந்தாள். அந்த ஒப்பற்ற செயல்முறை கொண்ட குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

अद्राक्षीन्नन्दिकेशः कनकसदसि यं ह्यर्धनारीस्वरूपं
पश्चान्नारायणार्धं पुनरपि गिरिजारूपमाकारहीनम् ।
तारं तन्मण्डलान्तर्ज्वलनमनुपमं सच्चिदानन्दमूर्तिं
नृत्तेशानं मुहूर्तं तमपरसुगमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २४६

246. நந்திகேசர் கனகஸபையில் ஒரு முஹூர்த்த நேரம், அவரை அர்த்தநாரீசுவரராகவும், சங்கரநாராயணராகவும், பார்வதியாகவும், உருவமற்றவராகவும், பிரணவமாகவும், பிரணவமண்டலத்தினுள் தீப்பிழம்பாகவும் ஒப்பற்ற பேரிருக்கை, பேரறிவு பேரானந்த வடிவினராகவும் நடராஜராகவும் கண்டார். மற்றவரால் அவ்வாறு அறிய முடியாத அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன். (முஹூர்த்தம் 24 நிமிஷங்கள்.)

पार्वत्युत्सङ्गदेशस्थितिमधिजुषतोः स्कन्दहेरम्बयोस्ता-
वाहूयाद्याखिलाण्डान्झटिति च युवयोः कस्समर्थोऽटने सः।
स्वीकुर्यादितदाम्रं फलमिति निगदन्नग्रतो यस्तदीयं
वृत्तं दृष्ट्वा मुमोद क्षितिधरशिखरे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २४७

247. பார்வதியின் மடியிலமர்ந்திருந்த ஸ்கந்தரையும் விக்னேசரையும் அழைத்து உடன் எல்லா அண்டங்களையும் சுற்றிவருவதில் உங்களிருவரில் திறமையுள்ளவர், இந்தமாம்பழத்தை எடுத்துக் கொள்ளலாம் என அறிவித்தார். கைலாயத்தில் தன்முன் இந்த செயல் நிறைவுறுவதைக் கண்டுகளித்த அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

नानाजीवात्मवादि प्रकटितकुनयाभासयुक्त्यद्रिपक्ष-
द्वंद्वच्छेदानुधावड्डमरुकमुखरज्ञात सत्यार्थलोकम्।
वाञ्छाकल्पद्रुकल्प प्रपदयुगनत ब्रह्मनिष्ठावलिं तं
चिन्मात्रं चित्सभेशं निरतिशयगुणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २४८

248. ஜீவாத்மாக்கள் பலர் என்று வாதிப்பவரால் வெளிப்படுத்தப்பட்ட கீழ்த்தரமான - யுக்தியாக வெளியே தோன்றுகிற குயுக்திகளாகிற மலையின் இரு இறக்கைகளையும் வெட்டியகற்றும் இயல்புள்ள உடுக்கை ஒலியால், உலகின் உண்மைப் பொருளை உணர்த்துபவரும், விரும்பியதைத் தருவதில் கற்பகக் கொடியான திருவடி இரண்டில் பிரும்ம நிஷ்டர்களால் வணங்கப்பெற்றவரும். பேரறிவே

வடிவானரும், சித்ஸபாநாதனும், பிறரால் விஞ்ச இயலாத நற்குணங்கள் உள்ளவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

विष्णोश्चक्रापहर्तु : प्रथितबलजुषो भूतचक्राधिपस्य
क्षुत्तृट्दुःखप्रशान्तिप्रदनिजचरितस्तब्धपाण्ड्यात्मजातम् ।
श्वश्रूवाञ्छाभिपूर्त्यै निजधुरि च मुदाऽऽनीत सप्ताम्बुराशिं
भक्तस्त्रीपक्वपिष्टाशनरुचिमुदितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २४९

249. விஷ்ணுவின் சக்ரத்தை விழுங்கியவனும், புகழ்பெற்ற பலசாலியும் பூதகணங்களின் தலைவனுமான குண்டோதரனின் பசி - தாகத்தாலான துயர் அடங்க உதவுகிற தன் நடைமுறைகளைக் கண்டு பாண்டிய குமாரியான மீனாக்ஷியை ஸ்தம்பிக்கச் செய்தவரும், தன்மாமியார் காஞ்சனமாலையின் விருப்பம் நிறைவுறத் தன்முன், மகிழ்ச்சியுடன் ஏழு கடல்களையும் கொணர்ந்தவரும், பக்தையான பெண்மணி சமைத்த புட்டின் ருசியில் திருப்தியடைந்தவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

अत्रेः कान्ताऽनसूया निखिलजननुता यं समभ्यर्च्य पुत्रं
दत्तात्रेयाभिधानं त्रिमुखमपि चतुर्बाहुमद्वैतवृत्तिम् ।
श्रुत्यन्तोद्दामलीलं सकलमुनिततेरग्रगण्यं महान्तं
लेभे तं स्वात्मबुद्धत्रिभुवनचरितं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २५०

250. அத்திரியின் மனைவி அனஸூயை, எல்லா மக்களாலும் துதிக்கப் பெற்றவள். இவரை வழிபட்டு, மூன்று முகங்கள் கொண்டவரும் நான்கு கைகள் உள்ளவரும் அத்வைதக் கொள்கையுள்ளவரும் உபனிடதத்தில் தடையற்று விளையாடுபவரும், எல்லா முனிவர் கூட்டத்தின் முன் மதிக்கப்பெறுபவரும், மிகப் பெரியவருமான தத்தாத்ரேயர் என்ற புதல்வரைப் பெற்றாள். மூவுலகத்தின் நடைமுறையையும் உள்ளத்தில் உணர்ந்த அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कल्पारम्भे यदीयाद्गलविवरादों अथेति द्विशब्दौ
सिद्धान्तार्थ प्रबोद्धृप्रवरशिवकरावाविरास्तां पुरस्तात्।
पश्चाद्वेदादि विद्याविधिहरिमुखरा देवतास्सर्वलोकाः
जातास्तं दक्षिणास्यं द्युतिकरनिलयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५१

251. இந்த கல்பம் தொடங்கும் போது அவரது சிறந்த தொண்டைக் குழாயிலிருந்து ஓம் அத, என்ற இரு ஒலிகள் சாஸ்திரங்களின் உட்கருத்தை உணர்கிற பேரறிஞர்களுக்கு மங்களம் தருபவையாக வெளிவந்தன. அதன்பின் வேதங்களை முதலில் கொண்ட வித்தியைகளும் பிரும்மா விஷ்ணுமுதலான தேவர்களும் உலகமனைத்தும் தோன்றின. தெற்கே முகமுள்ளவரும் ஒளிமிக்க இருப்பிடம் கொண்டவருமான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सङ्कल्पोल्लासहीनं सरिगमपधनी सप्तवर्णानुवर्ण-
प्रारम्भोद्गानलोलाखिल सुरयुवती बृन्दसङ्कीर्णरङ्गम्।
नादध्यानानुमोदागतनिजनिकटानेक सिद्धर्षिदेव-
स्तोत्रध्वानैर्नितान्तैर्जितजलधिरवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५२

252. செயல் திட்டமும் செயல் விரிவும் அற்றவரும், ஸ ரி க ம ப த நீ என்ற ஏழு எழுத்துக்களின் தொடர்ச்சியில் தொடங்குகிற கானத்தில் ஈடுபட்ட எல்லா தேவயுவதிகள் கூட்டத்தால் நெருக்கமிக்க அரங்கம் உள்ளவரும் நாதம் மூலம் தியானம் செய்து அனுபவித்து ஆனந்தமடையத் தன் அருகில் வந்த பல ஸித்தர், முனிவர், தேவர் இவர்களின் கடலோசையை வெல்கிற துதியொலியுள்ளவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

दोषां साहस्रयुग्मैर्धृतपरशुमुखैराननानां सहस्रैः
त्रैसाहस्रैस्तयाक्ष्णामपरिमितजटाधोरणी धाटिकाभिः।
ज्वालामालाभिरग्नेरपहसितघनैरट्टहासैर्विशालैः
निध्यानैर्योऽन्तकाले विहरति तमजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५३

253. கோடரி முதலிய ஆயுதங்கள் ஏந்திய இரண்டாயிரம் தோள்கள், ஆயிரம் முகங்கள், மூவாயிரம் கண்கள், எண்ணற்ற சடையலை வரிசைகள், அக்கினியின் பிழம்புகள், இடியோசையை வெல்கிற அட்டஹாஸங்கள். பரந்த மத்தளம் முதலியதன் ஒலிகள் இவ்வாறு பல கோலங்களோடு இவர் பிரளயகாலத்தில் விளையாடுகிருர். இந்த பிறவாத குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

शेषे जातु स्वभोगात्सुरगिरिशिखरं वेष्टयित्वा नितान्तं
त्रैलोक्यप्राणभूतां कबलयति तनूं नारदात् ज्ञातवृत्तः ।
वायुर्यद्ध्यानयोगत् प्रबलतनुरयात् भुग्नवक्त्रं स भूभृत् -
शृङ्गं चिक्षेप वार्धौ फणिपतिमपि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २५४

254. ஒரு சமயம் ஆதிசேஷன் மஹாமேருவின் கொடுமுடியை தன் உடலால் முழுவதும் சுற்றிக் கொண்டு மூவுலகின் உயிர் நிலையிலுள்ள உடலை அடக்கி நின்ருன். நாரதரிடமிருந்து நடந்ததை அறிந்த வாயு இவரைத் தியானம் செய்து வலிவுமிக்கவனுகி அந்த ஆதிசேஷனை மேருவின் கொடுமுடியுடன் முகம் கவிழ்ந்தவனுக்கிக் கடலில் வீசி எறிந்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

विश्वामित्रप्रयुक्तात् स्वपुरसुतसुहृत्कामिनी विप्रयोगात्
क्लिश्यन्नालीकवार्तां गदितुमपि पटुः पूजया यस्य नित्यम् ।
लब्ध्वा स्वां संपदं तामभजदथ हरिश्चन्द्रसंज्ञो नरेन्द्रो
धाम स्वायम्भुवं तं निगमरथवहं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २५५

255. விசுவாமித்திரின் ஏவலால் தன் நகரம், புதல்வர்கள், நண்பர்கள், மனைவி இவர்களை விட்டுப் பிரிவால் வாடிப் பொய் சொல்ல இயலாதவனுகத் தினமும் இவரை வழிபட்டு, தன்னைச் சார்ந்தவை அனைத்தையும் ஹரிச்சந்திரன் என்ற அரசன் திரும்பப் பெற்றுப் பின் பிரும்மலோகத்தையும் அடைந்தான். வேதத்தைத் தேர்ச் சக்கிரமாகக் கொண்ட அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

आबाल्यात् द्रव्यमेतत्सुमुखि तव मुदे यन्मयात्तं तदद्य
स्वीकुर्वाणा नितान्तं मदनशरहतं गाढमालिङ्ग्य दोर्भ्याम्।
अत्रैवाश्वासयेति त्वरितगतिमुमामालिभिर्वारितोऽपि
श्रीमान्यो ह्यन्वगच्छन्नगतटभुवि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५६

256. ''ஏ நன்முகம் கொண்டவளே ! சிறுவயதிலிருந்து என்னால் சேமிக்கப்பெற்றதனைத்தும் உனக்கு மகிழ்ச்சியைத் தரப்பயன்படட்டும். இதை இப்போது ஏற்று, மன்மதபாணத்தால் முழுவதும் அடிபட்ட என்னைத் தோள்களால் வலிய அணைத்து நிம்மதி பெறச் செய்வாய்'' எனக் கூறி தோழிகளால் தடுக்கப்பெற்றும் வேகமிக்க நடையுடன் மலைச்சரிவில் சிவன் பார்வதியைப் பின் தொடர்ந்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(பார்வதியை மணக்குமுன் பிரும்மசாரி வேடத்தில் நடத்தியலீலை)

आलि त्वं सान्त्वयायाँ मयि कुपितधियं दारुकारण्यवासि-
स्त्रीणां केलीविलासैर्हरिधृतसुतनोस्साहसात्पर्वतेन्द्रे।
सङ्गाद्दिव्यापगाया मदनदहनतश्चेति साकूतमुक्त्वा
कान्तागारे जयां योऽगमयदसुलभं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५७

257. ''தோழியே ! தாருகாவனத்துப் பெண்களுடன் கேளிக்கை புரிந்ததாலும், விஷ்ணு வடிவெடுத்த மோகினியுடன் கைலாயத்தில் ஸாஹஸமாக நடந்து கொண்டதாலும், கங்கையின் தொடர்பாலும், மன்மதனை எரித்ததாலும் என்னிடம் கோபம் கொண்டுள்ள தேவியை ஸமாதானப்படுத்துவாய் !'' என உள்ளக்கிடைக்கையை மறைத்துப் பேசி, மாளிகையினுள் இவர் ஜயை என்ற தோழியை அனுப்பினார். பிறரால் எளிதில் அடைய இயலாத இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यश्शम्भुर्लीलया स्वं जनिम सुखकरं तापसानां वचोभिः
हस्तादुत्पाट्य देवैः किमिदमिति भयाद्वीक्षितोऽरण्यदेशे।
चिक्षेप ब्रह्मविष्णुस्तुतिभिरपि पुनस्तान्मुनीन् ज्ञाततत्वान्
कृत्वाऽप्यन्तर्दधे तं प्रणतफलकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५८

258. தாருகாவனத்துத் தபஸ்விகளின் கிண்டலால், வாழ்விற்கு இன்பத்தைத் தருகிற தனது லிங்கத்தை, தேவர்கள் ''இது என்ன'' என்று பயத்தால் பார்த்துக் கொண்டிருந்தபோது, கைகளால் பிடுங்கிக் காட்டில் விட்டெறிந்தார். பிரும்மாவும் விஷ்ணுவும் துதித்ததால், உண்மையறிந்த முனிவர்களுக்கு தத்துவமறிவித்து மறைந்தார். வணங்கியவனுக்குப் பலனை அளிக்கிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सिद्धाकारप्रगुप्त स्वतनुमपि जगद्दृष्टमाहेन्द्रजालं
चित्रस्तम्भस्थितेन प्रचलितकरिणा भुक्तपुण्ड्रेक्षुखण्डम्।
मुक्ताहारापहार भ्रमितनरपति स्तोत्रनिर्निद्रितान्तः-
पद्मं साहस्रनेत्र प्रमुखनुतपदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २५९

259. ஸித்தர் வடிவில் தன் உருவைமறைத்து, உலகில் இந்திர ஜாலவித்யையைப் பரப்பி, சித்திரத்தூணிலுள்ள யானையை வெளிவந்து கரும்புத்துண்டைச் சுவைக்கச் செய்து, முத்துமாலையைப் பறித்ததால் பிரமித்த பாண்டிய அரசனது துதியால் மலர்ந்த இதயத்தாமரையுள்ளவரும் இந்திரன் முதலானோரால் துதிக்கப் பெற்றவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

मौलौ गङ्गा गलान्तर्गरलमहिततेः कङ्कणं दोषि फाले
चन्द्रं तार्तीयनेत्रं ज्वलनसमशिखं शूलमाजं कपालम्।
भूतप्रेतादिसेना निगममयशुनो यस्य लीलाकिरात -
स्याग्रे दृष्ट्वा किरीटी भ्रमितमतिरभूत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६०

260. இவரது சிரஸில் கங்கை, தொண்டையில் விஷம், தோளில் பாம்பு வளையம், நெற்றியில் சந்திரனும், நெருப்பு போல் கொழுந்து விட்டெரிகிற மூன்றாவது கண்ணும், சூலம், பிரும்மகபாலம், பூதம் பிரேதம் இவர்களாலான படை, நாய்களான வேதங்கள் என விளையாட்டாக வேடன் வேடம் புனைந்த இவரைக் கண்டு அர்ஜுனன் பிரமித்தான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कस्तूरीपङ्कलेपं मृगमददतिलकं पुष्पमालां च नूत्नां
दृष्ट्वा जात्वम्बुजाक्षी धरणिधरसुताऽप्यन्यथा तर्कयन्ती ।
नाथेदं लक्ष्म सत्यां मयि तव समभूत् ब्रूहि कस्या मुदे चे-
त्यायान्तं निर्बन्धाधिकशपथमरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २६१

261. சிவனிடம் கஸ்தூரி கலந்த பூச்சு, கஸ்தூரியால் திலகம், புதிய பூமாலை, இவற்றைக் கண்ட தாமரைக் கண்ணியான மலைமகள் வேறுவகை எண்ணம் கொண்டவளாக, "நாதரே! நான் ஒருவள் இருக்கும் போது, எவளின் ஸந்தோஷத்திற்காக இந்த அலங்காரம்? சொல்வீர் என்று பார்வதி மாளிகையிலுள் நுழைபவரை சபதத்துடன் நிர்பந்தித்தாள். அந்த குஞ்சிதாங்க்ரியை வழிபடுகிறேன்.

कव्यं कल्पद्रुकाम्यं करिवसनधरं कृष्णरक्ताङ्गवर्णं
कालातीतं कवीन्द्रं कविकुलविनुतं क्लृप्तलीलाविशेषम् ।
कृत्याकृत्यादिशून्यं कुमतिविरहितं कुध्रबाणासनाङ्कं
कङ्कालं कालिनृत्तप्रमुदितहृदयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २६२

262. புகழத்தக்கவரும், கற்பகமரத்தால் வேண்டப் பெற்றவரும், யானைத்தோலாடை அணிந்தவரும், கறுப்பும் சிகப்புமான மேனியரும் காலத்தைக் கடந்தவரும், கடந்ததையும் கடக்கவிருப்பதையும் மனக் கண்ணால் பார்க்கிற உயர்ந்த கவியும், கவிகுலத்தால் துதிக்கப்பெறுபவரும், சிறந்த லீலைகள் புரிபவரும், செய்யத்தக்கதும் தகாததும் அற்றவரும், மதிகெட்டவனுடன் சேராதவரும், மன்மதனிடம்

கோபமுள்ளவரும், கங்காள பைரவரும், காளியின் நடனத்தால் மனமகிழ்ந்தவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सर्वेषामस्मि कर्ता प्रभुरपि जगतां पालको नाशकश्चे-
त्युच्चैर्विष्णौ कदाचित्प्रलपति च मुदा यस्स्वयं तत्समक्षम्।
रुद्रस्संहारमूर्तिः स्वतनुरुहततेराशु विष्णूनसंख्यान्
सृष्ट्वा तद्दर्पवह्निं पुरभिदशमयत्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६३

263. "எல்லா உலகிற்கும் நானே படைப்பாளி. நானே எஜமானன். உலகைக் காப்பவனும் மறைப்பவனும் நானே." என விஷ்ணு ஒரு சமயம் புலம்பும்போது, அவர் எதிரே மகிழ்ச்சியுடன் தானே ஸம்ஹாரமூர்த்தியான ருத்ரராகி தன் ரோமங்களிலிருந்து எண்ணற்ற விஷ்ணுக்களைப் படைத்து அவரது செருக்காகிய நெருப்பை திரிபுராரி சமனம் செய்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(சிவரஹஸ்யத்திலுள்ள வரலாறு)

कान्तासंहारकुप्यद्भृगुमुनिगदितं भीकरं घोरशापं
नानाजन्मैकहेतुं शमयितुमनिशं पूजयन्तं मुकुन्दम्।
उत्पत्तीनां दशैव त्रिजगदभिभवद्दानवान् शिक्षितुं ते
भूयादित्यादिदेश प्रभुरतिकृपया कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २६४

264. மனைவியைக் கொன்றதற்காக வெகுண்ட பிருகுமுனிவர் கூறிய பயங்கரமான கொடூரமான பல பிறவிகளைத்தரக் கூடிய சாபத்தை அடக்குவதற்கு, இடைவிடாது தன்னை வழிபடுகின்ற விஷ்ணுவை, மூவுலகையும் எதிர்க்கிற அஸுரர்களைச் சிக்ஷிக்க பத்து உற்பத்திகள் மட்டும் என்று பிரபு கருணையால் கட்டுப்படுத்தினார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

लीलां यस्यानभिज्ञा मखभुवि यतिना येन वेधन्तरस्मिन्
क्षिप्तं यावत्कपालं निरसितुमबला घोसदश्चास्तुवन् यम्।

पौरोडाशस्य भूयादधिकरणमिदं संयजन्तामिदानीं

इत्युक्त्वाऽदर्शि नैजं निगममयवपुः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २६५

265. இவரது லீலையை அறியாதவர்களாக வேள்விச் சாலையில் வேதியின் நடுவில், துறவிவேஷம் பூண்ட இவரால் எறியப்பட்ட கபாலத்தை எடுத்தெறியத் திறமையற்ற தேவர்கள் இவரைத் துதித்தனர். இந்தக் கபாலம் புரோடாசம் வைக்கும் பாத்திரமாகட்டும். இப்போது வேள்வி நடக்கட்டும் எனக் கூறித் தன் வேதமயமான உருவத்தைக் காட்டிய குஞ்சிதபாதரை வணங்குகிறேன்.

(பாத்மபுராணத்தில் உள்ள வரலாறு)

देवेन्द्रे वृत्रहत्त्या परिभवति तदा स्वर्गराज्याधिकारे

युक्तं दर्पावलीढं नहुषनरपतिं कामितारं नितान्तम् ।

पौलोमी यस्य नाम्नां मननविभवतः कुम्भजातस्य शाप-

व्याजान्निन्ये धरां तं जनकनृपनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २६६

266. ஒரு சமயம், தேவேந்திரன் விருத்திராஸுரனைக் கொன்றதால் பிரும்மஹத்தியால் மறைந்ததும், ஸ்வர்க்க அரசின் அதிகாரம் பெற்ற நஹுஷ அரசன் திமிர்பிடித்து சசிதேவியை விரும்புகையில், இவரது நாமஸ்மரணத்தின் பெருமையால், சசிதேவி நஹுஷனை அகஸ்தியரது சாபத்தின் மூலம் பூமியில் விழச் செய்தாள். ஜனக அரசரால் துதிக்கப்பெற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

दिक्कालाद्यैर्विचिन्त्यं स्वमनुमननकृन्मान्यमद्वैतसारं

मध्याद्यन्तादि हीनं सकलजनमनोवृत्तिद्रष्टारमाद्यम् ।

मायातीतं प्रशान्तं द्युतिकरमखिलज्योतिषामीश्वराख्या-

वाच्यं तेजोमयं तं परमपरनटं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २६७

267. தேசத்தாலோ காலத்தாலோ ஆராய முடியாதவரும், தன் மந்திரத்தை ஜபிப்பவரால் மதிக்கத் தக்கவரும், அத்வைதத்தின்

ஸாரமும், நடு, ஆதி, முடிவு என்ற நிலை இல்லாதவரும் எல்லோருடைய மன உணர்வை உணர்பவரும் ஆதியும், மாயையைக் கடந்தவரும், மிகவும் சாந்தரும், எல்லாப் பேரொளிகளுக்கும் ஒளியூட்டுபவரும், ஈசுவரன் என்ற பெயருக்குப் பொருளானவரும், ஜ்யோதி உருவமுள்ளவரும், தன்னையொத்தவரல்லாத நடருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

भोगात्प्रारब्धकर्माण्यधिकभयकरे सञ्चितागामिके द्वे
ज्ञानान्नाशं प्रयाते इति निगमवचांस्याहुरेतत्प्रसिद्धम् ।
तान्यप्यालोकमात्रात् निजनटनतनोः प्राणिनां जातु दिष्ट्या
निघ्नन् यच्छन् सुखं यः सदसि विजयते कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २६८

268. அதிகபயம் தருகிற பலன் தரத்தொடங்கிய பாபம் அனுபவித்தே தீர்க்கப்படவேண்டியது. முன் சேர்த்ததும் இனி பலிக்கவிருப்பதும் ஜ்ஞானத்தால் அழியும் என்று வேதவாக்யங்கள் கூறும். இது யாவருமறிந்ததே. தனது நடிக உருவை எதேச்சையாகக் கண்டதாலேயே அந்தப் பாபங்கள் அனைத்தையும் அழிப்பவரும் சுகம் தருபவருமாக ஸபையில் விளங்குகிறார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यः शम्भुर्भूर्भुवस्स्वर्भुवनपरिवृढैस्संस्तुतः सत्यवादैः
यस्मात्सार्वात्म्ययोगानुभवनिपुणतां लेभिरे योगिवर्याः ।
लीढालीढार्थतत्वोपनिषदविषयाकाशगो यश्शिवस्तं
प्रत्यग्ब्रह्मैक्यनिष्ठागुरुममरनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २६९

269. இந்த சம்பு பூலோகம் புவர்லோகம் ஸுவர்கலோகம் இவைகளில் உள்ளவர்களால் வேதவசனங்களால் துதிக்கப் பெறுபவர். இவரிடமிருந்து சிறந்த யோகிகள் எல்லாம் ஆத்மாவே என்ற யோக நிலையின் அனுபவத்தைப் பெறுவதில் நிபுணராயினர். வெளிப்படையாயும் ரகசியமாயும் (தொட்டும் தொடாமலும்) அறிவிக்கிற உபனிஷத்துகளுக்கும் புரியாத பெருவெளியில் இருப்பவர். உள்நோக்கால் பிரும்மத்துடன்

ஒன்றிய நிலைக்குக் குருவானவர். தேவர்களால் துதிக்கப்பெற்றவர், அந்த சிவனுன குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

वम्र्याकारत्वभाजा दिविचरपतिना खण्डितेष्वासकोटि-
त्रुटयद्वक्त्रस्य पुंसो वपुरतिचकितं वीक्षयन्तो निलिम्पाः ।
यं स्तुत्वा यन्निदेशात्तुरगमुखयुतं तं विधायाश्विनीभ्यां
चक्रुर्यज्ञं यथावत्तमपि नटपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २७०

270. கரையான் உருக்கொண்ட இந்திரனுல் வில்லின் நாண் துண்டிக்கப்பெற்றதும், ஒடிந்த முகமுள்ள யஜ்ஞபுருஷனின் உடலைப்பயத்துடன் கண்ட தேவர்கள், இவரைத் துதித்து இவரது சொற்படி குதிரைமுகம் கொண்டவராக அவரை அசுவினி தேவர்கள் மூலம் ஆக்கி, வேள்வியை நிறைவுறச் செய்தனர். அந்த நடபதியை குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

स्वामिन् कृष्णात्र युद्धे कनकमयतनुर्भूतिमान् शूलपाणिः
वक्त्रादग्निस्फुलिङ्गान् रणभुवि विकिरन्सञ्चरत्यद्वितीयः ।
कोऽयं ब्रूहीति पार्थे वदति सविनयं वासुदेवो मुहूर्तं
योगात् ध्यात्वाऽब्रवीद्यच्चरितमनुपमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥२७१

271. "ஸ்வாமி ! கிருஷ்ணா ! இந்தப் போரில் தங்கமேனியனுக விபூதி பூசியவனுக சூலத்தைக்கையில் கொண்டவனுக, முகத்திலிருந்து கனல் துண்டுகளை யுத்தபூமியில் வாரி இறைத்துக் கொண்டு தனிமனிதனுக சுற்றுகிருனே, அவன் யார் ?" என்று அர்ஜுனன் கேட்க வாஸுதேவன் சில கணங்கள் யோகநிலையிலிருந்து தியானித்து இவரது வரலாற்றைச் சொன்னுர். அந்த ஒப்பற்ற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(பாரதம் துரோண பர்வத்தில்)

सत्यं ब्रह्मैव नान्यज्जगदिदमखिलं चेति मीमांसयित्वा
त्रैयन्तोक्त्या बुधेन्द्रा हृदि च यमनिशं चिद्घनं दुर्निरीक्ष्यम् ।

दीपज्वालाशिखावत्सततपरिचयानन्दनृत्तं विमायं
शुभ्रं पश्यन्ति तत्सत्पदविषयमरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २७२

272. பிரும்மமே உண்மைப் பொருள். வேறுகத்துலங்குகிற இவ்வுலகமனைத்தும் உண்மை அல்ல என்று உபனிடத வாக்கியங்களால் ஆராய்ந்த பேரறிஞர்களால் சித்சக்தியின் அடர்த்தியால் ஆராய்ந்து பார்க்க இயலாதவரும் தீபச்சுடர் போன்று எப்போதும் ஆனந்த நடனத்துடிப்புள்ளவரும் மாயையைக் கடந்தவரும், தூயவரும் தத்ஸத் என்ற பதங்களின் உட்பொருளுமான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

विद्यामग्नौ प्रतिष्ठां पयसि च धरणौ योनिवृत्तिं समीरे
शान्त्याख्यां शान्त्यतीतां नभसि निजकलां योजयन्नप्रमेयः ।
सूक्ष्मात्सूक्ष्मान्तरज्ञे दहरकुहरचित्पुण्डरीकाख्यवेश्म-
न्यन्तश्चिन्मात्ररूपं रचयति नटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २७३

273. தனது கலைகளில் அக்னியில் வித்யையையும் ஜலத்தில் பிரதிஷ்டையையும் பூமியில் நிவிருத்திகலையையும், வாயுவில் சாந்தியையும் ஆகாசத்தில் சாந்தியதீதகலையையும் இணைத்தவர், ஊகித்தறிய இயலாதவர், சூட்சுமத்திலும் மிகவும் சூட்சுமமான உள்ளமான, தஹரகுஹரம் (ஸூக்ஷ்ம பரவெளி) என்றும் சித் என்றும் புண்டரீகம் (தாமரை உருவினது) என்றும் கூறப்படுகிற வீட்டில் உள்ளே சித்வடிவில் மட்டும் உள்ள நடனமாடுகிற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सौवर्णे विष्टरं यः कनकघटनिभौ स्वप्रियायाः स्तनौ द्वौ
पश्यन् लीलाकटाक्षैः करजलजवरैर्मण्डयन्सप्रमोदम् ।
अध्यासीनः पुरस्तान्मणिमुकुरगतं स्वानुबिम्बं शिवायाः
तुष्टयै चाहूतवान् श्रीविनुतनिजपदं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २७४

274. தங்க ஆஸனத்தின் மீதமர்ந்து, தன் இனியவளின் இரு மார்பகங்களைக் கண்டு, லீலை ததும்பும் கடைச்

கண்பார்வையாலும் தாமரைக் கைகளாலும் அழகுபடுத்திக் கொண்டு ஆனந்தத்துடன் ரத்னக்கண்ணாடியில் காணப்படுகிற தனது பிரதிபிம்பத்தை அம்பிகையின் சந்தோஷத்திற்காக அழைத்தார். லக்ஷ்மியால் துதிக்கப் பெற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன். (274)

(ஸுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாறு)

भूवाय्वाकाशतोयज्वलनरविशशीयज्वरूपैः प्रपञ्चं
यो धत्ते मस्करीन्द्रैश्च्युतमलहृदयैः सेव्यते यस्तुरीयः ।
हंसाभिख्योऽद्वितीयः स्वगतनिखिलविध्यण्डजालो हिरण्य-
श्मश्रुस्तं शान्तकल्पं नियतिपदभरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २७५

275. பூமி, காற்று, ஆகாசம், ஜலம், அக்னி, சூரியன், சந்திரன், தீக்ஷிதர் என்ற எண்மர் வடிவில் உலகைத் தாங்குபவர், இதய அழுக்கற்ற சிறந்த துறவிகளால் வழிபடப் பெறுபவர், மூன்று நிலைகளைக் கடந்தவர், ஹம்ஸர் எனப்படுபவர், வேறொன்றற்றவர், தன்னுள் எல்லா பிரும்மாண்டங்களை அடக்கியவர், தங்கமீசையுள்ளவர், செயலடங்கியவர், நியதி (விதி-தலையெழுத்து) என்ற நிலையைச் சுமப்பவர், இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

योऽदात्मैजोत्तमाङ्गामृतकिरणसुधामण्डपिण्डीकृताङ्गं
तेजोभग्नेन्दुवह्निद्युमणिघनरुचिज्योतिषं हीरकल्पम् ।
नित्यं देदीप्यमानं प्रतिसमयमपि स्वस्य पूजां विधातुं
लिङ्गं विप्रेषु मोदात् भवभयहरणं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २७६

276. தனது சிரத்திலுள்ள சந்திரனது அமுதக்குழம்பை உருட்டி உருவாக்கப் பெற்றவர், தன் ஒளியால் சந்திரன் அக்னி ஸூர்யன் என்ற பேரொளி கொண்ட மண்டலங்களை ஒளியிழக்கச் செய்தவர், வைரம் போன்றவர், ஒவ்வொரு வேளையிலும் தன்னை வழிபட, வழிபடுகிற அந்தணர்களிடம் ஸந்தோஷத்துடன் லிங்கமாக எப்போதும் ஒளிர்பவர்,

ஸம்ஸாரபயம் நீக்குபவர், இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன். (சந்த்ரமௌளீச்வரலிங்க வரலாறு- ஸ்ரீசங்கரபகவத் பாதர் கைலாயத்திலிருந்து சிவன் அருள் புரிந்து அளித்த ஐந்து லிங்கங்களைக் கொணர்ந்தார். அதில் மோக்ஷலிங்கத்தை இங்கு பூஜைக்காக வழங்கினார் என்ற வரலாறு உண்டு.)

स्वात्मानन्दानुबोध प्रवितरणसभातारभूतोरुकक्ष्यां
अध्यासीनैर्वसिष्ठच्यवनशुकमुखैस्तैः प्रसंख्यानयोगैः।
ईड्यं यं चाश्रयन्तः ककुबधिपतयो नाद्रियन्ते तथा स्वं
स्थानं तं तुम्बुरूक्ति प्रमुदितहृदयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २७७

277. ஆத்மானந்தத்தை அளிக்கிற சித்ஸபையின் ஓங்கார மண்டபத்தின் நடுவில் அமர்ந்த வஸிஷ்டர், சியவனர், சுகர் முதலானோரால் சிறந்தயோக முறையால் வழிபடப் பெறுபவர். இவரை அண்டுகிற திக்பாலகர்கள் தங்கள் பதவியைப் பெரிதாக மதிப்பதில்லை. தும்புருவின் கானத்தால் உள்ளம் மகிழ்ந்த அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

शक्तेर्यस्य प्रसादादधिधरणि महानादिशेषावतारो
योगीन्द्रो देहभाजामघमतिविपुलं चित्तवाक्कायसंस्थम्।
दूरीकर्तुं च यष्टुं यमकृतकपथा योगशब्दौषधार्चा-
ग्रन्थान् पातञ्जलाख्यान् स्वयमपि कृतवान् कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥

278. இவரது சக்தியின் அருளால், பூமியில் ஆதிசேஷனின் அவதாரமும் சிறந்த யோகியுமான பதஞ்ஜலியின் மூலம் சித்தத்திலும் வாக்கிலும் உடலிலுமுள்ள பலவாறுகப் பெருகிய நோய்களை அகற்றவும் வேள்வி புரியவும், யோகசாஸ்திரம், சப்தசாஸ்திரம், ஔஷதசாஸ்திரம், பூஜாசாஸ்திரம் இவற்றைப் பதஞ்ஜலி இயற்றியதென்ற பெரும் பெயருடன் தானே செய்தளித்தார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

द्यूतक्रीडाविहारे शिवगिरिसुतयोः जातु मिथ्योक्तिकुप्यद्-
गौरीवाक्य प्रभूतामजगरतनुतां त्यक्तुमत्यन्तघोराम्।

कैलासोपत्यकायां यमपि च तपसा तोषयन् यत्प्रसादात्
लेभे स्वं प्राक्तनं तद्वपुरपि मुरभित्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २७९

279. சிவன் பார்வதி இவர்களது சொக்கட்டான் விளையாட்டில் ஒரு சமயம் (ஸாக்ஷியாயிருந்து) பொய் சொன்னதால் கோபித்த கௌரியின் சாபத்தால் வந்த கோரமான பெரும் மலைப்பாம்பு வடிவைவிட கைலாஸத் தாழ்வரையில் தவத்தால் இவரை மகிழ்வித்து விஷ்ணு தன்முன் வடிவத்தைப் பெற்றார். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

त्रैगुण्यानामतीतं त्रिजगदभिनुतं सत्रिवर्गापवर्गं
त्रैयन्ताचार्यमूर्तिं त्रिपुटिविरहितं त्रिस्यमप्यत्रिरूपम् ।
तृष्णाहीनाशयस्थं त्रिशिखवरधरं त्र्यक्षमात्रेयभूषं
त्रेतानन्दं त्रिकोणस्थितिजुषमचलं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २८०

280. முக்குண மூர்த்திகளான மும்மூர்த்திகளுக்கு அப்பாற்பட்டவர், மூவுலகத்தாலும், துதிக்கப்பெறுபவர், அறம் பொருள், இன்பம், வீடு வழங்குபவர், உபநிஷதங்களின் ஆசாரியர், திரிபுடிக்கு அப்பாற்பட்டவர், மூன்று வடிவங்களிலிருப்பவர், ஆனால் அவற்றில் இல்லாதவர், வேட்கையற்ற உள்ளத்தில் துலங்குபவர், சிறந்த சூலம் தரித்தவர், முக்கண்ணர், அத்ரியின் புதல்வரான சந்திரனை அணிந்தவர், ஆஹவனீயம் கார்ஹபத்யம் தக்ஷிணாக்னி என்ற அக்னிகளில் ஆனந்தமாயிருப்பவர், ஸ்ரீசக்ரத்தின் நடுமுக்கோணத்தில் இருப்பவர், சலனமற்றவர், இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

स्वस्त्रीवक्षोजयुग्मे यमधिककरुणं भावयित्वा च भक्त्या
रत्या सन्तर्प्य तेन प्रमुदितमनसो नृत्तमूर्तेः प्रसादात् ।
यस्याभूल्लोकजेता सुममयविशिखो मन्मथः श्रीकुमारः
तं देवं सुन्दरेड्यं घुसदननटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २८१

281. லக்ஷ்மியின் புதல்வனான மன்மதன், கருணைமிக்கவரான இவரை ரதியின் மார்பில் பாவனை செய்து ரதியுடன் வழிபட்டு, அதில் திருப்தியடைந்த நடராஜரின் அருளால், உலகை வெல்பவனாக, பூ போன்ற பாணமுள்ளவனாக ஆனான். ஸுந்தரமூர்த்தி நாயனாரால் துதிக்கப் பெற்றவரும், ஆகாயத்தில் நடனம் புரிபவருமான அந்த குஞ்சிதாங்க்ரியை வழிபடுகிறேன்.

आयुर्यत्कैटभारेः परममभिमतं पूर्णतामेति तावत्
  कल्पो यस्य क्षणार्धो भवति च सुगमः किञ्चिदंशेन हीनः ।
इत्याहुर्वेदवाचः किमुत शतधृतेः किंच दिक्पालकानां
  तं कालं कालभक्षं फणिफणनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८२

282. விஷ்ணுவின் ஆயுள் நிறைவடையும் அளவான கல்பம் என்ற காலவரை, இவருக்கு அரை நொடியில் சிறிதளவு குறைந்த காலவரை என்று வேதம் கூறும். பிரும்மாவிற்கும் திக்பாலருக்கும் உள்ள ஆயுட்காலவரை பற்றி என்ன சொல்ல ? அந்த கால அளவானவரும் காலத்தையும் காலனையும் விழுங்குபவரும், பாம்பின்படத்தின் மீது நடனமாடுபவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कालीं चण्डोर्ध्वनृत्तावनतमुखगणां ब्रह्मचामुण्डिकाख्यां
  गौरीकोपाग्निजातां दितिसुतभयदामंशयुक्तां विधातुः ।
स्वागश्शान्त्यै नितान्तं सविधकृतनुतिं यः कृपापूर्णदृष्ट्या
  रक्षन्स्वक्षेत्रपालामकुरुत परमं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८३

283. பிரும்மசாமுண்டீ என்ற காளி, இவரது பயங்கரமான ஊர்த்வ தாண்டவத்தால் தலை குனிந்தவளானாள். அவள் கௌரியின் கோபத்தில் தோன்றியவள். அஸுரர்களுக்குப் பயமளிப்பவள். பிரும்மாவின் அம்சமானவள். தானிழைத்த தவற்றை சமனம் செய்ய, அருகிலிருந்து துதித்த இவளை கிருபை நிறைந்த

பார்வையால் காப்பாற்றி, க்ஷேத்ரபாலகியாக்கினார். அந்தப்பரமனான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(தில்லைக்காளி, சிதம்பர ஆலயத்திற்கு வடக்கே சிவப்ரியா தீர்த்தக்கரையில் உள்ளாள். இவளது தர்சனத்தால் தான் ஸ்ரீ நடராஜ தர்சன பலன் கிட்டும் என்பர்)

सर्वेशं सर्वसत्वप्रकृतिमविकृतिं सर्वदं सर्वभूषं
सर्वातीतं सदाख्यं सकरुणनयनं सर्ववेदान्तसारम् ।
सत्यं सद्व्योमसंस्थं सनकमुनिमुखैरर्चितं सामगीत्यां
उत्साहं संसदीशं सकलकविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८४

284. எல்லாவற்றிற்கும் ஈசன், எல்லா உயிரினத்தின் மூலப்பொருள். தான் மாறுபாடடையாதவர், எல்லாமளிப்பவர், எல்லாவற்றையும் அணிபவர், எல்லோருக்கும் அப்பாற்பட்டவர், ஸதாசிவர், கருணையுள்ள பார்வையுள்ளவர், எல்லா உபநிடதங்களுக்கும் உட்பொருள், உண்மையே வடிவானவர், ஸத் எனும் ஆகாயத்தில் பரவி நிற்பவர், ஸநகமுனிவர் முதலானோரால் வழிபடப்பெறுபவர், ஸாமவேதகானத்தில் உற்சாகமுள்ளவர், ஸபாநாதர், எல்லாக்கவிகளாலும் வணங்கப்பெறுபவர், இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कर्तुं चाकर्तुमेतत्सकलमपि जगच्चान्यथा कर्तुमीशः
शक्तश्चाकाशतुल्यो भवितुमपि शिवो यस्समाधिक्यशून्यः ।
जाग्रत्स्वप्नातिशायी पृथुतरसुखकृत्स्थान संस्थोऽपि नैजां
मायामाविष्करोति त्रिविधगुणमयीं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८५

285. எல்லா உலகையும் படைக்கவும் படைக்காதிருக்கவும் மாறுபடுவதாகப் படைக்கவும் ஆளுமையும் திறமையுமுள்ளவர். ஆகாசம் போன்று எதிலும் நுழைந்தும் பற்றுமலுமிருப்பவர். ஈடானவரும் மிக்காருமில்லாதவர், விழிப்பு, கனவு, இந்நிலைகளில் பெறும் சுகத்தைக் காட்டிலும்

அதிகமான ஸங்கம் தருமிடத்திலிருப்பவராயினும் முக்குணத் தொடர்பாகிய மாயையை வெளிப்படுத்துபவர். இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

साकं गौर्या हिमाद्रेर्निकटवरतटे सञ्चरन् योनिजास्य-
स्वेदोद्भूतं प्रभाभिर्विजितदिनकरं बालमाहूय मोदात्।
भौमाभिख्यामजालिग्रहयुगमनृणाधीश्वरत्वं च वाहं
शक्तिं भूषां ददौ तं दिविचरविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २८६

286. இமய மலையின் சிறந்த தாழ்வரையில் கௌரியுடன் உலாவருபவராக, தன் முகத்தின் வியர்வையிலிருந்து தோன்றியவனும் சூரியனை ஒளியால் வெல்பவனுமான சிறுவனை அருகில் அழைத்து, பௌமன் (செவ்வாய்) என்று பெயரும், மேஷம் விருச்சிகம் என்ற இரு வீடுகளும் கடனில்லா நிலை தருகிற அதிகாரமும் வாஹனமும் சக்தியும் ஆபரணமும் அளித்தார். தேவர்களால் துதிக்கப்பெற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यस्मिन्दृष्टे परस्मिन्न चलति हि मनो देहभाजां कदाचित्
यस्मात्कुत्रापि नान्यो भवति च परमो देवतासार्वभौमः।
एको दाधर्ति तिर्यङ् निजवपुषि जगत्प्रोतमोतं समस्तं
तं चित्रं चित्रनृत्तप्रमुदितगिरिजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २८७

287. மேலோனான இவர் புலப்பட்டால் மனித மனம் சலனமற்றிருக்கும். இவரைவிடச் சிறந்த எல்லாவற்றையும் ஆள்கிற தெய்வமில்லை. இவ்வுலகை ஊடும் பாவுமாகக் கோர்க்கப்பட்டதாகத் தன் உடலில் ஒருவனாகவே தாங்குகிறார். அந்த விசித்திர இயல்புள்ளவரும், விசித்ரநடனத்தால் கௌரியை மகிழ்வித்தவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कश्चिद्भूपालसूनुर्वृषभमुनिवरस्योपदेशात् यदीयां
शैवीं विद्यां जपन्यत्कवचनुतिमपि प्राप्तकामो बभूव।

तं शर्वं वारिजाक्षद्रुहिणसुरपति प्रेतनाथाग्निरक्षः-
पाशीवाय्वीशयक्षद्युमणिशशिनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८८

288. ஓர் அரசகுமாரன், ருஷபயோகியின் உபதேசத்தால், பெற்ற சைவ மந்திரத்தையும் சிவகவச ஸ்தோத்திரத்தையும் ஜபித்து விரும்பியதைப் பெற்றான். உலகைச் சிதைத்து மறைப்பவரும் விஷ்ணு, பிரும்மா, இந்திரன், யமன், அக்னி, நிர்ருதி, வருணன், வாயு, ஈசானன், குபேரன், ஸூர்யன், சந்திரன் இவர்களால் துதிக்கப்பெற்றவருமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यद्रङ्गस्वर्णकुम्भं दिनकृदनुदिनं वीक्ष्य मेरुभ्रमेण
रथ्यं संरुध्य मध्ये क्षणमपि निवसन् यत्सपर्यासु जातम् ।
घण्टाभाङ्कारघोषं त्रिशतदशमखीवेदमन्त्रांश्च भूयः
श्रुत्वा तिल्लीवनाख्यं पुरमिति मनुते कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २८९

289. இவரது நடன அரங்கின் தங்கக் கலசத்தைச் சூரியன் தினமும் கண்டு, மேரு என்ற பிரமையால் குதிரையை நடுவே நிறுத்தி கணநேரம் நின்று, பூஜாகாலத்தில் உண்டான மணியின் பாம் என்ற ஓசையையும் மூவாயிரமந்தணர்களின் வேதமந்திரத்தையும் கேட்டு இது தில்லைக்காடு என்கிற புரமென்றறிகிறான். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

कण्ठे कालो ललाटे हुतभुगुरगराड्भूषणं चर्म वस्त्रं
भूतिर्गन्धो विहायो निलयमथ पुनः पुष्पवन्तौ च नेत्रे ।
वृत्तिर्भिक्षा स्वकार्यं नटनमगसुता प्रेमकान्ता गजास्यः
सूनुः यस्यातिचित्रं समजनि सदयं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २९०

290. கழுத்தில் காலகூடம் (விஷம்) நெற்றியில் நெருப்பு, ஆபரணம் பாம்பு, ஆடை தோல், மணப்பூச்சு விபூதி, இருப்பிடம் ஆகாயம், கண்கள் சூரியனும் சந்திரனும், பிழைப்பு பிக்ஷை, தன் பணி நடனம், இனிய மனைவி மலை மகள், புதல்வன் யானை முகத்தோன் என்று எல்லாம்

வியக்கத்தக்கவை. தயைமிக்க அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यत्संसत्स्वर्णभित्तिं परितरनुपमास्स्वर्गनार्यः कराब्जैः
आदर्शाद्यष्टभद्रं कनकमणिमयं यस्य तुष्टचै वहन्त्यः ।
सेवां कुर्वन्ति पञ्चावरणमधिगतैर्ब्रह्मविद्येशपूर्वैः
स्तुत्यं तं चित्रकूटस्थितिभिरथ सुरैः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २९१

291. இவரது ஸபையின் தங்கச்சுவற்றைச் சுற்றி ஒப்பற்ற தேவப் பெண்கள், தாமரைக் கைகளில் தங்கத்தாலும் ரத்னத்தாலுமான கண்ணாடி முதலிய (கண்ணாடி, பூர்ண கும்பம், விருஷபம், இரு கரங்கள், ஸ்ரீவத்ஸம், ஸ்வஸ்திகம், சங்கம், தீபம் என்ற) எட்டு மங்களப் பொருள்களை ஏந்தி வழிபடுகிறார்கள். ஐந்து ஆவரணங்களிலும் உள்ள பிரும்ஹவித்யேச்வரர்கள் முதலானோராலும் சித்ரகூடத்தில் உள்ள தேவர்களாலும் துதிக்கப் பெறுகிற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

भक्तास्त्रैषष्टिसंख्या द्विजमुखकुलजा यत्सपर्याविशेषैः
सारूप्यं यस्य नाम्नां मुहुरपि पठनात् यस्य सामीप्यसिद्धिम् ।
सालोक्यं यस्य भक्तिप्रकरणजनतासङ्गसम्भाषणाद्यैः
सायुज्यं यस्य भावादनुपममभजन्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २९२

292. அறுபத்துமூன்று பக்தர்கள், அந்தணர் முதலான குலத்திலுதித்தவர், இவரது தனித்த பூஜை முறையாலும் இவரது நாமபாராயணத்தாலும், ஸாரூப்யம் (ஒத்த உருவம் பெறுவது) ஸாமீப்யம் (அருகாமை பெறுவது) ஸாலோக்யம் (ஒரே உலகில் இருப்பது) ஸாயுஜ்யம் (இரண்டறக்கலப்பது) என்ற நிலைகளை பக்தி, வழிபாடு, பக்தரின்ஸங்கம், ஸம்பாஷணை முதலியவற்றால் பெற்றனர். அந்த ஒப்பற்ற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यश्चित्रस्तम्भकक्ष्यामधिविशदखिल प्राणिवर्गान् विशुद्धान्
कुर्वन् कश्चिन् महात्मा पुरुषमृगतनुर्योगिराट् यत्सभायाः ।

पूर्वस्मिन्द्वारदेशे निवसति हृदये सन्ततं यं विचिन्वन्
तं देवं चिद्विलासप्रकटितनटनं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २९३

293. புருஷமிருகவடிவினரான ஒரு பெரிய யோகீச்வரர், சித்ரத்தூண்களுள்ள பிராகாரத்தில் நுழைகிற எல்லா பிராணிகளையும் தூயவராக்கி, ஸபையின் கிழக்கு வாயிலில் எப்போதும் அந்த தேவனை நினைவிற் கொண்டு வசிக்கிறார். பேரறிவாகி ஸபையில் நடனம் புரிகிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

भेजे त्रैशङ्कवीयां स्थितिमपि च गले यस्य शम्भोः करालः
क्ष्वेलः कल्पान्तकालज्वलनकवलनज्वालकल्लोलकीलः ।
सातङ्काहार्यजायास्सभयमधुभिदो वारणप्रेरणाभ्यां
भूयो भूयस्तमाद्यं जलदगलरुचिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २९४

294. (அர்த்தநாரீசரும் ஹரிஹரருமாக மாறிமாறிக் காட்சி அளிக்கையில்) கல்ப முடிவு நேரத்து அக்னியை விழுங்கிற ஜ்வாலையால் கொந்தளிக்கிற சம்புவின் கழுத்திலுள்ள கொடும் விஷம், கவலைமிக்க கௌரி தடுக்க, பயமிக்க விஷ்ணு தூண்ட அடிக்கடி சிவனது கழுத்தில் திரிசங்குவின் நிலையை அடைந்தது. ஆதியும் மேகவண்ணம் கொண்ட கழுத்துடையவருமான அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

लोकेष्वद्वैतविद्यां प्रकटयितुमना यस्स्वयं कृत्तिवासाः
मोदात्सर्वज्ञपीठस्थितिजुषममलं शङ्कराख्यं यतीन्द्रम् ॥
स्वांशान्नैजाङ्घ्रिपूजाप्रशमिततमसां भूसुराणां कुलाब्धौ
उत्पाद्यान्वग्रहीत्तं शुकमुनिविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ २९५

295. உலகில் அத்வைத வித்யையைப் பரப்பும் எண்ணம் கொண்ட சிவன், தன் திருவடியை வழிபடுவதால் அஜ்ஞான இருள் நீங்கிய அந்தணர் குலக்கடலில் ஸந்தோஷத்துடன் தானே ஸர்வஜ்ஞபீடம் ஏறுகிறவரும் தூயவருமான சங்கரர்

என்ற உயர்ந்த துறவியாக வெளியாகி, அருள்புரிந்தார். சுகமுனிவரால் துதிக்கப்பெற்ற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

पाताले मर्त्यलोके दिवि च पुररिपोर्यानि यानि प्रियाणि
क्षेत्राण्यासंस्तदन्तः स्थितिमधिजुषतां लिङ्गबेरादिमानाम्।
हेतुः श्रीमूलनाथः शिवजनिमवरो यत्सभोदीचिभागे
कक्ष्यायां भाति नित्यं तमखिलजनकं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९६

296. பாதாளத்திலும் பூலோகத்திலும் வானிலும் உள்ள சிவபெருமானின் பலதரப்பட்ட க்ஷேத்திரங்களில் உள்ள லிங்கம் விக்ரஹம் முதலானவற்றுக்கும் மூலமான ஸ்ரீ மூலநாதர் ஸ்வயம்புவாக இவரது ஸபையின் வடக்குப்பகுதியில் பிராகாரத்தில் உள்ளார். நித்யரும் அனைவரின் தந்தையுமான குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

ब्रह्मन्सृष्टिं यथावत्किमपि च कुरुषे भो हरे रक्षकत्वं
साध्यं ते रुद्र भावं मम च वहसि किं पाल्यतेऽसौ त्रिलोकी।
केनानुष्ठीयते किं भुवि च मुनिवरैर्यज्ञ इत्थं स्वसेवा-
नम्रं यो देववर्गं मुदयति वचसा कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ २९७

297. "பிரும்மாவே! படைப்பை முறைப்படி செய்கிறீரா? விஷ்ணுவே! உம்மால் பாதுகாக்க முடிகிறதா? ருத்திரரே! எனது பொறுப்பை நிர்வகிக்கிறீரா ? மூவுலகமும் நன்கு காப்பாற்றப்படுகிறதா ? வேள்விகளை தொடர்ந்து யார் அனுஷ்டிக்கிறார்கள் ?" இவ்வாறு தனது ஸேவையில் வணங்கி நிற்கிற தேவர்களைக் கேட்டு வார்த்தையால் மகிழ்விக்கிற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

निर्मातॄणां घटानां कुलजलधिमणिर्नीलकण्ठाभिधोऽयं
पश्यन्नित्यं मुनीनां नयवचनगणैर्योगिराट्प्रत्ययार्थम्।
स्वस्त्रीदण्डाग्रहस्तस्सरसि सशपथं गाहमानः प्रपेदे

298. குடம் வனைகிற குயவர் வம்சத்தில் ரத்னமாகப் பிறந்த நீலகண்டர் என்றயோகி, தினந்தோறும் ஆண்டவனைக் கண்டு, (மனைவியின்) நம்பிக்கைக்காக மூவாயிரத்தாரின் சொல்லை நம்பி தன்மனைவியின் கைபற்றிய தண்டத்தைத்தானும் பற்றி, ஓடையில் (யௌவனேச்வர தீர்த்தத்தில்) சபதம் செய்து கொண்டு நீராடி இவரது அருளால் யௌவனத்தையும் அடைந்தார். அணுவும் மகத்துமாகாத அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

(திருநீல கண்டநாயனார் வரலாறு.)

लास्यं द्रष्टुं यदीयं शिखिनि दशशिरांस्याजुहावातिभक्त्या
रक्षोनाथस्तथाद्रेर्निकट भुवि फणामण्डलं भोगिराजः ।
अन्ये देवाश्च दैत्याः तपसि च कठिने स्वां तनूं निर्दहन्तो
जातास्सिद्धाश्च साध्या नरहरिविनुतं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। २९९

299. இவரது நடனத்தைக் காண, அக்னியில் ராவணன் தன் பத்து தலைகளையும் மிகவும் பக்தியுடன் ஹோமம் செய்தான். அவ்விதமே கைலாஸத் தாழ்வரையில் ஆதிசேஷன் தனது படங்களுள்ளதலைகளை ஹோமம் செய்தான். இவ்வாறே மற்ற தேவர்களும் அஸுரர்களும் தனது உடலை எரித்து ஸித்தர்களும் ஸாத்யர்களுமாயினர். அந்த நரஸிம்ஹரால் துதிக்கப்பெற்ற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

ராவணனது சிவதாண்டவஸ்தவம் இந்நிலையில் தோன்றியது.

स्वामिन् संसारवार्धावधिकभयकरे दुस्तरे पाशनक्र-
च्छन्ने मग्नान्तरं मामनधिगतसदाचारवृत्तिं शठाग्र्यम् ।
दीनं त्वत्पादपूजाविमुखमघयुतं रक्ष रक्षेत्यजस्रं
सर्वे लोकाश्श्रयन्ते यमपि सदसि तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ।। ३००

300. "ஸ்வாமி ! மிகவும் பயம் தருவதும், தாண்ட இயலாததும், வருணனின் பாசமும் முதலைகளும்

மறைப்பதுமான ஸம்ஸாரக் கடலில் மூழ்கியவனும் நன்னடைமுறையற்றவனும், மூர்க்கரின் முன் நிற்பவனும், ஏக்கம் மிக்கவனும், உன் திருவடி வழிபாட்டில் முகத்தைத் திருப்பிக் கொள்பவனும், பாபியுமான என்னைக் காப்பீர் ! காப்பீர் !'' என எப்போதும் ஸபையிலுள்ள இவரை எல்லோரும் சென்றடைகின்றனர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यद्यप्यैश्वर्यभाजो विधिहरिमुखरास्सन्ति देवा जगत्यां
तेषां कश्चिद्युगान्ते नहि पुनरपरो रुद्र एको महर्षिः ।
देवो विश्वाधिकोऽग्र्यो भवति विभुरिति प्राहुरश्रान्तवाचः
वेदा यं पञ्चभूतप्रभवलयकरं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ३०१

301. உலகில் ஆளுமை கொண்ட பிரும்மா விஷ்ணு முதலிய தேவர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவரும் யுக முடிவில் இல்லை. ருத்ரர் ஒருவரே மஹர்ஷியாக, தேவராக, உலகைக் கடந்த பெரியோராக, எங்கும் நிற்பவராக உள்ளார் என வேதங்கள் வாய் ஓயாமல் கூறும். ஐந்து பூதங்களுக்கும் உற்பத்தியும் லயமும் செய்கிற அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यस्माच्चन्द्रार्धचूडान्मृदुहसितमुखान्नीलकण्ठात् त्रिणेत्रात्
वेदान्तोद्गीतवृत्ताद्विधिहरिजनकात् विश्वमायाविलासात् ।
वामावामाङ्गभागात् भसित वरतनोः चित्सभेशात् ममैतत्
चेतो नान्यं सुरेन्द्रं स्मरति नटपतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥

302. சந்திரனின் பாதியைத் தரித்தவர், மென்மையுடன் சிரிக்கிற முகமுள்ளவர், நீலக்கழுத்துள்ளவர், முக்கண்ணர், உபநிஷத்தில் உண்மைநிலை விளக்கப்பெறுபவர், பிரும்மாவையும் விஷ்ணுவையும் பெற்றவர், உலகில் பரவிய மாயா விளையாட்டுள்ளவர், மங்கையை இடது புறத்தில் கொண்டவர். விபூதி பூசிய மேனியர், சித்ஸபா நாதர்,

இவரைத்தவிர வேறெவரையும் என் மனம் நினையாது. அந்த நட அரசரை, குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

बाल्ये क्रीडाविमुग्धः पुनरहमभवं यौवने मीनकेतोः
लक्ष्यो लज्जाविहीनः परमुदर भृतौ काकवत्सार्वकालम्।
देशाद्देशादटंस्त्वत्पदयुगजलजं नार्चयं पापयोगात्
सर्वं तत्क्षम्यतामित्ययमहमभजं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥३०३

303. சிறுவயதில் விளையாட்டில் ஆர்வமுள்ளவனாக இருந்தேன். யௌவனத்தில் வெட்கமற்று மன்மதனின் அம்பின் குறியாக, வயிறை நிரப்ப காக்கை போன்று ஊர்ஊராக அலைந்து கொண்டு, உமது திருவடித்தாமரையை பாபம் காரணமாக வழிபடவில்லை. அவை அனைத்தையும் பொறுத்தருள்வீர் என்று இந்த நான் குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

सद्वृत्तां स्रग्धराख्यां विपुलगुणवरालङ्कृतिं मञ्जुपाक-
स्थायीशय्यारसाद्यैर्विबुधपरिबृढाह्लादिरीतिं सुवृत्तिम्।
वेदान्तार्थप्रबोध्रीं सुगुणपदगतिं योऽस्मदीयां स्तुतिं तां
अङ्गीकुर्वन्सुखं मे प्रदिशति गुरु तं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०४

304. ஸ்ரக்தரை என்ற நல்ல விருத்தத்தில் அமைந்ததும் விஸ்தாரமான சிறந்த குணம், நல்ல அலங்காரம், அழகான பாகம், ஸ்தாயிபாவம், சய்யை, ரஸம் முதலிய வித்வான்களை மகிழ்விக்கிற காவிய அமைப்பு கொண்டதும், உபநிஷதக் கருத்துக்களைப் போதிப்பதும், நற்குணமிக்க சொல்லமைப்பு கொண்டதுமான எனது ஸ்துதியை ஏற்று எனக்குப் பெரும் இன்பம் தருகிற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

यश्शम्भुर्नृत्तराण्मे प्रबलतरमहामन्त्रसिद्धिं प्रदत्वा
गुर्वीं योगस्य सिद्धिं जननमृतिहरं चात्मबोधं महान्तम्।
सूतादीनां विमुक्तिप्रदमपि महितं गौरवं पत्रमूलं
स्वं नृत्तं दर्शयित्वा सुखयति नितरां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०५

305. இந்த நடராஜ சிவன், எனக்கு வலிவுமிக்க மஹாமந்திரத்தின் ஸித்தியை அருளி, பெருயோக ஸித்தியையும் மஹத்தான ஆத்மஜ்ஞானத்தையும் தந்தார். சாம்பான் முதலானவருக்கு முக்தியளித்த சிறந்த ஏடு எழுதி எனக்கு அனுப்பியதால் பெருமையையும் அளித்து, தன் தாண்டவத்தைக் காணச் செய்து மிகவும் இன்பமடையச் செய்கிற குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

क्रोशं क्रोशं यदग्रे स्वपतिमपि रतिर्मन्मथं श्रीकुमारं
शार्दूलाङ्घ्रेश्च डिम्भस्सुखतरमभजद्दुग्ध कल्लोलराशिम् ।
स्तावं स्तावं वरेण्यं गगननटपतिं यं च वाचामलक्ष्यं
तोषं तोषं लभन्ते सकलमपि जनाः कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ३०६

306. ரதி தேவி இவர் முன் அழுதழுது தன் பதியான லக்ஷ்மியின் மைந்தனை மன்மதனை உயிருடன் பெற்றாள். வியாக்கிரபாதரின் மைந்தனை உபமன்யு பாற்கடலை சுகமாகப் பெற்றான். வாக்குக்கெட்டாதவரும் சிதாகாசத்தில் நடனமாடுபவரும் விரும்பியதைத் தருபவருமான இவரைத்துதித்துத் துதித்து பெரும் மகிழ்ச்சியைப் பெறுகின்றனர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

मन्दं मन्दं यदीयं जनिम सुरसरिद्धारया व्यासजाथाः
सेकं सेकं विराजो हृदयमधिगतं यत्पदं भावयन्तः ।
कालं कालं दहन्तो दुरधिगमतमः काननं ज्ञानयोगात्
लाभं लाभं प्रबोधं वरसुखमभजन्कुञ्चिताङ्घ्रिं भजेऽहम् ॥ ३०७

307. வியாஸரின் குமாரரான சுகர் முதலானவர்கள், மெள்ள மெள்ள இவரது லிங்கத்தை கங்கை நீரால் நீராட்டி நீராட்டி, விராட் வடிவின் இதயத்தினுள் உள்ள இவரது திருவடியைத் தியானித்துத் தியானித்து ஞானயோகத்தால் எட்ட முடியாத அஞ்ஞானக்காட்டை ஒவ்வொரு பொழுதும் சுட்டெரித்தும், மிக இனிய ஆத்மஜ்ஞானத்தைப் பெற்றனர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

भोजं भोजं यदर्चाजनितमनुपमं भोगमध्यात्मयोगात्
तारं तारं भवाब्धिं विपुलभयकरं यस्य भावात्सुधीन्द्राः।
दाहं दाहं हृदन्तर्गतमतिजरठं पाशवर्गं यदर्णं
जापं जापं रमन्ते परमहसि पदे कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३०८

308. அத்யாத்மயோகத்தால் இவரைப்பூஜை செய்வதால் உண்டான ஒப்பற்ற ஸுகத்தைச் சுவைத்துச் சுவைத்து, இவரது பாவனையால் மிகவும் பயம் தருகிற ஸம்ஸாரக் கடலைத் தாண்டித் தாண்டி, இதயத்திலுள்ள நாட்பட்ட பந்த பாசத்தை சுட்டெரித்து எரித்து, இவரது மந்திரத்தை ஜபித்து ஜபித்து பெருஞ்சோதியான நிலையில் மனம் ஒன்றிநிற்கிறார்கள். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

बोधं बोधं यदीयं नटनमनुपमं श्रौततत्वार्थगर्भं
ध्यायं ध्यायं हृदब्जे यमपि च महसां पुञ्जमव्याजमूर्तिम्।
वाहं वाहं यदङ्घ्रिं मनसि फणितरक्ष्वङ्घ्रि जैमिन्यभिख्याः
प्रापुस्सर्वे सदा यत्सदसि निवसतिं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥

309. பதஞ்சலி வியாக்ரபாதர், ஜைமினி முதலிய முனிவர்கள், ஒப்பற்ற வேதத்தால் விளக்கப்பட்ட தத்துவப் பொருள் பொதிந்த இவரது நடனத்தை உணர்ந்துணர்ந்து, ஒளிக்குவியலான இவரது உருவம் வேறு எதிர்பார்ப்பின்றி இதயத்தில் தோன்றுவதைத் தியானித்துத் தியானித்து, இவரது திருவடியை மனத்தில் சுமந்து சுமந்து, இவரது ஸபையில் எப்போதும் இருக்கும் பேற்றைப் பெற்றனர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

वाचं वाचं महान्तः शिवहरगिरिजाकान्तदेवेतिपूताः
वर्जं वर्जं विवर्ज्यं बहुतरविषमक्लेशमायाविमोहम्।
त्यागं त्यागं कठोरां त्रिविधपरिचयामीषणाख्यां पिशाचीं
ध्यायन्तो यं भजन्ते सततमपि शिवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३१०

310. தூயவரான பெரியோர்கள் சிவ ஹர கிரிஜாகாந்த தேவ என்று கூறிக் கூறி, மிகவும் பலதரப்பட்ட துன்பம் தருகிற

மாயையாலான மயக்கத்தைத் தவிர்த்துத் தவிர்த்து, புத்திரன், செல்வம், லோகம் என்ற மூன்று நாட்டங்களாகிற பிசாசை விலக்கி விலக்கி, இவரைத் தியானித்து இவரை அடைகின்றனர். இந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

धावं धावं सदा यत्प्रियकरनिलयं भूतिरुद्राक्षवर्गैः
भूषं भूषं स्वकीयां तनुमपि चरितं यस्य वेदान्तगीतम्।
कर्णं कर्णं नितान्तं त्रिषवणयजनं ब्रह्मनिष्ठा यतीन्द्राः
कारं कारं लभन्ते भवपदमभवं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३११

311. பிரும்ம நிஷ்டர்களான துறவிகள், அவரது பிரியம் தருகிற க்ஷேத்திரங்களை எப்போதும் ஓடி ஓடிச் சென்று, விபூதி ருத்ராக்ஷங்களைத் தன் உடலில் அணிந்தணிந்து, உபநிஷத்துகளில் பாடப்பெற்ற அவரது சரிதத்தைக் கேட்டுக் கேட்டு, முக்காலமும் வேள்வி புரிந்து புரிந்து பயமற்ற அவரது திருவடிகளை அடைகின்றனர். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

नामं नामं सदा यं नटपतिमलभं सत्कलत्रं सुपुत्रं
पाठं पाठं यदग्रेऽप्यकृतकवचनान्यापमञ्जा कटाक्षम्।
वारं वारं विभुं यं हविरहमददां सप्ततन्तुष्वचिन्त्यं
नित्यं नित्यं प्रपद्ये शरणमसुलभं कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३१२

312. நான் (உமாபதி சிவாசாரியர்) எப்போதும் நடராஜரை வணங்கி வணங்கி நல்லமனைவியையும் நல்ல பிள்ளையையும் பெற்றேன். அவரது முன்னிலையில் வேத வாக்யங்களைப் படித்துப்படித்து லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றேன். ஸப்ததந்து யாகங்களில் அடிக்கடி எண்ணத்திற்கப்பாற்பட்ட எங்கும் நிறைந்த அவருக்கு ஹவிஸ் அளித்தேன். எளிதில் கிட்டாத அவரை தினந்தினமும் சரணடைகிறேன். அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

श्रावं श्रावं श्रुतिभ्यां यदमल चरितं यत्पदाम्भोजमाध्वीं
पायं पायं सभायां मम च रसनया यं प्रभुं मानसेन।
स्मारं स्मारं प्रसन्नं श्रुतिशिखरगतं भुक्तिमुक्तिप्रदं यं
दर्शं दर्शं प्रबुद्धोऽस्म्यतनुबुधदृशा कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥ ३१३

313. வேதங்களிலிருந்து அவரது தூய சரிதத்தைக் கேட்டுக் கேட்டு, அவரது திருவடித்தாமரை நீரை ஸபையில் நாக்கால் பருகிப் பருகி, மனத்தால் அருள்புரிகிற அவரை நினைத்து நினைத்து, உபநிஷத்தில் விளக்கப்பட்டுள்ள புத்தியும் முக்தியும் தருகிற அவரைக் கண்டு கண்டு, பெரிய ஞானநோக்குடன் பேரறிவாளனாகியுள்ளேன். . அந்த குஞ்சிதபாதரை வழிபடுகிறேன்.

एतत्स्तोत्रं पठन्ति प्रतिदिनमसकृद्ये ममोमापतेर्वा-
गुद्भूतं चित्सभायां विरचित परमानान्दनृत्तस्य शम्भोः।
अग्रे लब्ध्वाऽखिलेष्टानिह तनयकलत्रादिमानात्मयज्ञाद्
अन्ते कैवल्यसंज्ञं पदमपि मनुजास्संलभन्तां नितान्तम्॥ ३१४

314. உமாபதியான எனது வாக்கிலிருந்து வெளியான சித்ஸபையில் பரமானந்த நடனமாடிய சம்புவின் ஸ்தோத்திரத்தைப் படிக்கிற மாந்தர் மக்கள் மனைவி முதலிய விரும்பியதனைத்தையும் பெற்று, ஆத்மயஜ்ஞமான இறுதியை அடைந்து. கைவல்யம் என்ற நிலையையும் முழுவதுமாகப் பெறட்டும்.

उमापतिर्नाम वनाश्रमोऽहं त्रयोदशाधिक्यशतत्रयान्वितम्।
श्रीकुञ्चिताङ्घ्रिस्तवराजमुक्त्वा साक्षादपश्यं नटनं सभापतेः॥ ३१५

315. உமாபதி என்ற வானப் பிரஸ்தராகிய நான் முன்னூற்றுப் பதிமூன்று சுலோகங்களடங்கிய ஸ்ரீ குஞ்சிதாங்க்ரிஸ்தவத்தை இயற்றியதும் ஸபாபதியின் நடனத்தை நேரிடையாகக் கண்டேன்.

★ ★ ★

उमापतिशिवप्रणीता

॥ श्रीनटेश्वरदण्डकस्तुतिः ॥

ஸ்ரீ நடேச்வர தண்டகம்

ஸ்ரீஉமாபதி சிவாசார்யர் இயற்றியது

यत्क्षेत्रे जननात् स्थितेश्च विलयात् आवृत्तिहीनं पदं
यत्तीर्थांबुनिषेवणाददतितरां साम्यं विधेर्मानवः ।
यन्मूर्तेरवलोकनादपि सकृत्प्राप्नोति धामाभयं
तं नत्वाहमुमापतिर्नटपतिं गद्योक्तिभंग्या श्रये ॥ (१)

எவரது க்ஷேத்திரத்தில் பிறப்பதாலும் வசிப்பதாலும் மறைவதாலும் மறுபிறப்பற்ற நிலையையும் எவரது தீர்த்தங்களில் நீராடலால் மனிதன் பிரும்மாவிற்கு ஸம நிலையையும், எவரது வடிவை ஒரு தடவை காண்பதால் பிறப்பிறப்பு பயமற்ற பிரும்ம நிலையையும் பெறுகிறனோ, அந்த உமையின் கணவரான நடராஜரை வணங்கி உரை நடையால் அவரைச் சரணடைகிறேன்(1)

अश्वीकृताश्वीकृत वेदराशिः
अस्त्रीकृतास्त्रीकृतदानवारिः ।
अङ्गीकृताङ्गीकृतशम्बरारिः
पायात्स नो देवतसार्वभौमः ॥ (२)

திரிபுரஸம்ஹாரத்திற்காக குதிரைகளாக்கிய வேதங்களைப் (போரில்) பயன்படுத்தாதவரும். அஸ்திரமாக்கிய விஷ்ணுவைச் செலுத்தாத வரும் மன்மதனை முக்யமான ஸ்தூல சரீரமின்றி அங்கமான ஸூக்ஷ்ம சரீரத்தையே அங்கியாக- முக்கிய உடலாக்கிக் கொள்ளச் செய்தவருமான அந்த தேவர்களின் பேரரசர் நம்மைக் காப்பாற்றட்டும். (2)

अस्ति खलु अनेककोटिब्रह्माण्ड-मध्यभवदण्डभित्त्यधः प्रदेशव्यापकः, दुग्धसिन्धुमथनमन्थानमन्दरगिरिभारवहननिपुणेन आदिकमठेनाराध्यमानः-(३)

அனேககோடி பிரும்ஹாண்டங்களின் இடையே அமைந்துள்ள அண்டச்சுவற்றின் கீழ்த்தலத்தில் பரந்துள்ளதும், பாற்கடலைக் கடைவதற்கான மத்தாகிய மந்தரமலையின் சுமையைச் சுமப்பதில் தேர்ந்த ஆதிகூர்மத்தால் ஆராதிக்கப்பெறுவதும் (3)

तदुपरि कोटियोजनप्रमाणभवनमध्यस्थ-सहस्र-योजनोन्नत-तद्द्विगुणविशाल-सिंहासनस्थितेन दशकोट्यनुचर- परिवृत-स्वसमानैकादशरुद्रवर्यसमावृतेन किरीट-कुण्डल-हार-केयूराद्याभरण-रुद्राक्ष-भूतिभूषितेन खड्गखेटक-कोदण्ड-बाण-परिमण्डितबाहुदण्डेन पञ्चदशकोटियोजन-दूरव्यापिज्वालाधूम-पर्यस्तपर्यन्तेन वरकलेबरेण प्रभुणा कालाग्निरुद्रेणाप्यनुदिनमर्च्य-मानः, (४)

அதன்மேல் கோடியோசனை அளவுள்ள மாளிகையின் நடுவிலுள்ளதும் ஆயிரம் யோசனை உயரமுள்ளதும் இருமடங்கு பரப்புள்ளதுமான ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தவரும் பத்து கோடி பரிவாரங்களால் சூழப்பெற்ற தன்னையொத்த பதினொரு ருத்ரர்களால் சூழப்பெற்றவரும் கிரீடம் குண்டலம் ஹாரம் தோள்வளை முதலிய நகைகளாலும் ருத்ராக்ஷத்தாலும் விபூதியாலும் அலங்கரிக்கப்பெற்றவரும், கத்தி கேடயம் வில் அம்பு இவற்றால் அழகுற்ற தடிபோன்று நீண்ட கைகள் உள்ளவரும் பதினைந்து கோடி யோசனை தூரம் பரவுகின்ற அனலும் புகையும் சூழ்ந்த சுற்றுப்புறமுள்ளவரும், அழகிய உடல் அமைப்புள்ளவரும் பேராளுமை பெற்றவருமான காலாக்னிருத்ரரால் அர்ச்சிக்கப் பெறுவதும், (4)

ततश्चोपर्युपरि क्रमेणानेकगणेन्द्रयुक्त-कूश्माण्डाख्य-महाभैरवेण पातालतलनिवासासुरनागरक्षोभिः नाना विधशरीरभेद-नानाकोटिगणसहित-हाटकेशेन मणिमयकाण्ड धगध्धगित-धवलचामरोपचारसमाहृत-वरशुण्डाभृदैरावत-पुण्डरीक-वामन-कुमुदांजन-पुष्पदन्त-सार्वभौम-सुप्रतीकसमाह्वयाष्टदिग्महा शुण्डालैः वासुकि-तक्षक- कार्कोटक - शंख - गुलिक - कम्बलाश्वतर - धृतराष्ट्रादिमहोरग - कोटिसंवृत - भूभारवहनचण - सर्पसार्वभौम-श्रीमदादिशेषेण चापि संसेव्यमानः- (५)

அதன் மேல், மேல் வரிசையாக பல சிறந்த கணங்களுடன்கூடிய கூச்மாண்டர் என்ற மஹாபைரவராலும் பாதாளத்தில் வசிக்கின்ற அஸுரர் நாகர் மற்றும் ராக்ஷஸர்களாலும் பலவகைப்பட்ட உடலமைப்பு கொண்ட பல கோடிகணங்களுடன் கூடிய ஹாடகேசராலும். ரத்னமயமான கைப்பிடியால் தக தக என ஒளிர்கின்ற வெண் சாமரத்தாலான உபசாரத்தை ஏற்ற சிறந்த துதிக்கையுள்ள ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்ஜனம், புஷ்பதந்தம், ஸார்வபௌமம், ஸுப்ரதீகம், என்ற பெயருள்ள எட்டுதிக்கஜங்களாலும் வாஸுகி, தக்ஷகன், கார்கோடகன், சங்கன், குளிகன், கம்பளன், அச்வதரன், திருதராஷ்டிரன் முதலிய கோடிக்கணக்கான மஹாநாகர்களாலும் சூழ்ந்தவரும் பூமியின் சுமையைச் சுமப்பதில் தேர்ந்தவரும், ஸர்ப்பராஜாவுமான ஸ்ரீ ஆதிசேஷனாலும் ஸேவிக்கப்பெறுவதும் (5)

लवणेक्षु-सुरासर्पिर्दधि-क्षीरोदकाख्यसप्तार्णवैः, जम्बू - शौनक - कुश-क्रौञ्च-शाल्मली-गोमेदक-पुष्कराख्य सप्तद्वीपैः, महेन्द्र - मलय- सह्य-शुक्तिमदृक्ष-विन्ध्य - पारियात्राख्यसप्त-कुलाचलैश्च परिवृतायाः-, कुरु-हिरण्य - रम्य - भद्राश्व - भारत - किम्पुरुष - हरि - केतुमालेलावृताख्य - नवखण्डविभक्त -

पञ्चाशत्कोटियोजनसमचतुरश्रविस्तृतायाः वसुंधरायाः हृदयसरसीरुहकर्णिकाकारभूतः-, मेरुमन्दर-कैलासात्मक पश्चिमोत्तर दक्षिणशिखरत्रय विराजमानः-, निखिलप्रपञ्च विलयमहाप्रलयान्तरेष्वपि यथावद्वर्तमानः- त्रिकूटगिरिर्नाम महान् पर्वतोत्तमः। (६)

லவண ஸமுத்திரம், கரும்புக்கடல், ஸுரா(கள்) கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், சுத்தநீர்க்கடல், என்ற ஏழு கடல்களாலும் ஜம்பூ, சௌனகம், குசம், க்ரௌஞ்சம், சால்மலீ, கோமேதகம், புஷ்கரம் என்ற ஏழு தீவுகளாலும், மஹேந்திரம், மலயம், ஸஹ்யம், சுக்திமான், ருக்ஷம், விந்தியம், பாரியாத்ரம் என்ற ஏழு குலபர்வதங்களாலும் சூழப்பட்டதும், குரு, ஹிரண்யம், ரம்யகம், பத்ராச்வம், பாரதம், கிம்புருஷம், ஹரி, கேதுமாலம், இலாவ்ருதம் என்ற ஒன்பது கண்டங்களாகப் பிரிந்ததுமான ஐம்பது கோடியோஜனையளவில் சமச்சதுரமாக விரிந்த பூமியின் இதயத் தாமரையின் மொக்கு போன்றதும் மேரு, மந்தரம், கைலாஸம் என்று மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் அமைந்த மூன்று சிகரங்களால் அழகுற விளங்குவதும் அனைத்து உலகத்தின் பிரளயத்திலும் மஹாப்ரளயத்திலும் இடையிலும் அப்படியே மாறுபடாமல் இருப்பதுமான திரிகூடமலை என்ற பெருமலை உள்ளது. (6)

तत्र हि सह्याद्रिप्रवहत्सलिलपूरपूरितयोः- गोलामणि धगद्धगितमहारजतपुलिनराजीविराजितयोः शिवक्षेत्रानेकमण्डितो भयतटयोः निमज्जनात् सर्वपापापनोदनचणयोः उभयपार्श्वतः पूर्वाभिमुखेन प्रवाहात् मालायितयोः- श्रीनूपुर - मणिमुक्ताख्य महानद्योरभ्यंतरे, (७)

அங்கு ஸஹ்ய மலையிலிருந்து பெருகுகிற நீர்வெள்ளத்தால் நிரம்பியவையும் பந்து போன்ற பெரும் சிவப்பு ரத்தின ஒளியால் தக தக என ஒளிர்கின்ற பெரும்

தங்கமணல் பரப்பால் அழகானவையும், பல சிவ க்ஷேத்திரங்கள் அடர்ந்த இருகரைகளுள்ளவையும், நீராடுவதால் எல்லாபாபங்களையும் போக்குவதில் தேர்ந்தவையும் இருபுறங்களிலும் கிழக்கு நோக்கிப் பெருகுவதால் மாலை போன்று அமைந்துள்ளவையுமான ஸ்ரீ நூபுரம் (கொள்ளிடம்) மணிமுக்தா (மணிமுத்தாறு) என்ற இரு நதிகளினிடையே (7)

ब्रह्महत्यादि- महापातक - ध्वंसनविचक्षण - शिवगङ्गा - गुह्य-व्याघ्र - यौवनानंतनाग - ब्रह्मचामुण्डिका - दुग्धार्णव - परमानन्दकूपाद्यनेक तीर्थसमावृते (८)

பிரும்மஹத்தி முதலிய பெரும் பாபங்களை நீக்குவதில் திறமைமிக்க சிவகங்கை, புலிமடு, இளமை நாயனார் தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகதீர்த்தம், பிரும்ம சாமுண்டிகா தீர்த்தம், பாற்கடல், பரமானந்த கூபம், முதலிய அனேக தீர்த்தங்களால் சூழ்ந்ததும். (8)

गगनतलातिशयित - शाखानिरन्तरनिवासवलाहकसंघ संघट्टनजात - धारासंपातसन्ततकन्दलित - सर्वर्तुकुसुमफलरस परिशोभित - वटपटकटोभट - कुटजाश्वत्थ - कपित्थ - चांपेय - ताल - तमाल - हिन्ताल - साल - रसालोद्दाल - कुद्दालोद्दालक - कोलांकोल - पाटलदेवताल - कंदाराल - वकुलनिचुल - विदल - विधुल - सरल - महिल - मधुष्ठीलक - मधूलक - मधुवर्णक - सुवर्णक - सुपार्श्वक - सप्तपर्णक - पंचवर्ण - वारुण - सहकार - सिंधुवार - नारिकेर - खदिर - विट्खदिर - खर्जूर - कर्णिकार - नागकेसर - पुन्नाग-नारङ्ग - नागलिङ्ग - लिकुचासनार्जुन - शोभांजन - शिरीष - कदम्ब - निम्ब - तिन्त्रिणी-क्रमुक - लवङ्ग- रम्भा- कुरवक - कुन्द - माकन्द - मंदार - पारिजात - संतान - हरिचन्दन - वाजिगुह्य - देवदारु - श्रीबिल्व - तिल्व -

जातीवृक्षादिद्रुमकुलनिबद्ध-मनोहरतमोद्यान - विद्योतमानैला पिप्पली - ताम्बूलिका - माधवी - मागधी - मालती - मल्लिका - गणिका - लोमरत्न - कल्पकाद्यनेक लतापरि वेष्टित नानाविधाराम विराजमाने (९)

வானை எட்டுகின்ற கிளைகளில் எப்போதும் உறைகின்ற மேகக் கூட்டங்களின் உரசலால் விழுகின்ற நீர்த்தாரைகளால் எப்போதும் பூத்துக்காய்த்துக் குலுங்குபவையும் எல்லா ருதுக்களிலும் பூத்துக் காய்த்து அழகியவையுமான ஆல், முரள், வேழல், வெப்பாலை, அரசு, விளா, சம்பகம், பனை, பச்சிலைமரம், ஈந்தல், பனை, பைன், ஒட்டுமா, நருவிளி, மலையகத்தி, வாகை, இலந்தை, அழிஞ்சில், பாதிரி, காட்டுப்பீச்சில், குங்கில்யம், மகிழம், நீர்கடம்பு, கொன்னை, ஸரளதேவதாரு, அரேணுகம், இலுப்பை, நீரிலுப்பை, நீர்க்கடம்பு, செஞ்சந்தனம், கல்லால், ஏழிலம்பாலை, கோர்க்கப்புளி, கருகு, மா, நொச்சி, தென்னை, கருங்காலி, வெண்காலி, பேரீச்சை, சிறு கொன்னை, சிறுநாகம், புன்னாகம், நார்த்தை, நாகலிங்கம், எலுமிச்சை, வேங்கை, மருது, கருமுருங்கை, வாகை, கடம்பு, வேம்பு, புளி, பாக்கு, லவங்கம், வாழை, மருதோன்றி, முல்லை, ரஸாளுமா, மந்தாரம், பாரிஜாதம், வெண்காலி, மஞ்சள் சந்தனம், அமுக்கரா, தேவதாரு, பில்வம், தில்லை, ஜாதி முதலிய மரங்கள் அடர்ந்த மனத்தைக் கவர்கிற தோட்டங்களாலும் ஏலம், வெற்றிலை, மல்லி, திப்பிலி, பிச்சகமல்லி, கணிகாரி, மயிர் மாணிக்கம் கற்பகம் முதலிய பல கொடிகள் சுற்றிய பல தோட்டங்களாலும் விளங்குவதும். (9)

कनकवालुकातीरप्रदेश स्फटिकमणिशिलाबद्धसोपान निकर - कपटबहुलतरमिहिरहिमकरकरनिकरसमुदय - सन्ततविकसित - कमल - कल्हार - कुमुद - कुवलय - हल्लक - रक्तोत्पल - नीलोत्पल - पुण्डरीकादि सुमपरिमल भरितानेक -

नदीनदवापीकूपतटाकसरित्सलिल - कलकल्लोलाभिवर्धिताखिल सस्यमण्डलमण्डिते - (१०)

தங்கமணலாலான கரைகளில் ஸ்படிகக்கல்லாலான படிக்கட்டுக்கள் அமைந்ததும் ஏமாற்றுகிற ஸூர்யசந்திர கிரணங்களின் குவியலால் மலர்ந்த தாமரை, வெண்ணிற ஆம்பல், ஆம்பல், அல்லி, செவ்வல்லி, நீல அல்லி, வெண்தாமரை முதலிய மலர்களின் மணம் நிரம்பிய பல நதிகள், நதங்கள் (மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகள்), வாபிகள், கிணறுகள், குளங்கள், ஓடைகள் இவற்றின் கல கலவென ஓடுகிற நீர்பாய்ச்சலால் விளைந்த எல்லாப்பயிர்களும் மண்டிக்கிடப்பதும் (10).

गजतुरग - पशु - धनधान्य - भूषणाम्बर - दाससदासी- समृद्धि - समेधित - बुधबृहस्पतिसम विद्यापटुतरबुद्धियुक्त निजनिज वर्णाश्रमोचितधर्मालङ्कर्मीणचातुर्वर्ण्यजनसमूहाभिरामे सुरामे - (११)

யானை, குதிரை, பசு, தனம், தான்யம், ஆபரணம், ஆடை, தாஸர்கள், தாஸிகள், இவர்களின் செழிப்பால் வளர்ச்சி பெற்றதும் புதனையும் பிருஹஸ்பதியையும் ஒப்பக்கல்வியில் மிகத் தேர்ந்த பேரறிவாளார்களும் தம் தம் வர்ணத்திற்கும் ஆசிரமத்திற்கும் ஏற்பக் கடமைகளை முழு அளவில் முறைப்படி செய்து வந்தவர்களுமான நான்கு வர்ணத்துமக்கள் தொகையால் அழகியதும் (11.)

नानाविधकवाट तोरणचित्रगवाक्षोपलक्षित - मुक्तासरघटित - वितानोपशोभित - शातकुम्भदीपस्तम्भसुभासित - हंसतूलिकासुमतल्प-महोपधान - गण्डुकचतुष्टय - मणिगण - खचित - पर्यङ्कसुखशायित - कामरतीसम - क्रीडाविनोदन - युव युवतीजन - निबिडितान्तःपुरेन्दु कान्तमयोटज - गृहसौधराजी - राजित - विक्रयिक - क्रायिक - जनसंसर्ग - विपणिकाशतरम्य - वीथिकाशत समन्विते (१२)-

பலவகை கதவு, தோரணம் விசித்திர ஜன்னல்கள் அமைந்து, முத்துச்சரங்கள் கட்டி, மேல் கட்டிகளால் அழகுற்று, தங்க தீபத்தூண்களால் ஒளிர்கிறவாறு, அன்னப்பறவைகளின் இறகுகளாலான மெத்தை விரித்து மலர்கள் பரப்பி பெரும் தலையணைகளும் நான்கு திண்டுகளும் கொண்ட ரத்தினம் இழைத்த கட்டில்களில் படுத்து உறங்குகிற மன்மதனையும் ரதியையும் ஒப்ப கேளிக்கைகளில் ஈடுபட்ட யுவ - யுவதிகள் நெருங்கியுள்ள அந்தப்புரமும், சந்திரகாந்தக் கற்கள் இழைத்த கொடி வீடுகளும் மாளிகைகளும் வரிசை வரிசையாக அமைந்ததும், விற்பவரும் வாங்குபவருமான மக்கள் கூடுகின்ற நூற்றுக்கணக்கான கடைவரிசைகளால் விளங்குகிற நூற்றுக் கணக்கான வீதிகள் கொண்டதும். (12)

नित्यं प्रातः स्नान - सन्ध्यावन्दन - गर्भाधान - पुंसवन - सीमन्तोन्नयन - जातकर्म - नामकरणोपनिष्क्रामणान्नप्राशन - कर्णविधन - चौलोपनयन - समिदाधान - वेदाध्ययन - चतुर्व्रत - समा वर्तन - विवाहौपासन - वैश्वदेव - ब्रह्मयज्ञ - कृच्छ्रचान्द्रायण - पार्वणाष्टका - मन्वादि - पैतृकश्राद्ध - सर्पेशानबल्यायुष्यापमृत्यु - नक्षत्रहोम - नवग्रहमख - त्रिकालशिवपूजादिसत्कर्मनिरतैः, (१३)

தினமும் காலையும் மாலையும் ஸந்தியாவந்தனம், கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தோன்னயனம், ஜாதகர்மம், நாமகரணம், வீட்டிற்கு வெளியே சிசுவைக் கொணர்தல், அன்னப்பிராசனம், காது குத்தல், சௌளம், உபநயனம், ஸமிதாதானம், வேதமோதுதல், வேதமோதுவதற்கான நான்கு விரதங்கள், விரதங்களை முடித்தல், விவாஹம், ஔபாஸனம், வைச்வதேவம், பிரும்மயஜ்ஞம், கிருச்சிரங்கள், சாந்திராயண விரதம், பார்வணம், அஷ்டகை, மன்வாதி, பித்ருச்ராத்தங்கள், ஸர்பபலி, ஈசான பலி ஆயுஷ்ய ஹோமம், அப மிருத்யுஞ்ஜய

ஹோமம், நக்ஷத்ரஹோமம், நவக்ரஹ சாந்தி, முக்காலமும் சிவபூஜை முதலிய நற்கருமங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றவர்களும் (13)

अनवरतमाधेयाग्निहोत्र - दर्श पूर्णमास - चातुर्मास्य - निरूढपशुबंध - सौत्रामण्यग्निष्टोमात्यग्निष्टोमोक्थ्य - षोडश्यतिरात्र - वाजपेयाप्तोर्याम - पौण्डरीक - महाव्रत - साग्निचयन - सर्वतोमुखादिमहाध्वर - दीक्षामहोत्सवसमयोद्यताध्वर्यवौद्गात्र हौत्रब्राह्म निजनिजाधिकारनिरत- निपुणार्त्विङ्मुखोच्चार्यमाण मन्त्रनिवहपूत - वपाहोमपरिमलपरिमिलित - धूमरेखा सरससमाहूत - पुरुहूतपुरस्सर - निजहविर्भागभोगलम्पट - निलिम्पगण - स्पृहणीय - हव्यदिव्यान्न - रंजनव्यंजन - सूपापूप - लेह्यचोष्य - पेयखाद्य - रसायन - सघृतगुडपायस - पयोदधि - सपक्व - नानाफलोपहार - मृष्टान्नभोजन - सदक्षिणताम्बूल - सन्तुष्टाशेषजन-सम्प्रयुक्ताशीर्वचननिकरैः, वेदवेदाङ्गादि - चतुष्षष्टिकलाप्रावीण्य - शिवातिवादा णिमाद्यष्टसिद्धिप्रचार - स्वतन्त्रकुशलैः, सुकलत्र - पुत्र - दुहितृ - बन्धुमित्र - सुशिष्यपरिजनसमेतैः, १४

ஓயாது, அக்னி ஆதானம், அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், சாதுர்மாஸ்யம், நிரூடபசுபந்தம், ஸௌத்ராமணி, அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடசீ, அதிராத்ரம், வாஜபேயம், அப்தோர்யாமம், பௌண்டரீகம், மஹாவிரதம் அக்னிசயனம், ஸர்வதோமுகம் முதலிய பெரும் வேள்விகளில் தீக்ஷை பெற்று பெரும் உற்சவங்களின் போது அத்வர்யு, உத்காதா, ஹோதா, பிரும்ஹா என்ற நால்வரின் பணிகளில் தன் தன் பொறுப்பை நேர்மையுடன் நிர்வகிக்கிற ருத்விக்குகளின் வாய்களிலிருந்து வெளியாகிற மந்திரங்களால் தூய்மை பெற்ற வபையின் ஹோமத்தின்

மணம் கலந்த புகைக்கோட்டால் இனிது கூப்பிடப்பெற்று தன் தன் ஹவிர்ப்பாகத்தைப் பெற்றனுபவிப்பதில் ஆர்வமிக்க இந்திரன் முதலான தேவர்கள் விரும்புகிற ஹோமப் பொருள், தேவத்தன்மைமிக்க அன்னம், வியஞ்ஜனம், பருப்பு, அப்பம், நக்கிச்சாப்பிடக்கூடியது. உருஞ்சிச்சாப்பிடக் கூடியது, பருகக்கூடியது, மென்று சாப்பிடக் கூடியது, உடலிற்கு வலி வுதரக் கூடியது என்றவாறு நெய் வெல்லம் பாலாலானதும், பால், தயிர், இவற்ருல் பக்வமானதும் பலவகைப்பழங்கள் கலந்ததும் தூயதும் வயிறுநிரம்புவதுமான உணவும் தக்ஷிணையுடன் கூடிய தாம்பூலம் இவற்ருல் மகிழ்ந்து எல்லா நன்மக்களையும் வாழ்த்துபவர்களும் வேதம், வேதாங்கங்கள், 64 கலைகள் இவற்றில் தேர்ச்சியும், சிவனின் பெருமை விளக்கமும், அணிமா முதலிய எட்டு ஸித்திகளைக் காட்டுவதும் எளிதில் பெற்றுத் தன் விருப்பப்படி செயல்புரிபவர்களும் நல்ல மனைவி, மகன், மகள், உற்ருர், உறவினர், நண்பர், நல்ல சீடர்கள், பரிவாரங்கள் இவர்களுடன் கூடியவர்களும் 14

श्रीचित्संसत्प्रभु - शीर्षोत्तंसकार्धेन्दुकला - सुधामण्ड - पिण्डीकृत - विटङ्कस्फाटिकलिङ्गस्य अन्तर्वेदिक्षेत्र-मध्या नुष्ठित - शतधृतियज्ञ - सदस्सदस्याभ्यवहार - समकालसमालब्धाग्निप्रभव - ज्योतिर्मय - रत्नसभाधिनाथ - प्रतिकृतेश्च नित्य वरिवस्यया, विमलीकृत - स्वान्तान्तरङ्गैः षडाधारयोग - निष्णातैः (१५)

சித்ஸபா நாதனின் தலையணியான பாதிச்சந்திர கலையின் அமுதக்குழம்பால் உருட்டி அமைக்கப்பெற்ற விடங்கரது ஸ்படிகலிங்கத்திற்கும் அந்தர் வேதிக்ஷேத்ரத்தின் நடுவில் அநுஷ்டிக்கப்பெற்ற இந்திரயாகத்தின் அரங்கில் கலந்து கொள்பவர்களது பேச்சினிடையே தோன்றிய நெருப்பிலிருந்து உண்டான ஒளிமயமான ரத்னஸபாபதிக்கும் தினசரி வழிபாட்டால் தெளிந்த உள்ளம் கொண்டவர்களும் ஆறு ஆதாரங்களிலும் குண்டலினியை நிறுத்துவதில் தேர்ந்தவர்களும். (15)

हिरण्यवर्मनृपतिना चतुराननयज्ञवाटात् त्रिसहस्ररथया-नानीतैः, सचकितनृपशङ्कानुनुत्सुना श्रीशिवेनैव "अमी ममांशभूता मूर्तयः, अफालाक्षेन्दुजटाललनावामभागाः-" इति पुरा शिलादतनयं प्रतीव, अशरीर्या वाण्या समक्षं मुनीनां - "अहमस्म्येकः अमीषां त्रिसाहस्रसंख्या संख्यातिपूरकः" इति पुरा जातुचित् कमलालये च - "श्रीमत्तिल्लवनीभूष्णुः द्विजकिङ्करकिङ्करः अस्मि" इत्यारभ्य "निस्सीममाहात्म्यान् स्तुहि मत्परान्" इति स्वप्रतिबिम्बभूत - सुन्दरभक्तभक्तमालिकाश्रीगानादौ च सप्रेमातिशयं प्रशंसितैः, मणिवचनसम्बन्धातिशयोक्ति - श्रीवाचकगाना लङ्कृतिभिः, श्रीचित्सभेश्वरचरणारविन्द - सन्ततपूजासाम्राज्यानन्दानुभवैः, श्रीमत् त्रिसहस्रमुनीश्वरैः दीक्षितैः निरन्तरं निवसिते (१६)

ஹிரண்யவர்ம அரசனால் பிரும்மாவின் வேள்வி மேடையிலிருந்து மூவாயிரம் தேர்களில் அழைத்துவரப்பெற்றவர்களும், கலவரம் கொண்ட அரசனது ஐயத்தைப் போக்க விரும்பிய சிவபெருமானால், "இவர்கள் என் அம்சமூர்த்திகள் - ஆனால் நெற்றிக்கண், சந்திரன், சடை, இடது பாகத்தில் பார்வதி என்ற அம்சங்கள் அற்றவர்கள்" என முன் நந்திக்கு அறிவித்தது போல், அசரீரிவாக்கால் முனிவர்களுக்கு எதிரில் "மூவாயிரம் என்ற இவர்களின் எண்ணிக்கையை நிரப்ப நானும் ஒருவன்" என்றும், முன் ஒரு சமயம் கமலாலயத்தில் தில்லைக்காட்டில் அந்தணர்களின் அடியாருக்கும் அடியேன் "என்று கூறியபடி" எல்லையற்ற பெருமையுள்ள என்னையே பரதெய்வமாகக் கொண்ட இவர்களைத் துதிப்பாய்" என அறிமுகப்படுத்தப் பட்டவர்களும், சிவபெருமானது பிரதிபிம்பமான ஸுந்தரரென்ற பக்தரால் திருத்தொண்டர் புராணத்தின் தொடக்கத்திலும் அன்புமிக்கவாறு புகழப் பெற்றவர்களும், மணிவாசகர், ஸம்பந்தர் இவர்களின் அதிசயமிக்க திருவாசகத்

தேவாரப்பாட்டுகளில் பாராட்டப் பெற்றவர்களும், சித்ஸபேசரின் திருவடித்தாமரைகளை எப்போதும் ஆராதிப்பதான ஸாம்ராஜ்யத்தின் ஆனந்த அனுபவம் கூடியவர்களும் மூவாயிர முனிவர்களுமான தீக்ஷிதர்கள் எப்போதும் வசிக்குமிடமானதும், (16)

अंगाद्यखिलावनीश - मणिमकुटोपलालितपदेन, मनु - पञ्चमलेखेन्द्रविक्रमभूपजातेन श्रीमच्चित्सभेश्वरसेवासमायात - समकालव्याघ्रपादसमाज्ञात - शिवगङ्गासरः स्नान निर्मुक्त - सैंहत्वग्रोगाविर्भूत - तप्तजाम्बूनदसदृक्षाकार - शौर्यौदार्य - सकल-गुणगणाभिरामेण कनकवर्माख्यमहाराजेन परिपालिते (१७)

அங்கம் முதலிய தேசத்தரசர்களது ரத்தின கிரீடங்களால் வருடப்பட்ட திருவடி உடையவனும் மனுவிடமிருந்து ஐந்தாமவரான அமரேந்திர விக்ரம பூபதி அரசனின் புதல்வனும் சீருடைய சித்ஸபேசனின் ஸேவைக்காக வந்தபோது அங்கு வந்த வியாக்ரபாதரின் அனுமதியுடன் சிவகங்கை ஓடையில் நீராடலால் சிங்கத்தோல் நோயிலிருந்து விடுபட்டு தங்கம் போன்று ஒளிர்கிறவனும் சௌரியம், பெருந்தன்மை முதலிய சிறந்த குணங்களால் சிறப்புற்றவனுமான கனகவர்ம மஹாராஜனால் காக்கப்பெற்றதும் (17)

मेरुमन्दरकेदार - काशीकालहस्ती - काञ्ची-वटकानन - शोणाचल - वृद्धाचल - कमलालय - मध्यार्जुन - पंचनदी - जम्बुकेश - हालास्यगोकर्ण - रामसेतुप्रमुखाखिलक्षेत्रोत्तमे, (१८)

மேரு, மந்தரம், கேதாரம், காசி, காள ஹஸ்தி, காஞ்சி, ஆலங்காடு, அருணாசலம், விருத்தாசலம், கமலாலயம், திருவிடை மருதூர், திருவையாறு, திருவானைக்கா, மதுரை, கோகர்ணம், ராமஸேது, முதலிய எல்லா க்ஷேத்திரங்களைவிடச் சிறந்ததும். 18

वेदवेदान्तागम - स्मृतीतिहासपुराणादि - प्रसिद्ध - पुण्डरीकाभिधाने नामोच्चारणमात्रात् मुक्तिप्रदे निवासात् सकलवरदानैकनिरते, श्रीमति महति चिदम्बराभिधाने पुरवरे (१९)

வேதம் வேதாந்தம் ஆகமம், ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம் முதலியவற்றில் பிரஸித்தமான புண்டரீகம் என்ற பெயர் பெற்றதும், பெயரை உச்சரித்த உடனேயே முக்தியளிப்பதும் வசிப்பதால் விரும்பியதனைத்தையும் தர முன் நிற்பதும், சீருள்ளதும், மிகப்பெரிதுமான சிதம்பரம் என்ற சிறந்த புரத்தில் (19)

श्रीमद्विराड्हृदय कमलविलसितं आधारशक्तिप्रमुख - नानाधिष्ठान - शक्तिबृन्द - समधिष्ठिताधिष्ठानोपशोभितं गारुडमणिघटितागारोपान - जकारपद्म - झकारकुमुद - ठकार कम्प - पाकारकण्ठ - साकारकम्प - हकारपट्टिका - ह्रींकारपद्म - अकारमध्यकूट - आकारदाम - लकारपद्म - हकारपालिका - पटतालिका - सकारफलकपोतिका - रेफमयोत्तर - ह्रींकार पद्मकपंचाक्षरकलात्मक कपोतक - प्रणवह्रींकारहंसात्मक कूटागारादिनानावयवप्रविलसितं - (२१)

